இன்றைய [illegible]

மீனாட்சி சுந்தரனார் (தெ.பொ)

0,31,1BE
C
W6L

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

# வள்ளுவரும் மகளிரும்

சர்வோதய இலக்கியப் பண்ணை

மதுரை-625 001

1978

நான்காம் பதிப்பு: தெ. பொ. மீ. வெள்ளிவிழா வெளியீடு
(ஸ்டார் பிரசுரம்) 1962

ஐந்தாம்பதிப்பு : சர்வோதய இலக்கியப் பண்ணை வெளியீடு
1978

மலிவுப்பதிப்பு: ரூ. 5.00

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய
மலிவுத் தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

வெளியிட்டோர்:
சர்வோதய இலக்கியப் பண்ணை
32/1, மேல வெளி வீதி
மதுரை- 625 001
தொலைபேசி- 31746

அச்சிட்டோர்:
மீராபிரிண்டர்ஸ்
276 - வடக்குமாசி வீதி
மதுரை- 625 001

சர்வோதய இலக்கியப் பண்ணை

# வள்ளுவரும் மகளிரும்

27 AUG 1978

ஞர்களில் மூத்த மேதையான
ரியர் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
-ஆம் ஆண்டில் பிறந்தார்.
று, அரசியல், பொருளாதாரம், சட்டம்
லிய துறைகளில் பட்டம் பெற்ற இவர்
திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைசென்றார்.
த்மா காந்தியடிகளின் சீடர்.
ாஜி, ஈ. வெ. ரா. பெரியார், கே. காமராஜ்,
. சத்தியமூர்த்தி, எஸ். சீனிவாச ஐயங்கார்,
பி. ராமசாமி ஐயர், எஸ். ராதாகிருஷ்ணன்,
வே. சாமிநாத ஐயர், மறைமலையடிகள், திரு. வி. க.,
. வடிவேல் செட்டியார். சுநித்குமார் சாட்டர்ஜி,
னோ, பர்ரோ, காத்ரே, பிலியோசாத் முதலிய
தைகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்.
ன்னகத்தில் ஒப்பிலக்கியத் துறைக்கு
. பொ. மீ. வித்திட்டார்.
ழ் இலக்கியத் திறனாய்வை
னத்துலகத் தரத்திற்கு உயர்த்தினார்.
ழ், வடமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு உள்ளிட்ட
மொழிகளில் அறிஞரான இவர்
 மொழிப் புலவர்'
ப் பாராட்டப்படுகிறார்.
ழியியல், சமயம், தத்துவம் உள்ளிட்ட
துறைகளில் மேதையான இவர்
கலைச் செல்வர்'
ப் பட்டம் பெற்றார்.
ன்னக மொழியியல் துறையின் தந்தையான பேராசிரியர்
னத்துலக ஒருமைப்பாட்டுக்காக
புள்ளமும் தொண்டுள்ளமும் கொண்டு
வின்றிப் பாடுபட்டு வருகிறார்.
கல்வி நிபுணரான இவர்
ஷி மகேஷ் யோகியின் ஆழ்நிலை தியானமுறை மூலம்
மனத்தை உயர்த்தவும் புதிய யுகத்தைச் சிருஷ்டிக்கவும்
று வருகிறார்.

Sarvodaya Ilakkiya Pannai
Collected works of
Prof. T .P. Meenakshisundaram
Volume IX

# *VALLUVARUM MAKALIRUM*

(Studies in Tirukkural)

சர்வோதய இலக்கியப் பண்ணை
பேராசிரியர் தெ. பொ. மீ. நூல்கள் வரிசை
தொகுதி—9
வள்ளுவரும் மகளிரும்

*SARVODAYA ILAKKIYA PANNAI*
Madurai-625001, India
1978

# முன்னுரை

வெள்ளிவிழா வெளியீடாக இந்நூல் முதலில் வெளியானது. நான்காம் பதிப்பு வெளிவந்து ஏறக்குறைய 16 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. பல ஆண்டுகளாக இந்த நூலினை வேண்டுவோர் பெறமுடியாமலேயே போய்விட்டது. இப்போது நண்பர் திரு. ஜெயப்பிரகாசனார் வற்புறுத்தலினாலும் முயற்சியாலும் ஐந்தாம் பதிப்பாக வெளிவருகிறது. இந்நூலை வெளியிடும் சர்வோதய இலக்கியப்பண்ணையின் அறங்காவலர் குழுத்தலைவர் பேராசிரியர் திரு. க. அருணாசலனார் அவர்களுக்கும், செயலர் திரு. சு. லோகநாதனார் அவர்களுக்கும் பிற ஊழியர்களுக்கும் நூலை அழகுற அச்சிட்ட மீரா அச்சகத்தாருக்கும் அச்சுப் பிரதிகளைத் திருத்தி உதவிய திரு. கு. கிருஷ்ணபிள்ளை திரு. வெ. பூமிநாதன் எம். ஏ. அவர்களுக்கும் எனது நன்றி.

வாழ்க!

அன்பன்

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

# இரண்டாம் பதிப்பின்

## முன்னுரை

தெ. பொ. மீ. வெள்ளிவிழாக் குழுவினர் நான் எழுதியவற்றில் சிலவற்றை நான்கு நூல்களாக வெளியிட்டனர். இதுபோது அந்த வரிசையில் ஐந்தாவதாக ''வள்ளுவரும் மகளிரும்'' என்ற நூலை அவர்கள் வெளியிடுகின்ருர்கள். திருக்குறளைப் பற்றி ஆராயத் தொடங்கியபோது எழுதிய எனது முதல் நூல் இது. நான் சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் செயலாளனுகத் தொண்டாற்றிய தற்கு வெள்ளிவிழாக் கொண்டாடியது இந்த நூலுக்கும் கொண்டாடிய கொண்டாட்டம் எனலாம். என் வாழ்க்கையை உருப்படுத்திய —உருப்படுத்தி வருகிற நூல் திருக்குறளே ஆம். என் ஆராய்ச்சி என்று சொல்வதனைவிட என் உள்ளத்துடிப்பின் விளக்கம் என்றுகூட இதனைக் கூறிவிடலாம். அன்று எழுதுவதுபோல இன்று நான் எழுதவில்லை. ஆம்; மாறியுள்ளேன். ஆனல் அடிப்படை மாறவில்லை, என் உயிரின் ஒரு பிறப்பு இந்நூல் ஆதலின் இதனை மாற்ற எனக்கென்ன உரிமை உண்டு? உரையாசிரியர்கள் மாறு கொள்ளும்போது நான் என்ன செய்வேன்? ஏதோ ஒரு வகையாக எனக்கு விளங்கவேண்டிப் புதுப்பொருள் காணும் கட்டாயம் ஏற்படுகிறது. அவரவர் காலத்திற்கேற்ப அவ்வந்நூலை விளக்கி வருதல் வேண்டும். இந்நாளைக் கேற்ப இந்நூல் ஒருவாறு திருவள்ளுவரை விளக்கிச் செல்கிறது.

இரண்டாவது பதிப்பினை, தெ. பொ. மீ. வெள்ளிவிழாக் குழுவினர் முயற்சியால் ஸ்டார் நிலையத்தார் வெளியிடுகின்றமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை
1—7—1956

இங்ஙனம்,
தெ. பொ. மீனுட்சிசுந்தரன்

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | காலமோ நூல் | | 1 |
| 2. | பேதையரது பெருஞ்சிறைப் பள்ளி | | 9 |
| 3. | பெண் பேயா? பேய்த்துறவா? | | 23 |
| 4. | அடிமையா? வாழ்க்கைத் துணையா? | | 39 |
| 5. | ,, ,, | அறத்துப்பால் | 74 |
| 6. | ,, ,, | பொருட்பால் | 105 |
| 7. | பெண்பிறவி இழிபிறவியா? | | 119 |
| 8. | தொகுப்புரை | | 124 |

# சர்வோதய இலக்கியப் பண்ணை

## தெ. பொ. மீ. நூல்கள் வரிசை

| வெளிவந்துள்ள நூல்கள் | | | ரூ. பை |
|---|---|---|---|
| 1. | வாழுங்கலை (இரண்டாம் பதிப்பு) | | 2- 00 |
| 2. | தமிழ்மொழி வரலாறு (இரண்டாம் பதிப்பு) தமிழாக்கம் : ச. செயப்பிரகாசம் | | 20 - 00 |
| 3. | மொழியியல் விளையாட்டுக்கள் | | 5 - 50 |
| 4. | கானல்வரி | மலிவுப் பதிப்பு | 12 - 50 |
| | | நூலகப் பதிப்பு | 20 - 00 |
| 5. | குலசேகரர் | மலிவுப் பதிப்பு | 6 - 00 |
| | | நூலகப் பதிப்பு | 10 - 00 |
| 6. | நீங்களும் சுவையுங்கள் | மலிவுப் பதிப்பு | 6 - 00 |
| | | நூலகப் பதிப்பு | 10 - 00 |
| 7. | தேனிப்பு | | 3 - 00 |
| 8. | பிறந்தது எப்படியோ? | மலிவுப் பதிப்பு | 4 - 00 |
| | | நூலகப் பதிப்பு | 8 - 00 |
| 9. | வள்ளுவரும் மகளிரும் | மலிவுப் பதிப்பு | 5 - 00 |
| | | நூலகப் பதிப்பு | 10 - 00 |
| 10. | தமிழா நினைத்துப் பார் | | |

# வள்ளுவரும் மகளிரும்

## 1 காலமோ நூல்

### குறளிலும் குற்றம் காணல்

திருவள்ளுவனாரது திருக்குறள், தான் பிறந்த நாள் முதலாகத் தன்னை எல்லோரும் ஏத்தெடுக்க, இவ்வுலக முழுவதும் இனிதே உலாவி வருகிறது. குன்றின்மேல் விளக்கெனப் பொலியும் குறளினிடத்தே குற்றங்கண்டார் ஒருவரும் இல்லை. ஒருவரோடொருவர் முரண்பட்டார் அனைவரும், தத்தம் கொள்கைக்குத் திருக்குறளினையே எடுத்துக் காட்டாக, எடுத்தாள்வர். திருவள்ளுவரது திருவருட்டிறத்தினைப் பற்றிப் பேசிப்போவதால், திருக்குறளின் பெருமை புலனாகப் போவதில்லை. ஆனால், எல்லோர்க்கும் ஒப்ப முடிந்த இடத்தில், ஒரு வகையாலும் ஆராய்ச்சி எழுவதில்லை. நாம் கூறுவதை யாரேனும் மறுத்துரைத்தால்தான், விழித்தெழுகின்றோம்; நாம் கூறுவதை ஊன்றி ஒரு முறைக்குப் பன்முறையும் படிக்கின்றோம்; புதியன புதியனவாக நயங்களைக்கண்டு நாமும் அகமகிழ்கின்றோம்; பிறர்க்கும் பெருங்களிப்பூட்டுகின்றோம். சிறுபிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும் முறைகளில், தடைகளை எழுப்பி அவற்றிற்கேற்ற விடைகளை அளிக்கும் முறையே ஒருவகையில் தலைசிறந்து விளங்கும் முறையாகும். அப்போதுதான் கற்றபொருளும், கேட்ட பொருளும் மாசிலாத மனத்தகத்தே மயக்கத்திற்கு இடமின்றி மின்னிப் பொலிகின்றன. கேளாத கேள்விகளையும் எழுப்பி விளக்கம் கூறுவது பழைய உரையாசிரியர்கள் கையாளும் தடைவிடை முறையாம்.

### கூட்டம் குதித்தல்

குறளானது இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியதொரு நூல். இவ் விருபது நூற்றாண்டுகளில் இவ் வுலகம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அந் நாளில் நல்லன என்று எல்லோராலும் புகழப்பட்ட கொள்கைகள், இந்நாளில் தீயன என்று எல்லோராலும் இகழப்படுகின்றன. அத்தகைய கொள்கைகளைத் தானே திருவள்ளுவரும் கூறுகின்றார். மக்கள் எவ்வளவுதான் உயர்ந்தவர்கள் ஆனாலும், தாம் பிறந்த மக்கள் கூட்டத்தினின்றும் குதித்தோடல் முடியாது. நாம் வாழ்ந்துவரும் மக்கட் கூட்டத்தாருடைய கொள்கைகளில் சிலவேனும் நமது மனத்திற் படியாமற் போவதில்லை.

அக்கொள்கைகள் நிறைந்த குடியில் பிறந்து, கொள்கைகளை விளக்கும் மொழிகளையே பயின்று, கொள்கை உடையாரோடு கூடிக்குலாவி வாழ்ந்து வருகையில், அக் கொள்கைகளும் நம்முடையன ஆகின்றன. அந்தப் பாலே குடிக்கின்றோம். அந்தக் காற்றே உயிர்க்கின்றோம். திருவள்ளுவனாரும் அந்த இருபது நூற்றாண்டுகளுக்கு முன் காய்ந்த வெயிலில் காய்ந்து, பெய்த மழையில் நனைந்து, அடித்த காற்றில் அன்றாடம் உலாவி வந்தவர்; ஆதலின் அந்த நாளைய பிள்ளைகளைப் போலவே வளர்ந்து வந்திருப்பர். அவரது திருக்குறளிலே அவரது காலத்தின் நிழலைக் காணலாம். ஆகவே இகழப்பட்ட கொள்கை களையும் இவரது திருக்குறளிலே காணலாம் அன்றோ?

### அக்கால அடிமைகள்

பெண்கள் அனைவரும் அடிமைகள் என்பது பண்டை நாளைய கொள்கைகளில் ஒன்று, அஃதும் திருவள்ளுவரால் வற்புறுத்தப்பட்டிருக்கிறது அன்றோ? திருவள்ளுவர் அகமுடையானைத் ''தற்கொண்டான்'' என்ற சொற்றொடரால் குறிக்கின்றார்:- தன்னை, அதாவது மனைவியை; கொண்டான், அதாவது, பொருள்களை விலைக்குக் கொள்வது போலவும் ஆடுமாடுகளைக் கொள்வது போலவும் தன் மனைவியைத் தன்பொருளாக அடைந்தவன் என்றபடி, ஈதன்றோ ''தற்கொண்டான்'' என்பதன் பொருள்? மனைவிக்கும் மாட்டிற்கும் என்ன வேற்றுமை காண்கிறார் திருவள்ளுவர்? ஆடு, மாடு, பெட்டி, பேழை முதலிய பொருள்களோடு மனைவியையும் ஒன்றுசேர்த்துத் திருவள்ளுவனார் எண்ணுகின்றார் என்பதனைப் ''பிறன் பொருளால்'' என்ற அவரது அழகிய சொற்றொடரே விளக்குகின்றதன்றோ! மாடும் ஆடும் பொருளாவதுபோலக் கொண்டானுக்குக் குடிப்பிறந்தாள் பொருளாகின்றாள். மனைவிக்கு ஒரு சிறிது உரிமையுமில்லை; அவளைப் பற்றிய உரிமை எல்லாம் அவளுடைய அகமுடையானதே யாகும். இதனையே 'பிறர்குரியாள்' என்று திருக்குறளில் வரும் சொற்றொடர் தெரிவிக்கின்றது. அவ்வாறானால் அவளது நிலை என்ன? அடிமையின் நிலையன்றி வேறு நிலை அவளுக்கு ஏது? அடிமைக்கும் உரிமை யொன்றும் இல்லை; அகமுடையாளுக்கும் உரிமை ஒன்றும் இல்லை. அடிமையைப்பற்றிய உரிமை எல்லாம் ஆண்டானின் உரிமையே யாகும்; அகமுடையாளைப் பற்றிய உரிமை எல்லாம் அகமுடையானின் உரிமையே யாகும். அடிமை, ஆண்டவனைக் கடவுளெனத் தொழுவது போல மனைவியும் மணாளனையே தொழுதல் வேண்டும்.

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை''

என்ற திருக்குறள் இக்கொள்கையை நிலை நிறுத்தவில்லையா? இதனைத்தானே சீத்தலைச்சாத்தனார் தமது மணிமேகலையில் திருவள்ளுவரின் சிறந்த கொள்கை எனக்கொண்டாடிப் பொன்னே போலப் போற்றி எடுத்தாள்கின்றார்! சீர்திருத்தத்தின் முன்னணியில் நிற்போர் இக்கொள்கையை எவ்வாறு கைக்கொள்ள முடியும்? முடியாதன்றே? எனவே, இம்மட்டில் திருக்குறளைப் புறத்தே வீசி எறிதல்தான் வேண்டும் எனலாமா?

### காலந்தாண்டி எட்டிப்பார்த்தல்

இவ்வாறு கூறுவதற்கு இடமுண்டோ திருக்குறளில்? என்று நமக்கும் ஐயம் எழுகின்றது. திருக்குறளை மற்றொரு முறை ஓதுவதற்கு முன்னர்த் திருவருட் புலவர்களுக்கும் அவர்கள் பிறந்த மக்கட் கூட்டத்திற்கும் உள்ள தொடர்பினைச் சிறிது ஆராய்தல் வேண்டும். ''உலகு என்பது உயர்ந்தோர் மாட்டே'' என்பது உண்மை; ஆதலின், அவ்வுயர்ந்த மக்கட் கூட்டத்தினை உலகு என்று இக்கட்டுரையில் எடுத்தோதி வருவோமாக! திருவருட்புலவர்கள் வாழ்ந்த உலகம் எந்தக்கொள்கையைக் கொண்டாடியதோ அதனையே அப்புலவர்களும் கொண்டாடினார்கள் என்று ஒருதலையாகத் துணிவதற்கில்லை. உலகிற்கும் புலவர்களுக்கும் உள்ள தொடர்பு, தாமரை இலைக்கும் அதன் மேல் தங்கும் நீர்த்துளிக்கும் உள்ள தொடர்பே ஆகும். உலகில் ஒட்டியும் ஒட்டாததுமாக உயர்ந்தோர் உலவுவர். கருவிலே திருவுடைய பெரியோர், தம் காலத்தையும் தாண்டி எல்லையில்லாத அப்புறத்தே எட்டிப்பார்ப்பர். 'இவ்வாறு தான்' என்று இப்போது எடுத்துரைக்கலாகாத ஒருவகையில் இப்பெரியோர்கள், எல்லோருக்கும் எக்காலத்திற்கும் ஒத்தியலும் உண்மைகளை உள்ளுணர்வால் கண்டு உரைக்கின்றனர். இதனாலன்றோ இவர்களை உலகினர் 'திருவருட் புலவர்' என்று சிறப்பித்துக் கூறுவது? 'ஏகம் சத் விப்ரா; பஹுதா வதந்தி' என்கிறது திருமறை. 'ஒன்றே உள்ளது; அதனைப் பெரியார் பல படியாகப் பேசுகின்றனர்' என்ற அச் சொற்றொடரை நமது ஜகதீச சந்திர போஸ் என்பார் தம் நூல்களின் முன்னே பதிப்பிக்கின்றார்; 'உயிருள்ளனவும் உயிரில்லனவுமாகிய பொருள் அனைத்தும் ஒரு தன்மையன' என்று தாம் இப்போது கண்டுபிடித்த உண்மையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே திருவருட் புலவர்கள் தம் உள்ளுணர்வால் கண்டனர் எனக் குறிப்பாகச் சுட்டுகின்றார். உலகிலுள்ள பொருள்கள் எல்லாம் ஒன்றினின்றொன்று தொடர்ச்சி

யாகத் தோன்றும் மலர்ச்சி முறையையே (Evolution) மாணிக்கவாசகப் பெருந்தகையார் 'புல்லாகிப் பூடாய்' என வரும் அடிகளில் குறிக்கின்றார் என்று கூற இடமுண்டு. இத்தகைய திருவருட் குறிப்புக்களை மேனாட்டு இயற்கை நூலறிஞரிடத்தும் காண்கின்றோம். சில இடங்களில், கருவிலே திருவுடைய திருவருட் பெரும் புலவர்கள் தம்மையும் அறியாது, உலகிலே உண்மை ஓடிப்பாயும் வாய்க்கால்களாக விளங்குகின்றார்கள். திருவருட் புலவர்களிடம் இதனை அறிய நாம் போகவேண்டுவதில்லை. கற்றச்சன் ஒருவன் ஓரழகிய மகளின் வடிவத்தைக் கல்லில் செதுக்குகின்றான். உடலுறுப்பின் அமைதியினை ஆராய்ந்தவர்கள், கழுத்தின் சுற்றளவைவிட இடுப்பின் சுற்றளவு இத்துணை மடங்கு நீண்டதென முடிவுகட்டியுள்ளார்கள். இம்முடிவினை எல்லாக் கற்றச்சர்களும் அறிவதில்லை. ஆனால், கைவல்ல கம்மியன் தன் உள்ளுணர்வால் கண்டவடிவினைக் கல்லில் அடிக்கிறான், அடித்த பிறகு கழுத்தையும் இடுப்பையும் அளந்து பார்த்தால், உடலுறுப்பினை ஆராய்ந்து கட்டிய முடிவினை அவ்வடிவம் வற்புறுத்துகின்றது. அவன், சுற்றளவை அளந்து அளந்து துன்புறுகிறானோ? அவனையும் அறியாமலே அவ்வுண்மையை அவ்வடிவத்தில் அழகாக அடித்து வைக்கிறான். அவ்வாறே திருவருட் புலவர்களுடைய பாக்களும் கதையும் கொள்கைகளும் அவர்களையும் அறியாமல் உள்ளுணர்வால் உருப்பெற்று ஒளிர்கின்றன. இவ்வகையால்தான் இப்பெரும் புலவர்கள் எக்காலத்தையும் தாண்டி எட்டிப்பார்த்து, உண்மையின் இயற்கையை உணர்ந்து எழுதுகின்றார்கள். திருவருட்பெரும் புலவர் அணிநூலினை ஆராய்ந்த பின்னரோ உவமை தேடுகின்றனர்? அவ்வாறு செய்வோர் பெரும்புலவர் அல்லர். கம்பரும், திருவள்ளுவரும் அவ்வாறு பாடத்தொடங்கியிருந்தால் ஒருபாட்டளவிலும் நம்மை எட்டிப்பார்த்திருக்க மாட்டார்கள். 'காரிகை கற்றுக் கவி பாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே' என்ற பழமொழி இதனைத்தான் வற்புறுத்துகின்றது. இயற்கை நூலறிஞர்களிலும் திருவருட் புலவர்கள் உள்ளார்கள். கிளையில் தொங்கிக் கிடந்த பழம் கீழே வீழ்வது கண்ட நியூடன் (Newton) என்ற இயற்கை நூலறிஞர் எழுந்து கூத்தாடினாராம்; பொருள்களைத் தன்பால் இழுக்கும் ஓர் ஆற்றல் தரையினிடத்தே உள்ளதென உள்ளுணர்வால் கண்டு உவகைக் கடலில் மூழ்கினாராம். இஃது ஆராய்ச்சியின் பயன் அன்று; இஃதே அருளின் திறம்.

**குரங்குபிடிக்கப் பிள்ளையாராதல்**

எனவே, திருவள்ளுவர் வாழ்ந்த உலகம் எந்தக்கொள்கையைக் கொண்டாடியதென்று நாம் ஆராய்ந்து அலைய வேண்டுவதில்லை.

'திருவள்ளுவர் இக்கொள்கையை அறிந்திருந்தாரா?' என்றும் நாம் தெரிந்து கொள்ள வேண்டுவதில்லை. அவர் நூலுண்டு; நூலில் வரும் சொற்றொடர்கள் உண்டு. அவற்றில் இக்கொள்கை காணக்கிடக்-கின்றதா என்பதே ஆராய்ச்சி. பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்த கதை யாவரும் அறிவர். குரங்கு பிடிக்கப்போய்ப் பிள்ளையாராய் முடிந்த கதையும் உண்டு. வான்மீகியார், வேடன் செய்தியைப்பாட்டாகப் பாடத் தொடங்கி முடித்தபோது, அப்பாட்டு இராமன் கதையாக முடிந்ததாம். அவ்வாறே, திருவள்ளுவரும் அந்நாளைய கொள்கையைப் பாடத்தொடங்கி இந்நாளைய கொள்கையைப் பாடிமுடித்திருக்கலாம்.

### சொல்லிவிட்டுமல்லாடல்

எனவே, திருவள்ளுவர் முட்டாளானாலும் திருக்குறள் மூதறிஞர் நூலாகலாம் அன்றோ? ஆனால், திருவள்ளுவர் இக்காலத்து உயரிய கொள்கைகளை அக்காலத்திலேயே ஏன் கையாண்டிருத்தல் கூடாது? அவர் சொல்லிய சொற்களை விட்டு விட்டு, அவரோடு வாழ்ந்தவர்கள் சொல்லிய சொற்களைக் கொண்டு அப்பெரியாரது உள்ள நிலையை வேறு பிரித்துக்காண முற்பட்டு, அவரை முட்டா ளாக்குவது நமது அறியாமையையே காட்டுகின்றது. பாட்டை விட்டுப் பாவலனை அறிவதெல்லாம் வெறும் புரட்டு. ஆதலால், திருக்குறளினையே மற்றொரு முறை ஓதி உணர்வோமாக.

### அடிமைக் கதை

'பெண்கள் அடிமைகள்' என்ற கொள்கைதான் என்ன? இது பண்டைநாள் கொள்கையே அன்று. தொடக்கத்தில் ஆணும் பெண்ணும் ஒத்த உரிமையோடுதான் உலக வாழ்வை நடத்தி வந்-தனர். போரும் பூசலும் தொடங்கின போதெல்லாம் மெல்லியலார் வீட்டோடு அடங்கிவிட்டனர். வல்லியலாரான ஆடவர் அவரைக் காப்பதற்கு வாளுங் கையுமாகப் போர் முனையில் நின்றனர். ஆண்கள் சொற்படி பெண்கள் ஒழுகுவதும் வழக்கமாயிற்று. அந்த நாளிலும் காதலால் கண் மூடிப் பெண்ணேவல் செய்தொழுகும் பேதையர் பலர் இருந்தனர். பெண்களை முற்றும் அடிமைகள் ஆக்குவது இயலாத தொன்றாம். நாட்டில் அமைதி யில்லாது எங்கும் போர் முழக்கம் கேட்ட நாளில் பெண்கள் தம் கற்பினைக் காக்கும் ஆடவரிடத்தே அடைக்கலப் பொருளாய்ப் புகுந்தார்கள். 'பெண்ணின் கற்பெங்கே கெடுகின்-றதோ?' என்று பெற்றோரும் அஞ்சி நடுங்கினர். 'உடல் மெல்லியது போல உள்ளமும் மெல்லியர் விரைவில் நிறையழிவர்' என எண்ணினர். ஆதலால், பெண்ணை வளர்ப்பது அடி வயிற்றில்

நெருப்பைக் கட்டி வருவதாய் முடிந்தது. அவர்கள் சிறை இடுவது போலப் பெண்களை வீட்டில் வைத்துப் பூட்டினார்கள். அறவணவடிகளார், பெண்ணேவல் செய்தொழுகும் பேதமையைக் கண்டு கையை முறித்தனர்; தமது தலையான அறவுரை எல்லாம், பெண்ணின் தலையணை உரை எதிரிலே, கதிரவனைக் கண்ட பனிப்போல் மறைந்து போதல் கண்டு மனம் புழுங்கிப் பெண்ணைப் பேயெனப் பேசத்தொடங்கினர்! இல்லறம் எல்லாம் பேர் இக்கட்டு என்றனர்; துறவறத்தில் நின்றால்தான் தூய்மையான வீட்டு நிலையை அடையலாம் என்றனர். இவ்வாறு அடைபட்டுக் கிடந்தும் பேயெனப் பெரிதும் இகழப்பட்ட பெண்கள், வேள்விச்சடங்கு முதலியவற்றை ஆடவரோடு ஒருங்கிருந்து இயற்றும் உரிமையும் மறுக்கப்பட்டார்கள். இது மனுஸ்மிருதி எழுந்த நாளில் வலிவடைந்தது. இக்கொள்கையைப் பரப்பியவர் ஐதிஸாயனர் என்ற முனிவரே என்று பூர்வமீமாம்ஸையில் ஜைமினி கூறுகின்றார். ஜைமினி இந்தப் பொய்க்கொள்கையை எதிர்த்து உரையாடுகின்றார். திருமறையின் கொள்கைக்கு முரண்படுதலினால், மனுவின் கொள்கை கொள்ளத்தக்கதன்று என முடிவு கட்டுகின்றார்; வாதராயணர் என்ற வியாசர் முதலியோர் அனைவரும், பெண்களுக்கும் சடங்குகளில் ஒத்த உரிமை உண்டு என்ற கொள்கையையே உடையவர்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றனர். ஆனாலும் என்ன பயன்? திருமறையின் கொள்கையை உலகினர் மறந்துவிடவே மனுவின் கொள்கையே பரவியது. வாழுமிடமோ சிறை; பெயரோ பேய்; நல்வழிப்படலாம் என்றாலோ நல்லறமாகிய சடங்குகள் இயற்றவும் உரிமை இல்லை. ''எத்துணைக் கொடுமை செய்திருந்தால் இத்தகைய பாழும் பிறவி வரும்?'' எனப் பெண்களே ஏங்கி நின்று அழுதார்கள். பாழும் பெண்ணைப் பெற்றெடுத்த பின், தாய் தந்தையரோ 'பெண்ணின் கற்பைக் காப்பதெப்படி' என முக்காடிட்டு முடி வணங்கி மூலையிற் பதுங்கினர்.

### அடிமைக்கோட்டை

பெண்களைக் கீழ்நிலைக்குக் கொண்டுவந்த கொள்கைகள் இவையே ஆகும். பெண்களுக்கு உடல்வலியும் இல்லை; மனவலியும் இல்லை. ஆதலால், அவர்களது கற்பினைக் காக்கவேண்டுமானால் வீட்டில் பூட்டி வைத்தல் வேண்டும். இது முதற்கொள்கை. அவர்கள், தம் மயக்கில் சிக்கியவரை அறவழியிற் செலுத்துவதில்லை; ஆதலின், அவர்களோடு கூடி வாழும் இல்லறம் நல்லறமன்று. இஃது இரண்டாவது. மனவலியற்றவர்களுக்கு என்ன உரிமைதந்து உதவ இயலும்? இவர்களுக்கு எனத் தனியே ஒருவேலையும் இல்லை. ஆடவர் சொற்படி நடப்பதே

அவர்களுக்கும் உலகத்திற்கும் நன்மை பயப்பதாகும். இது மூன்று. எனவே, பெண்கள் தாழ்ந்தவர்கள். இவர்கள் உயர்நிலை அடைவது என்பது முடவன் கொம்புத்தேனை அடைவது போலாம். பெண் பிறவியிலும் இழிவான பிறவி வேறொன்றில்லை. இஃதே நான்கு. இந்த நான்கு கற்றூணின் மேல்தான் தமது வானகக் கோட்டையைக் கட்டிப் பெண்களை அடிமை எனப் பேசும் ஆடவர்கள் அரசாள்கின்றார்கள். இந்த நான்கு கொள்கைகளைப் பற்றியும் திருவள்ளுவர் என்ன கூறுகின்றார்? இவற்றில் ஒன்றையேனும் திருவள்ளுவர் ஒப்புக்கொள்ளவில்லை என்று திருக்குறளை ஒருமுறை ஓதிய வரும் உணர்வர். திருவள்ளுவர் தம்மையு மறியாது உயர்ந்த கொள்கைகளை ஓதுகின்றாரென்பது உண்மையன்று. அவர், மேற் கூறிய நான்கு கொள்கைகளையும் அறிந்துவைத்தே ஒவ்வொன்றாக மறுத்து உரையாடுகின்றார்.

## பரிமேலழகியார்

### பொது நூல்

இங்கு நாம் கூறப்போகும் பொருள்களிற்சில, பரிமேலழகியார் கண்ட மெய்யுரைக்குச் சிறிது முரண்பட்டன போன்று தோன்றுவதாலே அப் பெரியாருக்கு ஒரு பழியும் இல்லை. பரிமேலழகியார் பிறவாதிருந்தால் திருவள்ளுவரின் பெருமையினை, நாம் இன்று அறிந்ததுபோல, அறிய இயலாதாகும். எனினும், அவர் உரையானது திருமறையினை வழிபட்ட மக்களுக்கெனவே எழுகின்றதாகும். ஆனால், திருவள்ளுவனாரோ, கல்லாடனார்.

> ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
> அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
> எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
> முப்பால் மொழிந்த மொழி

என்று திருவள்ளுவ மாலையிலும்,

> சமயக் கணக்கர் மதிவழி கூறாது
> உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்

என்று கல்லாடத்தும் வற்புறுத்திக் கூறியபடி, எக் காலத்தினருக்கும் எக்கொள்கையினருக்கும் ஏற்றதொரு பொது நூல் செய்தருளுகின்றார். திருவள்ளுவர், தமது நூலில், ஒழுக்கத்தினை எல்லோருக்கும் ஒத்த பொதுவழியாகவே கூறுகின்றார். இதனைப் பரிமேலழகியாரும் வற்புறுத்துகின்றார்.

" அதுதான் (அறம்) நால்வகை நிலைத்தாய் வருணந் தோறும் வேறுபாடு உடைமையின் சிறுபான்மையாகிய அச் சிறப்பியல்புகள் ஒழித்து எல்லார்க்கும் ஒத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு

பற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையாற் கூறப்பட்டது'' என்று தமது உரைப்பாயிரத்தில் மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றார். பின்னும்,

''பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை,''

என்ற குறளுக்கு உரை எழுதுகையில்,

''எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து, எல்லார்க்கும் பொதுப் படக் கூறுதல் இவர்க்கு (திருவள்ளுவர்க்கு) இயல்பாகலின், ஈண்டும் பொதுப்பட 'நூலோர்' என்றும், அவரெல்லார்க்கும் ஒப்பமுடிதலான் 'இதுதலையாய அறம்' என்றும் கூறினர்'' என விரிவுரை கூறுகின்றார்.

**மனுநூல்**

திருமறையினை வழிபடுவார், பரிமேலழகியார் கண்டதே மெய்யுரை எனக்கொள்வர். இவ்வாறே வேறு கொள்கையினரும் வெவ்வேறு உரை வகுத்து அவ்வவற்றையே மெய்யுரை எனப் போற்றுவர். இவற்றை எல்லாம் ஒருங்குவைத்து ஆராய்ந்து, உலகினர் அனைவர்க்கும் ஒத்தகொள்கைகளை அறிதல்வேண்டும். பரிமேலழகியார் தமதுரையைப் பொதுமையாகக் கூறவில்லை என்பது அப்பெரியார் புதல்வரைப் பெறுதல் என்பதற்கெழுதிய உரையால் நன்கு விளங்குகின்றது.

**புதல்வரைப் பெறுதல்**

''அஃதாவது, இருபிறப்பாளர் மூவராலும் இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள் முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படாமையின் அக்கடன் இறுத்தற்பொருட்டு நன்மக்களைப் பெறுதல்'' என்பது அவர் உரை. இவ்வுரைப்பகுதியில் பரிமேலழகியார் சிறப்புப்பற்றி நாற்பாற் குடியில் மேற்பாற் குடியினரைப்பற்றிக் கூறிக் கீழ்பாற் குடியினரைக் கூறாதுவிடுக்கின்றமை இங்குக் குறிக்கத்தக்கது. எனவே, நாம் பொதுவகையாகத் திருவள்ளுவர் நூலுக்கு உரைகாணும்போது, பரிமேலழகியார் சென்ற வழியினின்றும் சிறிது பிறழ்ந்தே செல்லவேண்டிவரும். எனினும், முடிந்த முடிவில் யாதொரு வேற்றுமையும் உற்றுநோக்குவருக்குப் புலனாகாது என்று சொல்லவும் வேணடுமோ?

**காலக்கடலில் ஒரு கட்டுமரம்**

பரிமேலழகியார் செய்த உதவி மற்றிருவகையானும் சிறந்து

விளங்குகிறது, திருவள்ளுவனாரது திருக்குறள். பரிமேலழகியாரது உரையாகிய புணையைக்கொண்டுதான், இடைக்காலமாகிய கருங்கடலைக் கடந்து, நம்காலம் எனும் கரைக்குச் செவ்வனே வந்து சேர்கின்றது. அக்காலத்திற்கு ஏற்பச் சில நுட்பங்களைத் திருக்குறளின் நின்றும் அவ்வுரையாளர் எடுத்துக்காட்டுகின்றபடியால் அன்றோ அந்நாளிலும் திருக்குறள் தலைசிறந்து விளங்கியது! ''அறிவறிந்த மக்கள்,'' ''கேட்டதாய்'' என்பனவற்றிற்கு அப்பெரியார் கூறுகின்ற உரை நுட்பங்கள் அக்காலத்தவரால் பெரிதும் பாராட்டப்பட்டன போலும்; போற்றப்பெற்றன போலும். இந்தப் போற்றலும் புகழ்ச்சியும் திருவள்ளுவரையே சேர்ந்தன. எனவே, சிற்சில இடத்து அப்பெரியார் சென்ற வழியைவிட்டுச் சிறிதளவு ஒதுங்கி நாம் சென்றாலும், அவர் வழி செய்தமைத்தமைக்கு நாம் கைம்மாறு செய்ய இயலுமோ?

---

# 2. பேதையரது பெருஞ்சிறைப் பள்ளி

### பேதமை

'பெண்கள் அனைவரும் மன நொய்மை யுடையவர்கள்; அறிவிலாதவர்கள்; பெரும் பேதையர்கள்; ஆதலால் அவர்களைச் சிறையிலிட்டுத்தான் அவர்களது கற்பைக் காத்தல் வேண்டும்' என்ற முதற் கொள்கையைத் திருவள்ளுவர் உடன்படுகின்றாரா என்பதே கேள்வி.

### பேதமை என்பது பேரருளே

பெண்கள் இயற்கையினையும், ஆண்கள் இயற்கையினையும் பொதுவாக ஆராயும்போது, பெண்கள் உணர்ச்சியிற் சிறந்தவராய் விளங்குதல் புலனாகும். 'தந்தை யடித்தால் தாய் அணைப்பாள்' என்பது முதலான பழமொழிகள் இதனை வலியுறுத்துகின்றன. இளகிய மனதுடையார் பெண்களே. அவர்கள் பாம்பின் குஞ்சு வாடி வதங்குவது கண்டால் மனமிரங்கிப் பாலூட்டி வளர்ப்பார்கள்; பின்னே, அது தம்மைக் கடித்துக் கொல்லுமே என்பதை எள்ளளவும் அந்நிலையில் நினையார்கள். தம்பிள்ளை கொடியவனாய்த் திரிந்துவந்து தம்மிடம் இனியமொழி சில இயம்பினால் பிள்ளை இழைத்தபெருங்கொடுமை அனைத்தினையும் அடியோடு மறந்து, அவனை இனியன் என்று தாய் அந்நிலையில் கொண்டாடுவாள். அவன் ஒருபொழுதும் வழிக்கு வாரான் என உள்ளுக்குள் உணர்ந்து வைத்தும் அந்த இமைப்பளவு போது, தன்னை மறந்து, அவன் வலையில் சிக்கிக்கொள்வாள். இது பற்றித்

தான் இப்பேயுலகம் பெண்களை அறிவிலாதவர்கள் எனப் பழிக்கிறது. ஆனால், மக்கள் நாடிநிற்பது அறிவில்லாத நிலை என்று இகழப்படும் இந்த அருள் நிலையையே அன்றோ? நாம் வழிபடும் கடவுளும் இந்த அருள் நிலையில் அமர்ந்துள்ளார் என்று எதிர்பார்த்தன்றோ நாம் வழிபடுகின்றோம்? இந்த மனநிலையைத்தான் பேதமை என்பது. உணர்ச்சி மிக்கமையால் பெண்கள் அறிவிழந்தவர்கள் என்பது ஒரு காலத்தும் உண்மையாகாது. உணர்ச்சியிற் குறைந்த ஆடவர் அறிவிற்சிறந்தவர் என்பதும் உண்மையன்று. ஆடவர் அருள் எழவேண்டிய நிலையிலும் மருள் எழ நிற்பர், தம் வன்நெஞ்சிற்கு இணங்கப் பச்சிளம் பாம்பினையும் பால்மணம் மாருக்குட்டியினையும் தடிகொண்டடித்துத் தலையை நொறுக்குவர்; பல்லிளித்து வந்து நையப் பாட்டுப்பாடும் மகனை நையப் புடைத்து அப்புறம் ஓட்டுவர்; இதனை அறிவாராய்ச்சி என்று புகழ்ந்துகொள்வர்; இந்த வகையில் தான் ஆடவர் அறிவிற் பெரியாராயினர்; பெண்கள் உணர்ச்சியிற் சிறந்தவராய்ப் பேதையராயினர்.

**பேதமை என்பது மாதர்க்கு அணிகலம்**

பின்னுளில் வந்த பெரியோர், பேதமையின் உண்மைப் பண்பினை உணராது அதனை இழித்துரைக்கத் தொடங்கினர்; களங்கமிலாத மனமுடையவனையும், சூழ்ச்சியறியாத தூயோனையும் 'பேதை' என உலகினர் இன்றும் பேசிக்கொள்ளும் பெருவழக்கினையும் மறந்தனர். பெண்கள் அறிவிலாதவர்கள் என எழுதிவைத்தனர்.

''நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்தே''

என்பது உண்மையே. ஆனால், பேதமையானது பெருமை தருவதென்பதும் உண்மையே ஆம். இல்லாவிட்டால் அதனைப் புகழ்ந்து,

'பேதைமை என்பது மாதர்க் கணிகலம்'

என நமது அவ்வை கூறுவாளோ? பேதுறுதல் என்பதும் பேதமை என்பதும் தொடர்புடைய சொற்கள். அன்பினால் மனம் நெகிழ்ந்து நம்பித் தன்னை மறந்தலைப் பேதுறுதல் எனக் கூறுவர். பெரும்பான்மையும் ஆட்சியில், அது கலக்க நிலையையே குறித்துவருகின்றது. இக்கலக்கம் இல்லாத பேதமை நிலையே, இறைவனது பேரருள் நிலையாம். இங்ஙனம், இறைவன் நிலைக்கு அணித்தாய் இருப்பதால் அன்றோ, அவ்வையார் அதனை அணிகலம் எனப் புகழ்ந்தனர். அப்பேதைமை இல்லாத பெண், மனமிரங்காத வன்னெஞ்சம் உடையவள்; மெல்லியல் சிறிதும் இல்லாதவள். அவளே பேய். பேதமையைப்பற்றியே மாதருக்கு மெல்லியலார் என்ற பெயர் எழுந்தது. மெல்லியல் என்பது புற உறுப்பின் அமைப்பினையும் சாயலையும் குறிப்பதோடு அகத்தெழுந்து

விளங்கும் இளகிய மனத்தினையும் குறிப்பதாகும்.

**கொடியும் கொழுகொம்பும்**

பெண்களே உலகினை நடத்துவதென்றால், உலகம் பிறரால் வஞ்சிக்கப்பட்டுக் கொலையுண்டு அழியும். ஆடவர்களே உலகினை நடத்துவதென்றால் உலகம் அவர்களாலேயே கொலையுண்டு அழியும். பெண்களும் ஆடவரும் ஒருங்குகூடி உலகினை நடத்தினால், அறிவும் அன்பும் ஒன்றாக இயைந்து உலகெங்கும் அமுதநிலவெரிக்கும்; இன்பவெள்ளம் பொங்கி வழியும். எனவே, ஆடவர்க்குப் பெண்கள் சார்பாவர்; பெண்களுக்கும் ஆடவர் சார்பாவர். இவ்வகையில் ஒருவருக்கொருவர் அடிமையர் யாவர்? ஒருவருக்கொருவர் இன்றியமையாச் சிறப்பினை உடைய ஆண்டவர் ஆவர். இதுபற்றியே உலகம், ஆணும் பெண்ணுமாய் வழங்கி வருகிறது. கொழுகொம்பில்லாத கொடி, நிலத்திற் படர்ந்து மிதியுண்டு அழிகிறது. கொடி சுற்றாத கொழுகொம்பும் வெறுந்தடியேயாய் வழியே செல்வோரை இடறி விழச் செய்கிறது; அது பொழிவுற்று மணத்தோடு பெருமையடைவதில்லை. இதுபற்றியே மணாளனைக்கொழுநன் என்றும், மணாட்டியைப் பூங்கொடி என்றும் தமிழர் புகழ்ந்து பாடினர்.

**கல்வி கேள்வி**

**விலங்கொடு மக்கள்**

அறிவோ, இயல்பாக உள்ள இயற்கையறிவும், கல்விகேள்விகளால் வளரும் செயற்கையறிவும் என இருவகைப்படும். செயற்கையறிவினைப்பற்றி முன்னர் ஆராய்வோம். கல்வி கேள்விகள் பெண்களுக்கும் உரியன எனபதனைத் திருவள்ளுவர் வெளிப்படையாகக் கூறுவிடினும், அவர்தம் பாடல்களை ஆராயும்போது 'பெண்களும் கற்கவேண்டும்; கேள்வி கேட்கவேண்டும்' என்று அவர் வற்புறுத்துவது வெளியாகின்றது. பெண்கள் கற்றலாகாது எனக்கூறும் பெரும் பித்தர் அந்தநாளில் ஒருவரும் இல்லாமையால் அவர் அதைப்பற்றி வெளிப்படையாகக் கூறாது விடுகின்றார். செத்த பாம்பினை அடிப்பது தெய்வப் புலவர் தொழிலன்றே.

> கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லா தவர்;
>
> விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்;
>
> செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
> அவியினும் வாழினும் என்;

என ஆண் என்றும் பெண் என்றும் பாராது, கல்விகேள்வி இல்லாதாரை

விலங்கோடும் இறந்தாரோடும் வைத்தெண்ணுகின்றனர் திருவள்ளுவனுர்.

### ஒத்த அறிவு

மற்ருெரு குறிப்பும் குறளில் உண்டு. திருவள்ளுவனுர் காமத்துப்பாலில் களவியல் கூறுகின்ருர். களவாவது ஒத்த அறிவும், ஒத்த திருவும், ஒத்த அழகும், ஒத்த ஆண்டும், ஒத்த ஆண்மையும் ஒத்த குடியும் உடைய தலைமகனும் தலைமகளும் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றி, இறைவனருளால் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டுத் தம்மை மறந்து இறைபணி நின்று ஒன்று சேர்வதேயாகும். தலைமகனும் தலைகமளும் தம்முள் ஒத்தவராய் இல்லாதபோது களவொழுக்கம் இல்லையாம். பலவகையான ஒப்புமையில் அறிவொப்புமையும் வேண்டப்படுதலின் ஆணைப்போலப் பெண்ணும் அறிவுடையவளே என்பதாயிற்று. எனவே, களவியல் கூறுகின்ற திருவள்ளுவனுர் பெண்களை அறிவிலிகள் என எப்போதும் கூற ஒருப்படார் என்பது ஒருதலை.

### அறிவதறியும் உரிமை

திருவள்ளுவர் நூலினைத் துருவித்துருவி ஆராய்ந்தாலும், பெண்களை அறிவிலாதவர் என அவர் கூறுவதனைக் காணமுடியாது. ஆனால், பரிமேலழகியார் உரையினை ஓதும்போது அத்தகைய குறிப்புக்கள் இரண்டொன்று எடுத்துக் காட்டப்படுகின்றன. "அறிவறிந்த மக்கள்" என்பது ஒரு குறிப்பு. "கேட்ட தாய்" என்பது மற்ருெரு குறிப்பு. மக்கள் என்ற சொல் ஆண் மக்களையும் குறிக்கும்; பெண் மக்களையும் குறிக்கும். இத்தகைய சொல்லைப் பொதுப் பெயர் என வழங்குவர். பொதுப்பெயர் சில இடத்து ஆண்பாற் பொருளிலும், சில இடத்துப்பெண்பாற் பொருளிலும், சில இடத்து இருபாற் பொருளிலும் பயின்றுவரும். இப்பொருள்நிலை அச்சொல் வரும் தொடர் நிலையைப் பொறுத்தது. 'பெண்ணெருத்தி பிள்ளை பெற்றபோது மக்கள் நால்வர் உடன் இருந்து உதவினர்' என்றபோது பெண்கள் பிள்ளை பெறும் போது பெண்களே உடன் இருக்கும் பெருவழக்கம்தான் நமதுநினைவிற்கு வருகின்றது. அதனால், மக்கள் என்ற சொல்லிற்குப் பெண்கள் என்றே பொருள் கொள்கின்ருேம். ஆண் என்ற ஒன்றை ஒழித்துப் பெண்ணைக் குறித்தது அச்சொல். அங்ஙனமே 'வாளேந்திய மக்கள்' என்றபோது ஆடவர்கள் வாளேந்திப் போர்புரியும் பெருவழக்கே நமது நினைவிற்கு வருவதால். மக்கள் என்பதற்கு ஆண்மக்கள் என்று பொருள் கொள்கின்ருேம். பெண் என்ற ஒன்றை ஒழித்து ஆணைக் குறித்தது அச்சொல். இவ்வாறு வருஞ்சொல்லை 'ஒன்ருெழி பொதுச்

சொல்' என்பர். இனி, 'அறிவறிந்த மக்கள்' என்ற தொடரில் 'மக்கள்' என்பது ஆணைக் குறிக்கின்றதோ? பெண்ணைக் குறிக்கின்றதோ? இரு திறத்தாரையும் குறிக்கின்றதோ? என ஐயம் எழுகின்றது. தொல் காப்பியனார்,

'ஆறறிவதுவே அவற்றொடு மனனே'
'மாவும் மாக்களும் ஐயறிவினவே'
'மக்கள் தாமே ஆறறிவினரே'

என்று கூறுவதை மனத்தில் வைத்துக்கொண்டு ஆராய்ந்தால் மக்களாயினார் பெண்ணானாலும் ஆண் ஆனாலும் மனவுணர்வுடையார் ஆதலின், ஆறறிவுடையாரே ஆவர் என்பதை உணர்ந்து மக்கள் என்று இருதிறத்தாரையுமே திருவள்ளுவர் சுட்டுகின்றார் என ஒரு முடிவிற்கு வருவோம். ஆனால், பரிமேலழகியாரோ, மக்கள் என்ற சொல் இவ்விடத்தில் பெண்ணொழித்து நின்றதென உரை கூறுகின்றார். 'அறிவறிந்த மக்கள்' என்றால் 'அறியவேண்டுவனவற்றை அறிதற்குரிய மக்கள்' என்பது பொருளாம். அறிய வேண்டுவனவற்றை அறியப் பெண்களுக்கு உரிமையில்லையாம். ஆதலின், இங்கு ஆண் மக்களே குறிக்கப்படுகின்றனர் என அவர் காட்டுகின்றார். 'அறிவு' என்பது அறிதலைச் செய்வதென அத்தொழின்மேல் நின்றது. காரணமாகிய அறிதலைப் பயந்தே விடுதலின், அத்துணிவுபற்றி அறிந்த என இறந்தகாலத்தார் கூறினார். அறிவறிந்த என்றதனால் மக்கள் என்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது; என்பது பரிமேலழகியாரது விரிவுரை.

மக்கட் பேற்றைப்பற்றிக் கூறவந்த பரிமேலழகியார் இருபிறப்பாளர் மூவரும், மூவகைக்கடனையும் கழிப்பது எப்படி? என்றே ஆராய்ச்சிசெய்யப் புகுந்தார் என முன்னரே எடுத்துக்காட்டினோம். கீழ்பாற் குடியினரைப்பற்றி அவர் கூறுமையும் கண்டோம். அவ்வுரைக் குறிப்பினை உள்ளத்தேவைத்து, இவ்வுரைப் பகுதியினை ஓதினால் பரிமேல்ழகியாரது உள்ளக்கிடை இனிதே விளங்கும். பரிமேலழகியாரது கொள்கைப்படி, அறியவேண்டுவனவற்றில் தலை சிறந்து விளங்குவது திருமறையேயாகும். மற்றையன எல்லாம் அதன் உட்பொருளை விரித்துரைக்கும் நூல்களேயாகும். திருமறையினை இருபிறப்பாளர் மூவரே ஓதல் வேண்டும், அவருள்ளும் ஆண்களே ஓதற்குரியார், பிறர் ஓதின், பெரும்பழி சூழும். எனவே, பெண்களுக்குத் திருமறையினை ஓத உரிமையில்லை; அறிய வேண்டிய திருமறையினை அறியப்பெண்களுக்கு உரிமை இல்லை. 'அறிவறிந்த' என்பதற்கு, அறியவேண்டுவனற்றை அறியும் உரிமை' , என்று

பரிமேலழகியார் உரை கண்டமையின், பெண்களை 'அறிவறிந்த மக்கள்' என்று எவ்வாறு கூறுதல் கூடும்? இக்கருத்துப்பற்றியே மக்கள் என்பது பெண்ணொழித்து ஆணைக்குறித்து நின்றதென உரை கூறுகின்றார். இவ்வளவும் கூறியமையால், பரிமேலழகியாரும் இவ்விடத்தில் பெண்களுக்கு அறிவின்மையைக் கற்பிக்கவில்லை என்பது வெள்ளிடை மலையாம். பரிமேலழகியார் இங்கு எடுத்துரைக்கும் கொள்கை, ஐதிஸாயனரைத் தொடர்ந்து மனுமுதலானோர் எடுத்துரைத்த கொள்கையே என்பதனையும், அதனை ஜைமினியும், வாதராயணரும் மறுத்துரையாடுகின்றனர் என்பதனையும் முன்னரே குறித்துவைத்தோம். எனினும், பரிமேலழகியார் தம் நாளில் வழங்கிய கொள்கையையே தம் உரையில் பொன்னேபோலப் பொதிந்து வைக்கின்றார். திருமறையினை உடன்பட்டவர்களுக்கன்றே இவ்வுரை ஏற்புடைத்தாவது? திருமறை ஓதலை முதன் மூன்று குடியினரிடம் அடகுவைத்து வாழ இதுபோது பலர் ஒருப்படுவதில்லையே. இவர்களை விட்டுத் திருமறையினையும், மனுமுதலோரையும் உடன்படாதவர்கள் இடையே சென்று இக்குறளுக்குப் பொருள் காணப் புகுவோமானால்; அங்கு வேறு வகையாகப் பொருள் கொண்டு 'மக்கள்' என்பது ஆண் பெண் என்ற இருபாலரையும் குறிக்கும் என்றே எடுத்துக்காட்ட வேண்டும். பரிமேலழகியார் கொள்கைப்படியும் திருமறை ஒழிந்தவற்றை ஓதப்பெண்களுக்கும் உரிமையுண்டு. திருமறை ஓதும் சிறப்புரிமையில்லாதவர்கள் திருமறையின் உட்பொருளை அறிந்துய்ய அன்றே பிறநூல்கள் எல்லாம் எழுந்தனவாம். பரிமேலழகியாரது கொள்கையினை உடன்படாதவர்கள் 'ஆண்மக்கள் படிக்கும் நூலனைத்தையும் பெண்மக்களும் படித்தறிதல் கூடும்' என்பர். இவ்வுரிமையைப் பெண்களுக்கு அவர்கள் மறுப்பதில்லை. அவர்களைப் பொறுத்த அளவில், அறியவேண்டியவற்றை எல்லாம் அறியும் உரிமை பெண்களுக்கும் உண்டு; ஆண்களுக்கும் உண்டு ஆதலின் மக்கள் என்பது பெண் குழந்தையையும் குறிக்கும், ஆண் குழந்தையையும் குறிக்கும்.

**தமிழ்த்தாயின் பொதுவுவகை—சிறப்புவுவகை**

இனி, இயற்கை யறிவினைப்பற்றிய குறிப்பொன்று உண்டு. அதுவே 'கேட்டதாய்' என்ற இரண்டாவது குறிப்பு.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்'

என்ற திருக்குறளில் வருகிறது, அச்சொற்றொடர். ஈன்ற பொழுது தாயானவள் தனது வருத்தத்தை எல்லாம் மறந்து குழவிமுகம் நோக்கி மகிழ்கின்றாள்.

'வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்
கவாஅன் மகற்கண்டு தாய்'

மறந்தே விடுவாள் என நாலடியார் பாடுவது காண்க. இஃது எல்லாத் தாயாரும் அடையும் பொது உவகை. இத் தாய்மாரில் அறிவுடைய மகனைப் பெற்றதாய் சிறப்பு உவகை எய்துகின்றாள். தன் மகன் கல்வி கற்றுத்தேர்ந்து பெரியோனாய், அவையத்தே முந்தியிருக்கும்போது, அவனைக்கண்டு, அறிவுடையோர் 'சான்றோன் இவனே' எனப்புகழ் கின்றனர். அதனைக்கேட்கின்ற தாயானவள், பிற தாயாருக்கில்லாத தொரு சிறப்பு வுவகை பெறுகின்றாள். இச் சிறப்பு வுவகை முன்னைய பொதுவுவகையிலும் மிகப்பெரியதாகும். அறிவுடையார், சான்றோன் என்று புகழ்ந்தால்தான் தாய் இன்புறுகின்றாள். அறிவுடையர் அல்லாதவர் சான்றோன் என ஒருவனைப் புகழ்வதில் பொருள் இல்லை; ஆதலின், அதுகேட்டு இன்புறுகிறதில்லை. பாம்பின் கால் பாம்பறியும், சான்றோரைச் சான்றோரே யறிவர்.

அவ்வையின் கால் வழி

இவ்வாறு இன்புறும் இந்தத் தமிழ்த்தாய் எத்தகைய அறிவிற் சிறந்தவள்? பிற தாயரோ தம்மகன் அளவிலாத பொருள் உடையனாய் இன்பத்தில் திளைத்தால் அப்போதுதான் மகிழ்கின்றார்கள். ஆனால், திருவள்ளுவருடைய திருத்தாயோ அறிவ்விலேநாட்டமுடைய சூடாலை, மைத்ரேயி, கார்கி, அவ்வை, காக்கைபாடினி முதலியோரின் வழி வருகின்றவள். இவள், தன் மக்கள் அறிவுடையராய் அவையத்து முந்தி இருந்து உலகிற்கே நன்மை பயப்பதனையே என்றும் வேண்டு கின்றனள். இந்த நோக்கம் அறிவிலாத ஆணுக்கும் பெண்ணுக்கும் இருப்பதில்லை. இன்று எத்துணை மக்கள் பெரியோர் எனப் பெயர் புனைந்துகொண்டு கல்வியறிவினையும், கற்றோரையும் வாயாரத் தூற்றி வருகின்றனர். இதனை எண்ணும் போதன்றோ தமிழ்த்தாயின் அறிவின் உயர்வு விளங்குகின்றது.

உலகுக்குதவி

மற்றொரு வகையாலும் திருவள்ளுவர் புனைந்துரைக்கும் தமிழ்த் தாய் சிறந்து திகழ்கின்றாள். காக்கைக்குத் தன்குஞ்சும் பொன்குஞ்சு. தாயார் அனைவரும் தம் குழவியைக் 'கல்வியே' எனப் புகழ்ந்து போற்றுவர். ஆதலின் தாய் தன் மகனைப்பற்றி அறிந்தமை பிறழ்ந்த உணர்ச்சியாய் முடியினும் முடியும்; எனவே, சான்றோர் புகழ்ந்தபோது தான் சால மகிழ்கின்றாள். அதுவேயுமன்றிச் சான்றோன் எனத்தாயான வள் உண்மையை உணர்ந்தாலும் பயனில்லை. குடத்தில் விளக்கெனத் தன் மகனது நல்லறிவு உலகிற்குப் பயன்படாது நின்றால் தாய்க்கு மகிழ்ச்சி ஏது? வருத்தமே முன்னினும் மிகுதியாகும். உலகினர்க்கு

அவனறிவு பயன்பட்ட காலையில், அவர்கள் அவனைச் சான்றோன் எனப் புகழ்ந்தபோது, தாய் களிப்பதே அறிவுடைய செயலாகும் என்ற அடிப் படையில் திருவள்ளுவர் திருக்குறளினை எழுதுகிறார். தலைசிறந்த நூலென அவர் அறியாரா? அறிந்துவைத்தும் அதனால் மகிழ்கின்றார் இல்லை; தமிழ்க்கழகத்தமர்ந்த பெரியோர்கள் அதனைத் திருநூல் எனச் சிறப்பிக்கவேண்டும் என நாடுகின்றார்; தம்மூர் விட்டுப் பொற்றா மரைக் குளத்திற்குப் போகின்றார். இவ்வாறு அவர் செய்கின்றமை அவர்க்கு இயற்கை அறிவிலாமையாலோ? அன்று, அன்று. அறிவுடை மையால் தான் அவ்வாறு செய்கின்றனர். தம்நூல் நன்னூலே ஆயினும், பிறர் அதனைப் போற்றிப் படியாதபோது, அதனால் பயன் என்னை? தாமே படித்து மகிழ ஒரு நூல் எழுதுகின்றாரா? திருவள்ளுவரைப் போலவே அவர் புனைந்துரைக்கும் தமிழ்த்தாயும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரில் தலைசிறந்தவள். ஆதலின், தன் புதல்வன் உலகி னர்க்குப் பயன்பட்டபோதன்றி மகிழ்ச்சிகொள்கின்றதில்லை. அறிவுடை யன் எனத் தன்மகனைப் பலர் புகழ்வதுகேட்டு எல்லாத் தாயாரும் மகிழ்ச் சியடைவர். ஆனால், முன்னெழுந்த பொது உவகையளவாகவே இவ் வுவகை நின்றுவிடும். அறிவுடைய தாய் ஒருத்திதான் தனக்கென வாழாது உலகின் உயர்வையே கருதித் தன் மகனது நல்லறிவு கண்டு, முன்னைப் பொது உவகையினும் மிகுதியாகச் சிறப்பு உவகை கொள்- கின்றாள். ஈன்ற பொழுதிற் பெரிதுவப்பது சான்றாண்மை நிறைந்த் தாயின் செயலாகும். எனவே 'பெரிதுவக்கும்' என்பதும் தமிழ்த்தா யின், தனிப் பெருஞ் சிறப்பினை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

### அறிவு நாட்டம்

அவனுடைய உருவும், பொருளும், வடிவும், வன்மையும் ஆண்மையும், வன்மையும் கண்டபோது அவள் அத்துணை மகிழ்ச்சி கொள்வதில்லை; அவையத்து முந்தியிருக்கும் அவனது அறிவு நிறைந்த சான்றாண்மை கண்டே அகமகிழ்கின்றான்.

### தகுதி நாட்டம்

சான்றாண்மை சிறிதும் இல்லாதவரும் இந்நாளில் அவையத்து முந்தியிருக்கக் காண்கிறோம்! பொருளோ, அச்சமோ, குடிப்பிறப்போ வழியாக அவர் முதனிலை பெறுகின்றனர். அவ்வாறு தன் மகன் முத னிலை பெற்றால், தமிழ்த்தாய் இன்புறுகிறதில்லை. சால்பே வழியாக அந்நிலையை அடைந்தபோது அறிவிற் சிறந்த சான்றோர் அனைவரும் அவனே அந்நிலைக்குத் தக்கவன் என்று புகழ்வதைக் கேட்ட பின்னர் தான் தமிழ்த்தாய்க்கு மகிழ்ச்சி பொங்குகின்றது. 'கேட்டதாய்' என்ப தும் தமிழ்த்தாயின் பெருமையையே பேசுகின்றது.

**தாயறிவு**

தமிழ்த்தாயோ தனிப் பேரறிவு உடையவள்.

'தம்மிற் றம்மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது'

என்பது மேற்கூறிய குறளுக்கு முந்திய குறள். அக் குறளில் வரும் 'தம்' என்பதற்குத் 'தாய் தந்தையர்' என்று பரிமேலழகியார் பொருள் கொண்டுள்ளார். தாயும் அறிவுடையாள். தந்தையும் அறிவுடையான். இவ்விருவரும் யாது வேண்டுகின்றனர்? தம் மக்கள் தம்மினும் அறிவுடையாராய் விளங்கவேண்டித் தவம் கிடக்கின்றனர். ஏன்? மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனியது அதுவேயன்றோ? எனவே உலகம் உய்யவேண்டிப் பிள்ளை பெறுகின்ற தமிழ்ப் பெருந்தாய் அறிவிற் சிறந்தவளேயாகின்றாள்.

**ஏடெழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்**

''தம்மிற் றம்மக்கள்'' என்ற குறளுக்கு 'ஈண்டு அறிவு என்றது இயல்பாகிய அறிவோடு கூடிய கல்வி யறிவினை. மன்னுயிர் என்றது ஈண்டு அறிவுடையார் மேல் நின்றது; அறிவுடைமை கண்டு இன்புறுதற்குரியார் அவராகலின், 'இதனால் தாய் தந்தையரினும் அவையத்தார் உவப்பர் என்பது கூறப்பட்டது' என்று பரிமேலழகியார் விரிவுரை செய்கின்றார். இவர் உரைப்படி 'தம்மின்' என்பது 'அறிவுடைமை' என்பதை. நேரேசேராது, இனிது என்பதைக்கொண்டு முடியும். தாமின்புறுவதைவிட உலகினர் இன்புறுகின்றனர் என்றபடி. 'தாய்தந்தையரினும் அவையத்தார் உவப்பர்' என்ற இடத்தில் 'தந்தையினும் அவையத்தார் உவப்பர்' என்று சில ஏடுகளில் காணக்கிடக்கின்றது. இஃது ஏடெழுதப் புகுந்தவனின் ஏழைக் குறும்பாகும். 'தம்மறிவினும் தம் மக்கள் அறிவுடைமை மக்களுக்கு இனிது' எனப் பொருள் கொள்ளவும் இடம் இருத்தலின் 'தம்' என்பது 'தாய்தந்தையர்' என்று இருவரையும் சுட்டுவதாகக் கொண்டால் 'தாயும் அறிவுடையவள் ஆகிவிடுவாள்' என ஏடெழுதியவன் அஞ்சினான் போலும்! அதைத் தடுக்க எண்ணி, ஏடெழுதிய குறும்பன் கண்டதொரு போலியுரையே மற்றைய தென்க. பரிமேலழகியார் 'தாய் தந்தையர்' இருவரையுமே குறிக்கின்றார் என்பது பின்வரும் 'ஈன்ற பொழுதின்' என்ற குறளின் கீழ்த் 'தாய் உவகைக்கு அளவின்மையின் அஃது இதனால் பிரித்துக் கூறப்பட்டது' என விரிவுரை எழுதுகின்றதின் நின்றும் வெளியாகிறது. 'தம்மிற் றம்மக்கள்' என்ற குறளில் தாய் தந்தையர் இன்புறுவதனையும், அதற்கு மேலும் அவையத்தார் இன்புறுவதனையும், திருவள்ளுவனார் கூறுகின்றார். எனவே, தாய் இன்புறுவதும் அங்கேயே கூறப்

படுகின்றது. பின்னும், ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும், என வேறு ஒரு குறள் கூறுகின்றதேன்? இந்தத் தடைக்கு விடையாகவே, பரிமேலழகியர், 'தாயுவகைக்கு அளவின்மையின் அஃது இதனல் பிரித்துக் கூறப்பட்டது' என்று விளக்கம் எழுதுகின்றார். எனவே, மேற்குறளிலும் தாயைப்பற்றித் திருவள்ளுவர் கூறுகின்றார் என்பதைப் பரிமேலழகியார் இங்கும் இவ்வாறு எடுத்துக் காட்டுகின்றனர்.

**மெய்யுரை**

இவ்வாறு தமிழ்த்தாயின் அறிவின் பெருமையை அறிவதற்குப் பரிமேலழகியார் காட்டிய நயங்களே துணைசெய்கின்றன. இதுவரை யாம் கூறிவந்தவை அனைத்தும் அவர் எழுதிய குறிப்புரையின் விரிவுரையே ஆகும்.

''தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிகமகிழும், தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையார் சொல்லக் கேட்டதாய், கவானின்கட் கண்ட பொது உவகையினும் சால்புடையன் எனக் கேட்ட சிறப்புவகை பெரிதாகலின் பெரிதுவக்கும் எனவும் . . .கூறினர். அறிவுடையார் என்பது வருவிக்கப்பட்டது; சான்றோன் எனற் குரியார் அவராகலின், தாயுவகைக்கு அளவின்மையின் அஃதிதனற் பிரித்துக் கூறப்பட்டது'' என்பது பரிமேலழகியார் இத்திருக்குறளுக்குக் காண்கின்ற உரை. 'கேட்ட தாய்' என வள்ளுவர் ஏன் கூறுகின்றார் என்பதனை முன்னரே விளக்கினோம். 'அறிவுடையார் என்பது வருவிக்கப்பட்டது, சான்றோன் எனற் குரியார் அவராகலின்' என்று இங்கும் 'மன்னுயிர் என்றது ஈண்டு அறிவுடையார் மேனின்றது; அறிவுடைமை கண்டு இன்புறுதற்கு உரியார் அவராகலின்' என்று முன் குறளின் உரையிலும், பரிமேலழகியார் எடுத்துக் காட்டுகின்ற குறிப்புக்கள், யாம்சொல்லி வந்தமையை வற்புறுத்துகின்றன. அறிவுடையாரே அறிவுடையோனின் பயனறிவர். அவர் அறிந்தபோதுதான் குடத்தில் விளக்கென நின்றவன் குன்றின் மேலிட்ட விளக்காகின்றான். அறிவுடையார் அறிந்து மகிழ்ந்தமை, அவர்களது வாய்மொழி வழியாக வெளியாகின்றது. அது கேட்ட போது, அறிவுடையோர் மகிழ்வர். சான்றோன் எனக்குரியார் அறிவுடையோர். அதனைக் கேட்டதற்குரியார் அவனும் அவனைச் சேர்ந்தாரும் உலகமும் என்க. ஈதே 'கேட்ட' என்ற சொல்லின் நுட்பப் பொருள்.

**போலியுரையோ?**

ஆனல், நாம் மேல் எடுத்துக்காட்டிய பரிமேலழகியாரது உரைப்பகுதியில் ... எனப்புள்ளியிட்ட இடத்தில் ''பெண்ணியல்பால் தானுகை அறியாமையின் 'கேட்டதாய்' எனவும்'' என்பது காணப்படுகின்றது. இவ்வுரைப்பகுதி தான் பெண்களை அறிவிலிகள் ஆக்குவது.

ஆனால், நாம் முன் எடுத்துக் காட்டியபடி மூதறிவுடைய தமிழ்த்தாயை எந்த நாவினுல் அறிவிலி என்று வாய் கூசாது கூறக்கூடும்? இனிப் பரிமேலழகியார் தாமே எடுத்துக்காட்டும் 'சான்ரோன் எனற் குரியார் அவர் ஆதலின்' என்ற நுணுக்கம் இவ்வுரையோடு ஒரு சிறிது மாறு கொள்வதால். இதுபோலியுரை போலும் என முடிவு செய்ய இடம் உண்டு. தாய் அறியாமையில் கிடப்பதுகண்டு, அறிவுடையோர் அவளுக்கு அறிவு கொளுத்தவேண்டி ஒருவனைச் சான்ரோன் எனப் புகழ வருவதில்லை. 'தாய் தந்தையர்' என்ற உரைப்பகுதியினைத் 'தந்தை' எனத் திருத்திய ஏழைக்குறும்பன். இதனையும் இடையே செருகிவிட்டானோ என ஐயம் எழுகின்றது. 'எழுதியவன்ஏட்டைக் கெடுத்தான்' என்ற கதை 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்; பாட்டைக்கெடுத்தான்; உரையைக் கெடுத்தான்; பெண்ணைக்கெடுத்தான்; உலகைக் கெடுத்தான்' என்ற கதையாக முடிந்தது போலும்.

**ஒரு மணமா? ஓராயிர மணமா?**

பெண்கள் கல்வியறிவு கேள்வியறிவுடையவர்களாக விளங்கலாம்; இயற்கையறிவு உள்ளவர்களாகத்திகழலாம். எனினும், அவர்கள் மனம் பெரும் பேதைமைத்தாகலின் பேதுற்று ஒரு வழிப்படாது பலவழியும் சென்று தயங்கும் என்பர் ஒருசாரர். ஆதலின், அவர்களைச் சிறையிலடைத்துத்தான் காத்தல்வேண்டுமென்று, அன்னோர் முடிவுகட்டுவர். மன நொய்மையையும் மனநெகிழ்ச்சியினையும் உண்மை அறியாது மயங்கி உணர்தலால்தான் இவ்வாறு கூறுவர். கொண்டதை விடாத கொள்கை பெண்களுக்குப் பெரிதும் உண்டு. கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமையே மடமை எனப்படும் அது பெண்களுக்கு உள்ளதோர் இயல்பு. மனநெகிழ்ச்சி உடையோர் மணத்திண்ணியராதலும் இயல்பே. திருவள்ளுவனார் இதனைப்பற்றி என்ன கூறுகின்றார் என்பதே இங்கு ஆராய்ச்சி.

'இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல மாறு படும்'

என்ற குறளினை எடுத்துக்காட்டித் திருவள்ளுவனாரும்.

'மடந்தையர் வதனம் நல்ல மதிஎனு மாற்றம் வானோர்
கடைந்தவா னமுத மென்னக் கவினுமென் றுலுமுள்ளம்
விடங்கொடு புரிந்த வாள்போல் வெங்கொலை விரும்புஅந்த
அடங்கலார் மனஞ்செல் வண்ணம் ஆரறிந்தறைய கிற்பார்'

என்ற பாகவதக் கொள்கையினையும்,

''பெண்ணெனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்க
உண்ணிறை யுடைய வல்ல ஓராயிர மனத்த வாகும்'

எனும் சிந்தாமணிக் கொள்கையினையும் உடன்படுகின்றவரே என்று சிலர் எடுத்துக் காட்டுவர். பரிமேலழகியார்,

'பெண்மனம் பேதின் றொருப்பேன் என்னும்
எண்ணில் ஒருவன்'

என்ற வளையாபதிச் செய்யுளை எடுத்துக்காட்டுகின்றமையும் மேனேக்-காகப் படிப்பாருக்கு மேற்சொன்ன கொள்கையை வற்புறுத்துகின்றது போலத் தோன்றும். இவ்வாறு, திருவள்ளுவர் பெண்களை இழித்துக் கூறுவதாகப் பொருள்கொள்வோமானல், பிறகுறள்களுக்கு மெய்யுரை சிறிதும் காணுது தத்தளிப்போம்.

**ஒருமனப் பெண்டிர்**

'ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு'

என்ற குறளுக்கு என்ன பொருள் கொள்வது? பரிமேலழகியார் கவராத மனத்தினையுடைய மகளிர், நிறையின் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக்கொண்டு ஒழுகுமாறு போலப் பெருமைக்குணமும், ஒருவன் நிறையின் வழுவாமல் தன்னைத்தான் காத்துக் கொண்டொழுகுவானாயின் அவன்கண் உண்டாம்'' என்று இக் குறளினுக்குஉரை காண்கின்றார். அறிந்துகொண்டு அறியாததை விளக்குகின்ற முறையினைப் பின்பற்றி, உலகறிந்த ஒருமனப் பெண்டிரின் உயர்நிலையை உவமையாகக் கொள்கின்றார் திருவள்ளுவர். ஒருமனப் பெண்டிர், தம்மைத்தாமே காத்தல் போல சான்றோரும் தம்மைத்தாமே காத்தல் வேண்டும் என்று கூறுகிறார். ஒருமனப்பெண்டிர், மனம்திண்ணியராய்ப் பிறருதவியின்றித் தம்மைக் காத்துக் கொள்வது உலகறிந்தது ஒன்று என்பது திருவள்ளுவனர் கொள்கை. இவ்வாறு ஒருமனப் பெண்டிர் என மகளிரை உயர்த்திப் பேசுபவர், பெண்ணிழிவு பேசி அவர்களை இகழ்வாரோ?

**மனத்திண்மை**

இதுவரையும் நாம் ஆராய்ந்த திருவள்ளுவர், பெண்களை இழித்துப் பேசும் கொள்கையுடையவர் அல்லர். மேலும் 'ஒருமை மகளிர்' என்ற ஓரிடத்திலேயோ, திருவள்ளுவர் பெண்களைப் புகழ்கின்றார்? பெண்களது மனத்திட்பத்தை,

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.'

என்றும் அன்றோ புகழ்கின்றார்? கற்பாவது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கமுடையதொரு மனநிலை. திண்மை என்பதற்குப் பரிமேலழகியார் ''கலங்காநிலை'' எனப் பொருள் கூறுகின்றார். இம் மனத்திட்ப முடைமையால்தான், ஒருமை மகளிர் தம்மைத்தாமே

காத்துக்கொள்வர் என்கின்ருர் திருவள்ளுவஞர். முன்னும்,

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

எனச் சுமத்தற்கரிய சுமையைப் பெண்களது தோல் மேல் அவர் தூக்கி வைத்திருக்கின்ருர்.

*சிறையிலடைப்பதா?*

எனவே, மனத்திட்பம் ஒன்றே வேண்டுவது. அஃதொன்றே, அவர்களைக் காக்கவல்லது. வீட்டிலடைத்துப் பூட்டுவது நிறையக் காப்பது யாண்டும் இல்லை. அவர்களுடைய மனம் பிறழுமாஞல் சிறையில் பூட்டித்தான் என்ன பயன்?

'சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை'

என்று வீட்டில் அடைப்பாரது கொள்கையை மறுத்துரையாடுகின்ருர் வள்ளுவஞர். ஓராயிரம் மனத்தினர் என்று எண்ணி இருந்தால் இவ்வாறு பாடியிருப்பாரோ? ஆஞல், இங்கோர் ஐயம் எழுவதும் இயல்பே. நிறைகாக்கும் காப்பினைத் தலை என்று சொன்னமையால் சிறைகாக்கும் காப்பினைக்கடை என்றேனும் கொள்கின்றனர் அன்ருே? ஆம், அவ்வாறே கொள்கின்றனர் என்றுகூற,ஏற்படும் இழுக்கென்னை? அலாவுதீன் என்ற அரசர்க்கரசன், பதுமாவதி என்ற அரசியின் மேல் காதல்கொண்டு எவ்வாறேனும் அவளைத் தன்னுடைய அரண்மனைக்குக் கொண்டு செல்வதெனப் படையெடுத்து வந்தான். அந்த நிலையில் அமைதியில்லாத அந்த நாளில் கொடுங் கோலனது கொடுமைக்கெதிரில் என்செய்தல் கூடும்? அந்த நிலையில் தான், சிறைகாப்பது. ஆஞல் சிறிதளவே, காப்பாகும் அலாவுதீன் வெற்றியடைவான் என அறிந்ததும் நிறையே காவலாகக் கொண்டு அப்பெண்ணரசியாம் நமது கடவுள் தீக்குளித்தாள். வீட்டிலடைப் பதனை இற்செறித்தல் எனக்கூருது சிறை என இழித்துரைப்ப தஞலேயே திருவள்ளுவஞரது உள்ளக்கிடக்கை இனிது புலஞக வில்லையா? ஒரு சொல்லில் உலகை விளக்கும் பெரியார் அன்ருே அவர்?

*இருமனப் பெண்டிர்*

இவ்வாறு பழங் கொள்கைகளைத் தெளிவாக மறுத்துரையாடு கின்ற திருவள்ளுவர் பெண்களை எவ்வாறு பழிப்பர்? ஆஞல், ''இனம் போன்று'' என்ற குறளின் பொருள்தான் என்னை? இவ்வளவும் கூறி வந்தமையினின்றுமே அக்குறளின் அரும்பொருளும் புலஞகி இருக்கும். ஒருமனப் பெண்டிரைப் பற்றி அக்குறள் ஒன்றும் கூற வில்லை என்பது மறக்கமுடியாத உண்மையாகும். எனவே, ஒருமனப்பெண்டிரில்லாத

வராய் நின்ற இருமனப் பெண்டிரைப்பற்றியே இக் குறள் எழுந்தது எனல் வேண்டும். பாகவதம் கூறுவதும் அத்தகையோரைக் குறித்தே யன்றிக் கற்புடைய மகளிராகிய ஒரு மனப் பெண்டிரை அன்று என்பதனை அந்நூல் முழுதினையும் ஓதியவர் நன்கு அறிவர். இருமனப் பெண்டிர் எனப் பொருள் கொள்ளாது மகளிரது பேதுறும் பேதைமை நிலையையே குறிப்பதாகப் பொருள் கொண்டால், உவமையானது பொருந்தாது போதலும், பொருள் சிறவாது நிற்றலும் காண்க. இந்தக் குறளின் கருத்துத்தான் என்னை? பகைவர்கள் நட்பினரைப் போல வெளிக்குக் காட்டிக்கொண்டு நம்முடன் உறவாடுவர்; அவர்களுடைய நட்போ போலி நட்பேயாகும். அவர்கள் நம்முடன் நட்பாடும்பொழுதும் அவர்களுடைய மனம் உள்ளுக்குள்ளே நம்முடன் பகைத்து நிற்கும். அற்றம் பார்த்து அப்பகையும் வெளித்தோன்றும். ஈதே இக் குறளின் பொருள். பேதுற்ற பெண்டிர் மனம், உள்ளுக்குள்ளேயே வேறொன்றினை எண்ணி நிற்பது இயலாதாம். அவ்வாறு நிற்பின் அது கலக்கநிலையன்றாம்! வஞ்சக நிலையாம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவாரைப் பேதையர் என்று பேசுவதில்லை. அன்றியும், எப்பொழுதும் மாறிக்கொண்டே நிற்கும் மாதரது மனநிலை ஒன்று உண்டானால், அஃது இவ்விடத்திற்குச் சிறந்த உவமையாகாது. ஆனால், இருமனப் பெண்டிர் எனும் வரைவின் மகளிரது மனநிலையோ சிறந்த உவமையாகும். வரைவின் மகளிரைத் திருவள்ளுவனார், 'பிறநெஞ்சிற் பேணிப் புணர்பவர்' என்று புனைந்துரைக்கின்றார். இப்புனைந்துரை இனம் போன்று இனமல்லாதாருக்கும் பொருந்துமன்றோ? இனமல்லாதார் இனம்போன்று வெளிக்குக்காட்டிக் கொள்வது போல, வரைவின் மகளிரும் அன்புள்ளவர் போலக்காட்டிக் கொள்வர். தமது சூழ்ச்சி முடிந்ததும் இனம் போன்று இனமல்லாதார் தம் முன்னைய நிலையைக் காட்டிப் பகைத்து எழுவர். வரைவின் மகளிரும், பொருளுறிஞ்சி முடிந்ததும் தமது பசையற்ற மனநிலையைக் காட்டித் தம்மைக் கட்டியணைத்தவரை வீட்டின் வெளியே தள்ளிக் கதவடைப்பர். இவ்வாறு உவமையும் பொருளும் பொருத்தமுற்றுச் சிறந்து விளங்குவதால் இவ்வுரையே ஏற்றதென்க. வளையாபதிச் செய்யுளும் வரைவின் மகளிரையே குறிப்பதாகக் கொண்டால், பரிமேலழகியார் கொண்ட உரைக்கும் இவ்வுரைக்கும் முரண்பாடில்லையாம்.

## தொகுப்பு

எனவே, பெண்களைப் பிறர் எல்லாம் அறிவிலிகள் எனப் பேசுவதைத் திருவள்ளுவர் மறுத்துரையாடி அறிவிற் சிறந்த தமிழ்த்தாயினைப் புனைந்துரைக்கின்றார்; பேதுறும் பெண்களின் மனநொய்ம்மையை

மாதரின் இயல்பெனக் கொள்ளாது ஒருமை மகளிரின் மனத்திண்மையைப் புகழ்கின்றார்; வீட்டிலடைப்பதனைச் சிறை என இகழ்ந்து பேசி, நிறைகாக்கும் காப்பே தலை என முடிவுகட்டிப் பெண்கள் தம்மைத் தாமே காத்துக்கொள்வதை வற்புறுத்துவதோடு அதனை உலகறி பொருளாகக் கொண்டு ஒரு சிறந்த தமிழ் உவமையும் காண்கிறார்.

---

# 3. பெண் பேயா? பேய்த் துறவா?

## இயற்கைத் துறவு

**து**றவினைப் புகழ்வோர் பெண்களைப் பழிப்பது, இந்நாளில், இயல்பாகிவிட்டது. பெண்களைத் துறப்பதே எதனினும் அரியதனெ அவர்கள் எண்ணுகிறார்கள் போலும்! திருவள்ளுவனாரும் துறவியல் ஒன்று கூறுகின்றார். ஆதலின், 'அவரும் பெண்களுக்கோர் இழிவு தேடுகின்றாரோ? என ஐயம் எழுவது இயல்பே. திருவள்ளுவர் கூறுவது இயற்கைத் துறவே யன்றிச் செயற்கைத் துறவு அன்று. துறவு நிலை நின்றார், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் மெய்யுணர்ந்த பெரியோர் ஆவர். துறவு நிலைக்கு அடிப்படையாவது அருளே ஆகும். அவ்வருளோ, திருவள்ளுவனார் கொள்கைப்படி, அன்பின் குழவியாகும். இவ்வருளென்னும் அன்பின் குழவியை வளர்ப்பது, இல்லறத்தில் நின்றுதான் என்க. தன் மனைவிமாட்டும், மக்கள்மாட்டும், உற்றார் உறவினர் இடத்தும், நண்பர் நன்றி செய்தார் என்ற இவர்கள் இடத்தும், அயலார்பாலும் அன்பு பூண்டு ஒழுகிச் சிறுகச் சிறுக அன்பினை உலகம் முழுவதும் பரப்புகின்ற உளவினைத் திருவள்ளுவனார் இல்லறவியலில் எடுத்துக் காட்டுகின்றனர்.

'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு'

என்று இல்லறவியலின் முடிவிலே அவர், இவ்வன்பு, உலகெல்லாம் பரந்து நின்ற நிலையைச் சுட்டுகின்றார். இன்னார் இனியார் என்பதின்றியும், எதிர்பார்ப்பது ஒன்றின்றியும் எல்லோரிடத்தும் அன்பு பூண்டு ஒப்புரவொழுகலன்றோ அருளாவது? எனவே, இல்லறவியல் அருளோடு முடிகின்றது. அவ்வருள் மெய்யுணர்வில் முடிவதனைத்துறவற இயலில் கூறுகின்றார் திருவள்ளுவனார். இவ்வாறு அமைந்து கிடக்கும் அவருடைய நூலானது இயற்கைத் துறவையே கூறுகின்றது என்பதுவெளிப்படை. ஆனால், செயற்கைத் துறவினைப் பற்றிய குறிப்புக்கள் அங்கும் இங்கும் இல்லாமல் இல்லை.

**நோன்பும் வேளாண்மையும்**

இல்லறத்தின் நின்றும் மனத்துறவு பெற்ற மேலோரையே திருவள்ளுவர் சிறந்தவர் எனப்புகழ்கின்றார். அவர்கள், பிறர்க்கு வேண்டியவற்றைத் தந்தும், கொடுத்தும், ஈந்தும், நல்வழியில் அன்னோரை நிலைநிறுத்துகின்றார்கள். அவர்கள் தாமும் தவம் பூண்டு மெய்யுணர்வு எய்துகின்றார்கள். அவர்கள் ''தம் கருமம்'' செய்கின்றார்கள்; பிறர் கருமமும் செய்கின்றார்கள்.

'ஆற்றி னொழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து'

இல்லறத்தின் சிறப்பியல் வேளாண்மை (தானம்) ஆகும்.

'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு'

'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற்பொருட்டு'

என வருதல் காண்க. துறவறத்தின் சிறப்பியல்போ நோன்பு (தவம்) ஆகும். இவ்விரண்டையும் ஒருங்கே செய்வாரே தலைசிறந்தார். அவர்களது புகழையே திருவள்ளுவர் கூறுகின்றனர்.

'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை'

என்ற குறளின் உரையில் ''ஒருவன் தன்மனத்தோடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின் அவன் தவமும் தானமும் ஒருங்கு செய்வாரினும் சிறப்புடையன்'' எனக் கூறுகின்றார் பரிமேலழகியார். இப்பெரியாரே,

'தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்'

என்ற குறளின் உரையில் ''தானமாவது அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடும் கொடுத்தல், தவமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின. பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின் மேலும் நின்றன'' எனக் கூறுகின்றனர்.

**அகத்துறவு**

நீத்தார் பெருமையிலும் இல்வாழ்வாரின் பெருமை சுட்டப் படாமல் இல்லை.

'ஐந்தவித்தா ஞற்றல் அகல்விசும்பு ளோர்கோமான்
இந்திரனே சாலுங் கரி'

என்ற குறளுக்கு இரண்டு கதைகள் காட்டப்படுகின்றன. ஒன்று அகலிகையின் கதை; மற்றொன்று அகத்தியர் வெகுண்டு வைத போது பாம்பாய் ஓடிய நகடனெனும் இந்திரன்கதை. இங்குக் குறிக்கப் படுகின்ற லோபாமுத்திரையின் மணாளராகிய அகத்தியரும், அகலி கையின் மணாளராகிய கௌதமரும், இல்லறத்தின் நின்றுமே மெய் யுணர்ந்த பெரியோர் ஆவர். மனத்துறவடைந்த பெரியோர் ஆதலின், அவர்களையும் நீத்தார் எனப் புகழ்கின்றார் திருவள்ளுவர். ஆனால், சைனப் பெரியோர் இக் குறளுக்குக் கூறும் பொருள் வேறு. ஒருயிர் அருகனாகும் நிலையில், உலகில் பல நற்குறிகள் தோன்றும். இந்திர னது பாண்டு கம்பளம் எனும் வெண்போர்வை நடுங்கும். அதனால் இந்த உண்மையினை அறிந்து, அருகன்நிலை அடைவோர் நடந்து செல் லத் தாமரைகளைப் பரப்பி அவரை இந்திரன் வரவேற்பானும். இத னையே இந்தக் குறள் குறிப்பது என்பார்கள் அவர்கள். எல்லாம் கடந்த நிலையைப் பற்றியது இஃது ஆதலின், இதனைப்பற்றி இங்கு நாம் ஒன்றும் கூறுவதற்கு இல்லை.

'மனத்துக்கண் மாசில னாத லனைத்தறன்
ஆகுல நீர பிற'

என்று அறத்தினைச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்த திருவள்ளுவனார், அகத்துறவை அன்றிப் புறத்துறவைப் புகழார் எனச் சொல்லுதல் வேண்டுமோ? புறத்துறவு, வெறும் ஆரவாரமே என்று அவர் வற் புறுத்துகின்றார்.

'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்.'

'மயிரினை நீட்டி வளர்த்தல் வேண்டும், மொட்டையடித்தல் வேண்டும், துவராடையுடுத்தல் வேண்டும், நீரிடை மூழ்கல் வேண்டும்' என்று வற் புறுத்துவோரை, மறுத்துரையாடுகின்றது இக்குறள். புறத்துறவின் பயனின்மையை எடுத்துரைத்ததோடு நில்லாது, அகத்துறவு இல்லாத போது, புறத்துறவு பெரும்பழியாகும் என இடித்துரைக்கின்றார் வள்ளுவர்.

'நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்;'

'மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்'

என வருதல் காண்க. எத்தகையோர் ஆயினும், அவா ஒழிந்தவரே பெரியோர். மற்றையோர் துறவிகள் போலப் புறத்தே ஒழுகினல் பயன் என்னை!

'அற்றவர் என்பார் அவாவற்ருர் மற்றையார்
அற்ருக அற்ற திலர்.'

சனகனும் முனிவர்களும் உடனிருந்து அறிவு நூல் ஓதுகின்றனர். அரண்மனையில் தீப்பற்றியதென்ற செய்தி இவர்கள் காதில் விழுகின்றது. முனிவர்கள் தமது சுரைக் குடுக்கையையும் கிழிந்த துணியையும் காப்பாற்ற ஓடுகின்றனர். அரண்மணைக்குரிய அரசனே கற்பதில் ஊன்றிய கருத்துடையவனுய் ஓதுவதொழியாது நிற்கின்ருன். அற்றவர் என வெளி வந்த முனிவர்கள் அற்றவரோ? இல்லாளோடும் அரசின் செல்வத்தில் திளைத்து நின்ற சனகன் அற்றவனே!

'அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு;'

'உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.'

ஐந்தடக்க லாற்றினல் இல்லறத்தானே ஆயினும் தலை சிறந்த துறவியாகின்ருன். பின், விடுதல் என்ருல் என்னை?

'யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்;'

ஈதே துறவு. துறவியேனும் எல்லாவற்றையும் விட்டானே? உணவை விட்டானே? யான் எனதென்னும் பற்றினை விடுவதே துறவு ''அற்றது பற்றெனில் உற்றது வீடு'' பற்றை விட்டவன் இல்லறத்தானயிருந்தால் வரும் இழுக்கென்னை? பற்றை விடாதவன் தனது ஏழ்மையைப் பெருமைப்படுத்தி துறவு எனக் கூறிக்கொள்ளல் ஏழைக் கிறுக்கேயன்றி வேறன்று.

**துறவறத்தில் இல்லறம்**

துறவறத்தில் கூறிய பல குறள்கள் இல்லறத்தானுக்கும் ஏற்றனவாய் இருத்தல் காண்க.

'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள:' (அருளுடைமை)

இக்குறள் பொருட்செல்வம் பெற்ற பெரியானை நோக்கி அவன் உயர் நெறியடைய வழிகாட்டுகின்றதாகும்

'தினற்பொருட்டால் கொள்ளா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்:' (புலாலுண்ணமை)

பொருளைத் துறந்த துறவி விலைகொடுத்து ஊன் வாங்குவது எங்ஙனம்? ஆதலின், இஃது இல்லறத்தானை நோக்கிக் கூறியதாகும். இனித் தவமாவது யாது?

'உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு;' (தவம்)

இதனை எல்லா இல்லறத்தாரும் மேற்கொள்ளல் அரிதாயினும், அவரிற் சிறந்த சிலரேனும் கைக்கொண்டு ஒழுகவில்லையோ? காந்தியடிகளினும் தவத்திற் சிறந்தார் யார்? ஆனால், அவர் துறவி என வெளிவந்தார் இல்லை.

'இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்' (தவம்)

என்ற குறள் இல்லறத்தாரையும் குறித்ததாகும். இலர் என்பது அறிவில்லாதாரைக் குறிப்பதோடு பொருள் இலாதாரையும்குறிக்கின்ற தெனப் பரிமேலழகியார் உரை கூறுகின்றனர். பொருளைத் துறந்தாரிடத்தே பொருளின்மையைக் குறித்துப் பேசுவானேன்? இல்லறத்தாரும், தவம் மேற்கொள்ளவேண்டி, இக்குறளினை வள்ளுவர் ஓதியிருத்தல் வேண்டும்.

'வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்'

என்ற குறளில், ''ஈண்டும்'' என்பதற்கு 'இல்லறமாகிய இந்நிலையிலும்' என்று பொருள் கொள்ளுதலும் ஏற்புடைத்தே. பலரும் நின்ற நிலை. இல்லற நிலையாதலின், அதனை அண்மைச் சுட்டால் குறித்தல் தக்கதேயாம். கூடாவொழுக்கம் என்ற பிரிவு, புறத்துறவை இழித்துரைப்பதாகும். கள்ளாமையைப்பற்றிக் கூறுகின்றபோது இல்லறத்தாருக்கும் ஒருதிருமொழி ஓதுகின்றார் திருவள்ளுவர்.

'களவினா லாகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும்.'

களவினாலாகிய ஆக்கம், எல்லாம் துறந்த துறவிகட்கு ஏது?

'கள்ளார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு'

என்பது, புத்தேளுலகு தேடும் இல்லறத்தாருக்குப் பெரிதும் பயன்படுவதொரு குறளாம். ''பொய்யாமை யன்ன புகழில்லை'' என்பது, புகழ்வேண்டிய இல்லறத்தானைச்சுட்டிக் கூறுகின்ற தன்றோ? ''மனத்தொடு வாய்மை'' என்ற குறளில், வேளாண்மையும் நோன்பும்

ஒருங்கு செய்வாரைப்பற்றிக் கூறுகின்றதை முன்னரே கண்டோம். வெகுளி என்பதைப்பற்றிக் கூறுகையில்,

'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமாப் புணையைச் சுடும்'

என எழுதுகின்ற குறள், இனத்தாரோடு வாழும் இல்லறத்தாருக்கும் பொருத்தமானதாகும். இன்னா செய்யாமையைப் பற்றுக் கூறிம்,

'சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்'

என்ற குறளில் ''சிறப்பீனும் செல்வம்'' என்பதற்கு மணக்குடவர், ''மிகுதிதரும் செல்வம்'' எனப் பொருள் கொள்கின்றார். அவ்வாறானால், இக்குறள் செல்வத்தினைத்தேடி நிற்கும் இல்லறத்தாரை நோக்கிக் கூறியதாகும். கொல்லாமையை வற்புறுத்தும்,

'பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை'

என்ற குறளும்,

'நன்றாகு மாக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கம் கடை'

என்ற குறளும், பகுத்துண்டு வாழ்தலையே பேரறமாகக் கொண்டு அதற்காக ஆக்கந்தேடி நிற்கும் இல்லறத்தாரை நோக்கிக் கூறுகின்றன வாகும். நிலையாமையை எடுத்துரைக்கின்ற திருவள்ளுவர், செல்வ முடைய இல்லறத்தாரையும் தட்டி எழுப்பி,

'அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்'

என்று இடித்துரைத்து நல்வழிப்படுத்துகின்றார். துறவினைக்கூற எழுந்த ''யானென தென்னும் செருக்கறுப்பான்'' என்ற திருக்குறள், இல்லறத்தானும் துறவுபூண்டொழுகுதல் கூடுமெனக் குறிப்பாகக் காட்டுகின்றது. மெய்யுணர்வு கூறவந்த,

'ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு'

என்ற திருக்குறள், ஐயுணர்வால் அனைத்தையும் ஆரத்துய்க்கும் இல்லறத்தாரை நோக்கியதெனக் கூற இடமுண்டு. ''அற்றவர் என்பார் அவா அற்றார்'' என்ற திருக்குறள், மனத்துறவடைந்து இல்லறத்து நின்றாரைக் குறிக்கின்றதை முன்னரே ஆராய்ந்தோம்.

மேற்காட்டிய குறள்கள் அனைத்தும் முயல்வோனாகிய மூன்றும் நிலையில் உள்ளவனைக் குறிக்கின்றனவென்றால், முயல்வாரில் இல்லறத்தானும் ஒருவனே என்பதைச் சிறிது போக்கிக்காண்போம். ஆதலின், முயல்வாரை நோக்கிக் கூறுகின்றதும் இல்லறத்தாரை நோக்கிக் கூறுகின்றதேயாம் என்க.

## இல்லறத்தில் துறவறம்

இல்லறத்தானும் துறவறவழியில் நின்றவனே என்பதை,

'அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள் வெஃகிப்
பொல்லாது சூழக் கெடும்'

என்ற குறளும் பிறகுறளும் நிலைநாட்டுகின்றன. ''இல்லற நெறியால் அறிவு முதிர்ந்துழியல்லாது துறக்கப்படாமையின் அதனைத் துறவறத்திற்கு ஆறு என்றார்'' எனப் பரிமேலழகியார் விரிவுரை கூறுகின்றார். இக் குறளுக்கு இவ்வாறு பொருள் கொள்ளாது 'துறவறவியலில், வெஃகாமை ஒரு பிரிவேயாகும் என ஒரு சிலர் கூறுவர். அவர்கள், 'அடக்கமுடைமை, வெஃகாமை முதலிய துறவறவியலுள் உள்ளன' என்றும், 'இன்னா செய்யாமை, கள்ளாமை முதலிய இல்லறவியலுள் உள்ளன' என்றும் கூறித் திருவள்ளுவர் நூலைத் திருத்தியமைக்கப் புகுவர். இவ்வாறு மாற்றியமைக்கத்தக்கவாறு இல்லறவியலும் துறவற இயலும் அமைந்துள்ள இயைபும் நாம் கூறுவதை வற்புறுத்தும். அது நிற்க, ஆசிரியர் தொல்காப்பியனார் இல்லறத்தினைக் ''கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை'' என்றும், துறவறத்தை ''அருளொடு புணர்ந்த அகற்சி'' எனறும் கூறுகின்றனர். அதற்கு உரை கண்ட இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்ற உரையாளர்கள், பரிமேலழகியாரும் மணக்குடவரும் உரைத்தபடியே. அடக்கமுடமை, ஒழுக்கமுடமை, நடுவுநிலைமை, பிறர் மனை நயவாமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடமை முதலியவற்றை இல்லறத்திற்கேற்ற அறவொழுக்கம் என்றும், அருளுடமை கொல்லாமை, இன்னா செய்யாமை, வாய்மை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள்ளுண்ணாமை, துறவு முதலியவற்றைத் துறவற ஒழுக்கம் என்றும் கூறுகின்றார்கள். திருக்குறளில் உள்ள பாக்களையே எடுத்துக்காட்டுகின்றார்கள். எனவே, பரிமேலழகியார் பின்பற்றிய முறை, பண்டையோர் முறையே ஆகும்.

அன்றியும் வெஃகாமை துறவறவியலைச் சேர்ந்ததாயின்,

'நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்'

என்பது குடிப்பெயர் காத்து வாழும் இல்லறத்தானை நோக்கிய தன்றோ? எல்லாம் துறந்தவனுக்கு எக்குடி எக்கேடு கெட்டால் என்ன? இல்லறவியலுள் கூறியன, இல்லறத்தானுக்கு வேண்டுவன அல்ல என்றும், கொண்டு, இடர்ப்படுவாரே இவ்வாறு பொருள் கொள்வர். திருவள்ளுவர் கூறுகின்ற அறவொழுக்கக்கோவை, அன்பின் வளர்ச்சியினைப் பின்பற்றுகின்றதென்றும், அவ்வொழுக்கங்கள் ஒன்றினொன்று பிரிந்து வளர்ந்து போகின்றன என்றும் அறியாதாரே இவ்வாறெல்லாம் கூற முன்வருவர். துறவி செய்ந்நன்றி மறக்கலாம், நடுநிலை பிறழலாம், பிறர் மனை நயக்கலாம், இல்லறத்தான் கொலை புரியலாம், பொய் கூறலாம் என எவரே எடுத்துரைக்க முன்வருவர்? எனவே, துறவறத்தான் ஆற்றின் நிற்பதுபோல, இல்லறத்தானும், அருள் வெஃகி, ஆற்றின் நிற்கின்றான் எனல் வேண்டும்.

**முதனிலையும் முடிவு நிலையும்**

படிப்படியாக வளர்ந்து செல்லும் இயற்கைத் துறவே கூறுகின்றார் என்று கொண்டால், இம்முரண்பாடு ஒன்றும் தோன்றாது. அகத்துறவு கூறி இல்லறத்தானை நல்வழிப்படுத்தலாம் அன்றோ? அகத்துறவு என்ற உயர்நிலை கூறுவதுபற்றித் துறவற இயல் என வேறு பிரிக்கவேண்டுவதாயிற்று. ஆயினும் இல்லறத்தின் தொடர்ச்சியே அஃதாகும். அன்றியும், இல்லற இயலில் கூறிய அறங்கள் தலைசிறந்து விளங்குவது, மெய்யுணர்வு பெற்று உள்ளத் துறவு கைவந்தபோதுதான். அனைவரும் அன்புடைமையை இல்லறத்திற்கு அடிப்படையாகக் கொள்கின்றனர். ஆனால், இவ்வன்பு இல்லறத்தே முளை விடுகின்றது, பயன் ஈனுவதோ அகத்துறவு கைவந்தபோது தான்.

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு'

என்ற உயரிய அன்பு நிலை.

'மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை'

என்று கூறுகின்ற துறவுநிலையுள்ளார்க்கே எளிதாகும். அவ்வாறு உயர்ந்த தகீசியன்றோ, தமது என்பையும் கொடுத்து எடுத்துக் காட்டாயினர்? விருந்தென்ற தலைப்பின் கீழ்,

'பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப் படா தார்'

என்ற குறள், ஏழைச் சோம்பேறிகள் வேளாண்மைக்கு அஞ்சிப்புறத் துறவு பூண்டொழுகலைக் கண்டு எள்ளி நகையாடுகின்றது. பரிமேலழகியார், இதற்கு வேறு பொருள் கூறுகின்றாராயினும், இப்பொருள் கூற

வும் இடம் உண்டன்றோ? இனியவை கூறலை வற்புறுத்த வரும்

'இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்'

என்ற குறள், பிறப்பெனும் பேதைமை நீங்கச் சிறப்பெனும் செம் பொருள் கண்டு, மனத்தொடு வாய்மை மொழியும் அகத்துறவுடை யாரையே குறிப்பதாகும். இனியவை கூறல் என்ற அறமும். இல்ல றத்தே எழுந்து. அகத்துறவடைந்தோ ரிடத்தே முடிவு பெறுகின்றது. செய்ந்நன் றியறிதலை எடுத்துக்கூறும்.

'கொன்றன்ன இன்னா செயினு மவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.'

என்ற குறளும் அத்தகையதே.

'இன்னா செய்தாரை ஒறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்'

என்று துறவறத்தே கூறப்படுகின்ற ஒழுக்கத்தைக் கைக்கொண்டவர்க் கன்றோ, செய்ந்நன்றி அறிதல் முழுதும் கை வரப்பெறும்!

'சொற்கோட்ட மல்லது செப்ப மொருதலையான்
உட்கோட்ட மின்மை பெறின்'

என்று நடுவுநிலையை வற்புறுத்தும் திருக்குறள், அவாவற்று மனக் கோட்டம் நீங்கிய பெரியோரை நோக்குகின்றது. அவர்கள், நமக்கு மேல்வரிச் சட்டமாக நிற்க, நாம் அவர்களைப் பின்பற்றி நம்மாலியன்ற வகையில் அவ்வொழுக்கத்தில் பழகவேண்டும் அன்றோ? திருவள்ளுவர் அவ்வவ் வறத்தின் உயர் நிலையையும் கூறுகின்றனர்; அதனைப் பின் பற்றிப் பழகும் முறையையும் கூறுகின்றனர். அஃதன்றோ அவர் பெருமை!

'ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து'

என்று அடக்க முடைமையின் கீழ்வரும் குறளும், உரனென்னும் தோட் டியான் ஓரைந்தும் காக்கும் நீத்தாரைப் பற்றிய தெனலாம்.

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்'

என்பது ஒழுக்கமுடைமை எனும் தலைப்பின் கீழ் வருகின்றதொரு திருக் குறள். இதனுள் 'நன்றிக்கு வித்தாகும்' என வருந் தொடருக்கு, ''முத்திக்கு விதையாகும் நல்லொழுக்கம்'' என மணக்குடவர் பொருள் கொள்கின்றனர். எனவே, இக் குறளும் மெய்யுணர்வாகிய முடிவையே நோக்குகின்ற தென்க.

'நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற்
பிறர்க்குரியாள் தோடோயா தார்'

என்று பிறனில் விழையாமையை வற்புறுத்தும் குறளோ, வீட்டின் பமே முதலாய எல்லா நன்மைகளையும் பயனாகக் கூறுகின்றது. பிறனில் விழையாமை என்னும் ஓரறம் இல்லாதபோது, துறவு கைகூடுவதில்லை யன்றோ? மேலே சென்று பொறையுடைமை கூறும்போது,

'பொறுத்தல் இறப்பினை என்று மதனை
மறத்த லதனினு நன்று'

என்றும்,

'திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று'

என்றும்,

'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்றுவிடல்'

என்றும், எடுத்த பொருளைத் திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார். இவ்வாறு கூறியதில் ஒரெழுத்தும் பிறழாது ஒழுகுவது எவருக்குக் கைகூடும்?

'இன்னா செய்தாரை ஒறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்'

என்றபடி துறவறநிலையில் நின்றோர்க்கே கூடுவதொன்றாம். பொறை யுடைமை துறவறத்தாருக்கும் அருமையாதலைப் பாராட்டி யன்றோ,

'துறந்தாரிற் றூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்'

என்றும்,

'உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்,
இன்னாச்சொல் நோற்பாரிற் பின்'

என்றும் பொறையுடையாரைப் புகழ்கின்றார். அழுக்காறாமையைப் பற்றிக் கூறுகின்றபொழுதும்,

'விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மட்டும்
அழுக்கேற்றி னன்மை பெறின்'

என அழுக்காறாமையை வீடுபேறு முதலியவற்றோடு ஒக்க வைத்து எண்ணுகின்றார். ஏன்?

'அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்'

ஆதலின் அழுக்காறாமையே அறத்திற்கோர் அடிப்படையாய்த் தீயுழி உய்த்தலைத் தடுத்துப் பேரா இயற்கை தருகிறது.

'இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்'

என்று வெஃகாமையில் வரும் குறளும் மேல்வரிச் சட்டமாய் அமைந்து, உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங்காத்துச் செம்பொருள் கண்டார்க்கு உரியதாகின்றது. "வெல்லுதல் பாவநெறிக்கட் செல்ல விடாமை" எனப் பரிமேலழகியார் பொருள் கொள்கின்றாராதலின், இவ்வகையில் ஐந்தடக்கல், இல்லறத்தாருக்கும் இயலுவதொன்றே என அறிக.

'சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்'

என்ற குறளுக்கு மணக்குடவர் "சிற்றின்பமாகிய பொருளை விரும்பி அறனல்லாதனவற்றைச் செய்யார்; பேரின்பமாகிய வீடு பேற்றைக் காட்டுபவர். இது 'வீடு பெற வேண்டுவார் செய்யார், என்றது' எனப் பொருள் கொள்கின்றனர். இதனால், இல்லறத்தாரும் வீடுபேறு வேண்டி முயல்கின்றனர் என்பதும், இல்லற இயலும் வீடு பேற்றிற்கு முதற் படியாகிய தொரு வழியே என்பதும், இதன் அடுத்தபடியே துறவியல் என்பதும், நன்கு விளங்குகின்றன. புறங்கூறாமையை வற்புறுத்துகின்றபோதும்,

'ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு'

என்று கூறுகின்றார். இந்நிலை, எல்லோருக்கும் எளிய தொன்றே?

'வலியார்முன் தன்னை நினைக்க, தான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து'

என்றபடி நினைக்கப் பழகிய பெரியார்க்கே இயலுவதொன்றும். மேல் பயனில் சொல்லாமையைப் புனைந்துரைக்கின்றவர்,

'அரும்பயன் ஆயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்'

என்றும்,

'பொருடீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்'

என்றும் கூறுகின்றார். எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணும் அறிவு உடையோரே பயனில சொல்லாமையைப் பழகுதல் கூடும். தீவினையச்சம் கூறுகின்றபோது,

'அறிவினு ளெல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்'

என்ற உயர் நிலையையே புனைந்துரைக்கின்றார். ஈதும், "இன்னா செய்தாரை" என்ற குறள்வழி நின்றார்க்கே எளிதில் கைகூடுவதாகும். ஒப்புரவறிதல் என்ற தலைப்பின் கீழே,

'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு'

எனவருகின்ற திருக்குறள், துறவறத்திற்கு அடிப்படையாகிய அருளின் நிலையை விளக்குகின்ற தன்றோ! ''உலகோபகாரம் ஞானிகள் விவகாரம்'' என்ற நிலையை இக்குறளும் விளக்குகின்ற தன்றோ? ஈகையின் பெருமையையும், அதன் அருமையையும், பாராட்டத் தொடங்கி, அவ்வறமொன்றே துறவறத்தினும் பெரிய தென முடிவுகட்டுகின்றார்.

'ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலின் பின்'

என்று வேளாண்மை நிறைந்த இல்லறத்தைப் புகழ்கின்றார். புகழினை எங்ஙனம் புகழ்கின்றார்?

'நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது'

என்ற குறளும் நிலையாதவற்றால் நிலையாயினவற்றை எய்திச் செயற்கரிய செய்யும் பெரியார்மேல் வைத்தன்றோ புகழைப் புகழ்கின்றது!

**புதியவழி**

எனவே, இல்லறம் துறவறம் என்றவை ஒரு வழியேயாம்; ஆனால், இவை ஓரேணியின் தொடர்ச்சியான இரண்டுபளுக்கள் போன் றுள்ளன. அகத்துறவே கூறுகின்றார் வள்ளுவர். ஆதலின், துறவறம் இல்லறத்தானை மறக்கின்றார் இல்லை. இல்லறமும் மெய்யுணர்ந்த போதுதான் சிறந்து விளங்குதலின், இல்லற வியலிலும் துறவின் முடிந்த முடிபாகிய மெய்யுணர்வை மறக்கின்றார் இல்லை. இந்த இயைபினை உணராதார் ''இப்பகுதி இல்லற வியலிற் சேரவேண்டும்; இப்பகுதி துறவறவியலில் சேரவேண்டும்'' என்று போராடுவர். இல்லறவியலில் மேல்வரிச்சட்டமாக அறத்தினுயர் நிலையைப் புகழ்கின்றார். ஆனால் அது சிறுபான்மையே யாகும். துறவறவியலில் இல்லறத்தானைத்தட்டி எழுப்புகின்றனர். அஃதும் சிறுபான்மையே. நோக்குமிடத்து, இல்லறவியல் இல்லறவியலே கூறுகின்றது. துறவறவியல் துறவறவியலையே கூறுகின்றது.

'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரிற் றலை'

என்ற குறளின் உட்பொருளை நன்குணர்வோமானால் திருவள்ளுவர் காட்டும் புதிய வழி முரண்பாடின்றி விளக்கமாகும்.

**இயற்கைத் துறவு**

''இல்லறத்திற் புகாது துறவறத்திற் புகுதல் ஆகாதோ?''

என்று கேட்கலாம். புகுதல் கூடும். ஏசுநாதர் நம்மாழ்வார் முதலியோரைக் காணவில்லையா? நாம், பிறர்; நம் குடும்பம், பிறர் குடும்பம்; நம் நாடு, பிறநாடு — என்ற இரண்டாட்டத்தில் வாழும் மனப்பாங்கு உடையவர் வழி ஒருவழி. இவர்கள் இல்லறத்திலிருந்து தொடங்கி முடிவில் இரண்டாட்டம் ஒழிந்து துறவு நிலையடைவர்; உலகம் முழுவதும் ஒருகுடும்பம் என உணர்வர். ஆனால், நம்மாழ்வார் போன்றவர்களோ உலகம் முழுவதும் ஒரு குடும்பம் என்ற அறிவினை இயற்கை உணர்வாகப் பெற்றவர்கள். அவர்கள், 'மனைவியே மக்களே' என வாழ்ந்து தமக்கு எல்லை கட்டிக்கொள்வதில்லை. இவர்கள் இயற்கைத் துறவிகள். இயற்கையாகவோ, செயற்கையாகவோ 'யான், எனது' என்னும் பற்றறுவதே துறவு எனத் திருவள்ளுவர் கூறுவது காண்க.

## முயல்வாருள் தலை

மெய்யணர்வு பெற முயல்வார் பலர். அவர் முயலும் வழியும் பல புறத்துறவு பூண்டு, அகத்துறவு நாடி நிற்பார் ஒரு புறம்; புறத்துறவு பூணாது அகத்துறவு நாடி நிற்பார். மற்றொரு புறம். இவருள் பின்னவரே சிறந்தவர் ஆவர். கூடா ஒழுக்கத்தால் வரும் கேடொன்றும் இல்லறத்தில் இல்லை அன்றோ! வள்ளுவர்,

> 'இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
> முயல்வாரு ளெல்லாந் தலை'
>
> 'அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
> போஒய்ப் பெறுவ தெவன்'

என இடித்துரைக்கின்றார். எனவே, வேளாண்மையும் நோன்பும் புரிந்தருளும் பெரியோரே பெரியோர். வேளாண்மை ஒன்றே செய்வார்க்கோ, நோன்பு ஒன்றே மேற்கொள்வார்க்கோ அத்துணைச் சிறப்பு இல்லை. 'புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்' என்றும், 'நோற்பாரி னோன்மையுடத்து' என்றும், 'பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர்' என்றும், 'ஆற்றுவாராற்றல் பசியாற்ற லப்பசியை மாற்றுவா ராற்றலின் பின்' என்றும், 'துறந்தாரின் தூய்மை யுடையார்இறந்தார்வாய் இன்னாச்சொல் நோக்கிற்பவர்' என்றும், நோன்பு ஒன்றனையே மேற்கொண்டொழுகுவாரைப் புறக்கணிக்கின்றமை கண்டோம். அவ்வாறே நோன்பினை மறந்து, வேளாண்மை ஒன்றனையே மேற்கொண்டொழுகுவாரையும் புறக்கணிக்கின்றார் திருவள்ளுவனார்.

> 'தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
> வலைப்பட்டார் மற்றை யவர்,'
>
> 'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
> மற்றை யவர்க டவம்'

என்ற குறள், இதனை வலியுறுத்துகின்றன. ஈற்றிலே காட்டிய குறளே

இல்லறத்தின் பெருமையை நன்கு வலியுறுத்துகின்றது. துறந்தாரல்லாதாரும் தவத்தினை மறத்தல் ஆகாது. 'அவ்வாறிருந்தும் அவர்கள் மறந்தது எதனுல்?'' என்றல்லவோ அக் குறளில் ஆராய்ச்சி எழுகின்றது! மறத்தல் என்ற சொல்லே, இந்தப் பொருளாற்றலைத் தந்து நிற்கின்றது. மேற் கூறிய இரண்டு குறள்களும், வேளாண்மையையும் நோன்பையும் மேற்கொண்டொழுகும் இல்லறத்தை நோக்கிக் கூறுகின்றன அல்ல என்க. முன்னர், இல்லறத்தின் உயிர்நிலையைப் பற்றிப் பாராட்டுகின்ற குறள்களுக்கும், இங்கு அதன் இழிவு நிலையை இழித்துரைக்கின்ற இக் குறள்களுக்கும் முரண்பாடொன்றும் இல்லை. இதனை அறியாதார் திருவள்ளுவர், இல்லறத்தில் இல்லறத்தாரைப் புகழ்கின்ருர்; துறவறத்தில் துறவறத்தாரை உயர்த்தி ஓதுகின்ருர் என்று கூறித் திருவள்ளுவனுரை, முன்னுக்குப் பின் முரண்படுதல் நோக்காது இடத்திற் கேற்ப இனிக்கப் பாடுகின்ற ஏழைகளில் ஒருவர் ஆக்குவர், அந்தோ! இதனினும் பெரும்பழி உண்டோ அம்மம்ம!

**இல்லறமே நல்லறம்**

புறத்துறவு பூண்டார் வேளாண்மை செய்வது எங்ஙனம்கூடும்? புறத்துறவு பூணுதார் வேளாண்மையுஞ் செய்வர்; நோன்பும் நோற்பர்; மெய்யுணர்வுபெற்று அவாவும் அறுப்பர். ஆதலின், வள்ளுவர்

'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று'

என முடிவுகட்டி, அறன் வலியுறுத்துகின்ருர்; அந்த அறனையே தாமும் மேற்கொண்டு உலகில் வாழ்ந்தருளினுராம்.

**பெண்ணேடு வாழும் துறவு**

எனவே, இயற்கைத் துறவானது இயய்பாக வளருமிடமாகிய இல்லறத்திற்கே திருவள்ளுவனுர் ஏற்றம் கூறுகின்ருர். ஆதலின், பெண்களை இழிவாகப் பேசுகின்றதை அவர் குறளில், எங்கும் காண இயலாது. மற்றையோர் நூல்களையும் இவர் நூலையும் ஒருங்கு வைத்து ஆராயும்போது, ஒருண்மை, உள்ளங்கை நெல்லிக்கனி போலப் புலனுகிறது. மற்றைய நூல்கள் எல்லாம், பெண்ணிழிவினையும், புணர்ச்சி விழையாமையினையும் துறவறத்திற்கு இன்றியமையா ஒழுக்கமாகக் கூறிப்போக, வள்ளுவனுர், அவற்றைப்பற்றி ஒரு சொல்லும் பேசாமை, இங்குக் குறித்துவைத்துக் கொள்ளத்தக்கது. இளம்பூரணர்,

'வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல'

என்ற குறளை எடுத்துக்காட்டி ''அது பிரமசாரியக் காப்பின் விளைவு

கூறியது'' என்பர். ஆனால், திருவள்ளுவர், பெண்களோடு கூடி வாழ்தலை ஓரிடத்தும் தெளிவாக எடுத்துக் கூறிப் பழிக்கவில்லை. வேண்டிய எல்லாம் ஒருங்கு துறக்கும்பொழுது, காந்தியடிகளைப்போலப் பெண் இன்பத்தையும் துறப்பதும் இயல்பே. ஆனால், பெண்ணோடு வாழாது காட்டில் ஓடி ஒளிய வேண்டுவதில்லை. பெண் இன்பத்தினையும் 'யான் எனது' என்னும் செருக்கறத் துறப்பதே துறவாகும். இவ்வளவும் கூறிவந்தமையால், பெண்ணோடு பிரியாது வாழும் இல்லறத்தினைப் புகழ்வதும் துறவிலே பெண்ணிழிவு கூறி இகழாததும், திருவள்ளுவர் சிறப்பியல்புகள் என்பது தெளிவாகும். எனவே, இவ்வகையால், திருவள்ளுவர், தமிழ்ப் பெண்களுக்கு எங்கும் இல்லாததொரு பெருஞ்சிறப்புச் செய்துவைக்கின்றார். நாமோ அதனை மறந்து அலைகின்றோம்.

### இல்லறமே இயற்கையறம்

இல்லறமொன்றே இயற்கையோடு இயைந்ததென்பதே திருவள்ளுவரது முடிந்த முடிபு. இணைவிழைச்சியாலே இல்லறம் இயல்பாயதென்று கொள்ளுதற்கில்லை. இரு வேறு வகையாய் விளங்கும் ஆண் மக்களின் பண்பும் பெண் மக்களின் பண்பும் ஒன்று சேர்ந்த உயர்ந்த ஒழுக்கத்தினை உலகில் விளக்குதலின், இல்லறம் நல்லறமாயிற்று; இயற்கை ஒழுக்கமாயிற்று; இறைவன் எண்ணம் நிறைவேறும் வழியாயிற்று. ''இயல்பினான் இல்வாழ்வான் என்பான்'' எனத் திருவள்ளுவர் பாடுதல் காண்க. இதனின்றும் இயற்கையோடு மாறுபடுதல் ஒண்ணாது என்பது தானே போதரும். எனினும், அவ்வாறு செயற்கை வாழ்க்கை யுடையாரையும் ''நோற்பார்'' என்றும், ''முயல்வார்'' என்றும் ஒருங்கு வைத்து எண்ணுகின்றார் வள்ளுவர். மணமில்லாமல் வாழ்தல் ஆகாது என ஒருதலையாக உறுதி கூறவில்லை. ஆனால், பெண்களைப் பற்றிய வரையில் ஓர் உவமை வழியாக இவ்வுண்மையை அவர் விளக்கி வற்புறுத்துகின்றார். மகளிர், மணமில்லாதிருந்தால், தம் பிறவியின் பெரும் பயனை எய்துவதில்லை என அவர் சுட்டிக் காட்டுகின்றார். இக் கொள்கை உலகறிந்ததொன்று என் அத்தனை அவர் ஓர் உவமையாகக் கொள்கின்றார்.

> 'அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
> பெற்றாள் தமியண்மூத் தற்று'

என்ற குறள், நன்னெறியில் செல்வம் என்ற தலைப்பின் கீழ் உள்ளது. ஒன்றும் இல்லாதவர்க்குத் தன்னாலான உதவி ஒரு சிறிதும் செய்யாதவனது செல்வம் பயனற்றதே ஆகும். மிக்க அழகினையுடைய

பெண் ஒருத்தி, மணமின்றித் தனியே இருந்து கிழவியாகின்றாள். அவளது எழில் நலம், ஏதேனும் ஒரு பயனை அடைகின்றதோ? அஃதே போல, ஈவிரக்கம் இல்லாதான் கையுள்ள நன்றியில் செல்வமும், பயனற்றதேயாகும். இங்கு எடுத்தாண்ட உவமை, மகளிரது மண வாழ்க்கையைப் புகழ்கின்றது.

**முடிவு**

திருவள்ளுவர் பெண்ணைப் பேயெனப் பேசவில்லை; செயற்கைத் துறவினையே பேய்த் துறவாக்குகின்றார்; துறவிலும் பெண்வாழ்க்கைத் துணையாக விளங்கலாம் என்பது பற்றிப்போலும் பெண்ணைத் துறத்தலை ஓரிடத்தும் கூறாது விடுகின்றார்; பெண்ணோடு வாழ்வதனையே பெரிதும் போற்றுகின்றார்; மணந்து வாழும் மகளிரின் அழகைப் புகழ்ந்துரைக்கின்றார். பெண்களுக்கு இங்கும் உயர்நிலையன்றி வேறென்ன காணக் கிடக்கின்றது?

---

# 4. அடிமையா? வாழ்க்கைத்துணையா?

## 1. காமத்துப்பால்

இனிப்பெண்களுக்கு உரிமை உண்டு எனப் பேசத் திருக்குறளில் இடமுண்டோ? மடந்தையர் அனைவரும் வழி வழி அடிமைகளா? இதனைப்பற்றி மேற்சென்று ஆராய்வதற்கு முன்னரே, இதுவரை கூறி வந்ததின் நின்றுமே, ஒன்று நாம் துணிந்து கூறலாம். பிற நூலார் எந்த எந்தக் கருத்துப்பற்றிப் பெண்களுக்கு உரிமை இல்லை என மறுத்தனரோ, அந்த அந்தக் கருத்துக்களை எல்லாம், நாம் மேலே கண்டபடி, பகற்கனு எனக் காட்டுகின்றார் திருவள்ளுவனார். ஆதலின், அப்பெரியார், பெண்கள் அடிமைகள் எனக் கனவிலும் கருதியிரார் என்று முடிவு கட்ட இடமுண்டு.

### 1 அன்பிலாமணம், உயிரிலாப்பிணம்

**களவியல்**

திருவள்ளுவனார், உலகத்து உறுதிப் பொருளை, அறம், பொருள், இன்பம் என முப்பாலாகக்கொண்டு ஆராய்கின்றார். இம் மூவகைப்பாலில் ஒன்றாகிய இன்பத்துப்பாலில், பெண்களுக்கு என்ன உரிமையுண்டு எனத் திருவள்ளுவர் தெளிவாகக் காட்டுகின்றார்? இன்பமெனக் கூறியதுதான்யாது?

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனு
மொண்டொடி கண்ணே யுள'

என்று குறிக்கப்படுவதே, இங்கு இன்பமெனப் பேசப்படுகின்றது. 'இதனைத் துய்ப்பது எங்ஙனம்?' என்பதே இன்பத்துப்பாலின் ஆராய்ச்சி. காமத்துப்பாலில், திருவள்ளுவனார், அன்பினைந்திணை ஒழுக்கத்தையே ஓதுகின்றார். அவ்வொழுக்கம் களவியலாக எழுந்து, கற்பியலாக வளர்ந்து ஒளிர்வது. களவாவது, ஒத்த தலைவனும் தலைவியும், கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித்தாமே தனியிடத்து, இறைவனருளால் எதிர்ப்பட்டுத் தம்முளைப்பற்றுப் பால் வழியோடி, ஒன்றுகூடி, ஈருடலும் ஒருயிருமாய்ப் பிணைந்து, பேரன்போடு பேரின்பம் பெறுவதாகும். இறைவனுருவாகிய அன்பு ஒன்றினாலேயே பிணைக்கப்பட்ட இவர்களது தொடர்பு, புலவர் பலராலும், கடவுட் புணர்ச்சி என்றும், இயற்கைப் புணர்ச்சி என்றும் புகழப்பட்டது. பிறர் ஒருவரும் அறியாத படி, இவ்வாறு கூடிய காதலர் உலகறிய மணந்து வாழ்வதே கற்பொழுக்கமாகும்.

'கற்பெனப்படுவது களவின் வழித்தே'

என்பது இறையனார் அகப்பொருள். திருவள்ளுவனார், இன்பம் எனப் பாராட்டுவது இந்தக்களவொழுக்கத்தைத்தான். இன்பமென்பது அன்புள்ள இடத்தில்தான் காணக்கிடக்கும். அவ்வன்போ, களவொழுக்கம் ஒன்றில்தான் அவாவின் கலப்பின்றிக் காணப்படுகின்றது. மற்றைய இடங்களில் அன்பினால் தான் ஒருத்தியை ஒருவன் மணக்கின்றான் என ஒருதலையாகத் துணிதற்கு இடமில்லை. அங்கெல்லாம், ஆண்மகன், மங்கையின் அறிவு கண்டு மணப்பான்; அழகு கண்டு மயங்குவான்; செல்வங்கண்டு சேர்வான்; பெரியோருக் கஞ்சிப் பெண் கைபிடிப்பான். ஆனால், களவு ஒழுக்கத்திலோ, அன்பு என்பதன்றி வேறொன்றும் இல்லை. அது பற்றியன்றோ, அன்பினைந்திணை என்று இறையனாரும், ''அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்காமக் கூட்டம்'' என்று தொல்காப்பியனாரும் சிறப்பித்துக் கூறுவாராயினர். எனவே, பெரியோர்கள் கூடிப் பெண்களை விற்றும் வாங்கியும் வழக்கிற் கொணர்ந்த திருமணத்தைத் திருமணமென்று திருவள்ளுவர் உடன்படார். ஐம்பதாண்டுள்ள கிழவனும், ஐந்தாண்டுள்ள குழவியும் மணப்பதனைப் பிணத்தின் சடங்கெனக் கொள்ளுமே யன்றித் திருமணம் என்று திருக்குறள் புகழுமோ? அன்பிலாதாரையும் அறியாதாரையும் அறையில் அடைத்து, அக முடையான் அகமுடையாள் என்று அவர்களுக்குப் பெயர் வைத்து, ஊரறியத் தாலி கட்டுவித்து, மணப்பறை அறைந்தால், அதனைப் பிணப்பறை என்றே திருவள்ளுவர் நூலினை ஓதி உணர்ந்தவர்கள் உறுதி கூறுவார்கள். திருவள்ளுவர் கூறுகின்ற களவியலாகிய இன்ப இயலிலோ,

ஆணுக்கு எத்துணை உரிமையுண்டோ, அத்துணை உரிமை உண்டு இருவரும் முனைப்படங்கிப் பால் வழி ஓடி, இறை பணி நின்று, அன்பு கண்ணாக ஒருவரை ஒருவர் உணர்ந்து ஒன்றுகின்றனர். இவளும், தனதன்பனை மணக்கின்றாள். இவ்வாறு, அன்பு இருதலையும் ஒவ்வாதபோது, கைக்கிளை என்று இகழப்படும்; இருதலையும் ஒத்தபோது தான் களவியல் என்று சிறப்பிக்கப்படும்.

'தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.'

[தம்மால் காதலிக்கப்படும் கணவர், தம்மைக் காதலிக்கப் பெற்றமகளிர், பெற்றாரன்றே, காம நுகர்ச்சி என்னும் பரல் இல்லாத கனி.]

'ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது.'

[மகளிர், ஆடவர் என்னும் இருதலையினும், வேட்கை ஒருதலைக் கண்ணேயாயின், அஃது இன்னாது; கா (காவடி) வினது பாரம் போல, இருதலைக் கண்ணுமொப்பின், அஃது இனிது.]

'உடம்போ டுயிரிடை என்னமற் றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு,'

[உடம்போடு உயிரிடையே உளவாய நட்புக்கள் எத்தன்மைய அத்தன்மைய இம்மடந்தையோடு எம்மிடை உளவாய நட்புக்கள்.]

என வரும் குறட்பாக்கள் இதனை நன்கு வற்புறுத்துகின்றன.

**ஒத்த அன்பும் உரிமையும்**

ஆண்பாலர்க்கும் பெண்பாலார்க்கும் உரிமையுண்டு என்பதனையும், அவரவர் தனித்தனி நின்று அவ் வுரிமைக்குப் போராடாது அன்புருவாகிப் பிணைந்தபோதுதான் உண்மை இன்பம் பிறக்கும் என்பதனையும், வலியுறுத்தவே திருவள்ளுவனார், தமது காமத்துப் பாலை, ஆணியல் என்றும், பெண்ணியல் என்றும், இருவரியல் என்றும் வேறு பிரித்து ஒன்றாக்கி ஓதுகின்றார். பரிமேலழகியார் களவியல், கற்பியல் என்று வேறு பிரித்து ஓதுகின்றது உண்மையே. ஆனால், மிகப் பழங் காலத்தில் இருந்தவரில் ஒருவராகிய மோசிகீரனார்,

'ஆண்பாலேழ் ஆறிரண்டு பெண்பால் அடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராக - மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

எனத் திருவள்ளுவ மாலையில் பாடுகின்றமையால், இஃதே திருவள்ளுவர் செய்கின்ற பாகுபாடென்க. இதற்கு முரண்படாது, தம்

கருத்தை நோக்கி வேறொரு வகையில் பிரிவு செய்கின்றார் பரிமேலழகியார்.

## இன்பவியல் உலகியலே

பிறநூலோர், இவ்வைந்திணை ஒழுக்கத்தினை எடுத்து ஓதுகின்றதற்கும், திருவள்ளுவர் அவ்வொழுக்கத்தைக் காமத்துப் பாலில் புனைந்துரைக்கின்றதற்கும், ஒரு வேற்றுமை உண்டு. நக்கீரர், அவ்வொழுக்கத்தினை ''இல்லது இனியது நல்லதெனப் புலவரான் நாட்டப்பட்டது'' என்று புகழ்ந்துரைக்கின்றார். அம்மட்டோடும் நில்லாது, இவ்வொழுக்கம், உலகினர் மேற்கொண்டொழுகுதற் பொருட்டுக் கூறப்படவில்லை என்றும் வற்புறுத்துகின்றார். காதலால் கண்மூடித் திரிபவனை, நல்வழிப்படுத்த வேண்டி அவன் விரும்பும் இணைவிழைச்சியிற் சிறந்ததாகிய களவொழுக்கமே, பெரியோரால் கூறப்படுகின்றதாம். இந்தக் களவொழுக்கத்தைப்பற்றிக் கேட்ட ஒரு மகன், 'அதனைப் பெறும் வழியாது?' என நாடும்போது, ''வேண்டிய வேண்டியாங் கெய்தலின் செய்தவம் கண்டு முயலப்படும்'' எனக் கூறிப் பெரியோர், அவனைத் தவத்தின்மேற் செலுத்துவார்களாம்; தவம் மேற்கொண்டபொழுது, சிற்றின்பத்தை நோக்கித் தவம் செய்தலினும், பேரின்பத்தை நோக்கித் தவம் கிடத்தல் சாலச் சிறந்ததென அவனுக்கு எடுத்துக்காட்டி, அன்னவனை வீட்டுவழியிற் கொண்டுபோய்விடுவார்களாம். எனவே, நக்கீரர் கொள்கைப்படி, இணைவிழைச்சி நாடியவனை, இல்லறத்தினின்றும் வெளியேற்றி, வீட்டின்பத்தை நோக்கித் தவம் செய்யத் தூண்டுகின்றதொரு சூழ்ச்சியே களவியலாகும். ஆனால், திருவள்ளுவனார், அத்தகைய சூழ்ச்சியினைக் காமத்துப்பாலில் கூற இயலாதன்றோ? (அறத்துப்பாலில், உலகினர் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கத்தினைக் கூறுகின்றார். பொருட்பாலில் உலகம் நடைபெற வேண்டிய முறையினை எடுத்து ஓதுகின்றார்.) இவ்வாறு கூறுகின்றவர், இன்பத்துப்பாலில் மட்டும் வானத்தைக் காட்டிவிட்டு வாளா இருப்பாரோ? அறத்துப்பாலையும் பொருட்பாலையும் உலகம் பின்பற்றி வாழவே கூறுகின்றனம்போல, இன்பத்துப்பாலையும், உயிர்கள் இன்பத்தினை இவ்வுலகில் எங்ஙனம் துய்ப்பது என்பதனை விளக்கவே கூறுகின்றார்.) இன்பத்துப்பால் ஒரு சூழ்ச்சியானால், அஃது இன்பத்தினைக் கூறாது துறவினைக் கூறுகின்ற காதல் வேண்டும்; இல்லறத்தின் நின்றும் எல்லோரையும் வெளியோட்டுகின்றதாதல் வேண்டும். இன்ப நூல் என்று வாத்ஸாயநர், கொக்கோகர் முதலானோர் கூறுகின்றவை, அவ்வாறு சூழ்ச்சியளவில் முடியாதபோது, மாந்தர்க்கு உறுதி என எடுத்துக் கூறிவந்த இன்பத்தினை, ஒழுக்க முறையில் உலகினர் துய்க்கத் தக்கதாகக் கூறாது, திருவள்ளுவனார் வேறொன்றுகூறுகின்றார் என

பது ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்ற கதையாக முடியும். இன்பநூல் எழுதுகின்ற பிறர் எல்லாம், பிறர்மனை நயத்தல், பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் முதலிய அறம் அல்லாதவற்றைப் பற்றியும் கூறுகின்றனர்கள். ஆனால், திருவள்ளுவரோ,

'அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில'

என உறுதி கூறுகின்றனர். ஆதலால், இல்லற நிலையிற் பிறழாது, உயர் நிலையடைந்து, இறை பணிநின்று முனைப்படங்கி, அன்பு வடிவான உயிரின் நிலையினையே. இன்பமென அவர் எடுத்து ஓதுகின்றனர்.

**மேல்வரிச் சட்டம்**

அவர் கூறுகின்ற இன்ப ஒழுக்கம், இவ்வுலகில் அன்புருவான காதலனும் காதலியும் துய்க்கக் கூடியதொன்றே யாகும். காமத்துப் பாலைத் திருவள்ளுவனார், கூத்து நூலாகப் பாடியுள்ளார். ஆதலின், பல இடத்தும் காணக்கூடிய நயங்களையும், அழகுகளையும் ஓரிடத்தே உள்ளனவாகச் சுவை பெருகப் பாடுகின்றனர். அவ்வளவே அவர் உலகத்தோடு மாறுபடக் கூறுகின்றது. அவர் கூறுகின்றதில் எள்ளளவும் பிறழாது இன்பந் துய்த்தல், இவ்வுலகில் இயைவதில்லை என்பது உண்மையே. ஆனால், அப்பெரியார் கூறுகின்றதில் எள்ளளவும் பிறழாது அறம் வளர்த்தலும் பொருளீட்டலும், இவ்வுலகில் இயைவனவோ என்று கேட்கின்றோம். அவையும் இயைவன அல்ல என்பதனை யாவரும் உணர்தல் வேண்டும். மற்றைய பால்களை நாம் மேல்வரிச் சட்டமாகக் கொண்டொழுகவேண்டித் திருவள்ளுவர் கூறியருள் கின்றதுபோல, இன்பத்துப்பாலையும், மேல்வரிச்சட்டமாகவே எழுதியமைக்கிறார்.

**இன்பமும் அறமும்**

இன்ப ஒழுக்கமாவது அன்பொழுக்கமே ஆகும். அந்த இல்லறத்திற்கு இன்றியமையாதது என்பதனை அறத்துப்பாலிலேயே அவர் ஓதிவிடுகின்றனர்; காதலன், காதலி வழியாக உலகினை இயக்கி, ஒன்றுபடுவதனை அங்கு கூறுகின்றனர்; பின்னர் அவ்வன்பு, காதலன் காதலி என்ற இருவர் அளவில் நின்று அவர்களை எவ்வாறு இயக்கு கின்றது என்பதனை இன்பத்துப்பாலில் காட்டுகின்றனர். இந்த இருவரும் இன்பத்துப்பால் வழியே, அன்பால் இயங்கி ஒன்றுகும்போதுதான், அவர்கள் ஒழுக்கம் எல்லாம் அற ஒழுக்கமாவது. இவ்வகையில் இன்பத்துப்பால் அறத்துப்பாலுக்குப் பிறப்பிடமாகின்றது. இதுபற்றி யன்றே, தொல்காப்பியனார்,

'இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டம்'

என்று இன்பத்தை முதலில் வைத்து ஓதுகின்றார். அறத்துப்பால் முயற்கொம்பாகாதபோது, அதன் தாயாகிய இன்பத்துப்பாலும் முயற்கொம்பாவதில்லை என்க. எனவே திருவள்ளுவனார், தாம் காட்டுகின்ற வழியினைப் பின்பற்றுவதற்காகவே இன்பத்துப்பால் கூறுகிறார் என்பது ஒருதலை. பரிமேலழகியாரும் இக்கொள்கையை உடையார் என்பது,

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமி லின்பத் தழிவில் வீடும், நெறியறிந் தெய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதி என உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை, அறம் பொருள் இன்பம் வீடு 'என்பன' (உரைப்பாயிரம்). இனி அப்பொருளைத் துணைக்காரணமாக உடைத்தாய் இம்மையே பயப்ப தாய இன்பம் கூறுவானெடுத்துக் கொண்டார். ஈண்டு இன்பமென்றது ஒரு காலத்தொரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத் தாய காமவின்பத்தினை......சுவைமிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பும் ஒவ்வாமையும் உடைய ஆக்கிக் கூறுகின்றார்' (காமத்துப்பால் உரைப்பாயிரம்)

என அவர் கூறுதலின் நின்றும் புலனாகின்றது. இல்லறஇயலில், காதலனும், காதலியும் உலக நடையை நடத்தி ஒழுகும் முறையைக் கூறுகின்றார் வள்ளுவனார். இங்கு அவ்விருவரும் இன்பந்துய்ப்பதனைக் கூறுகின்றார். இவ்விரண்டும் ஒன்றேடொன்று பெரிதும் இயை புடையன. பொருளும் துணையாகி நின்று பயன்படுதலின், முப்பாலும் ஒரு பாலாக உவகைக் கடலில் அறம்பொங்கி வழிவதை வள்ளுவர் சுட்டுகின்றார். இவை மூன்றும் ஒன்றுபோல் ஒன்று, உலகிற்கென எழுந்தமையின், ஒன்று பொய்யாயின் மற்றையவும் பொய்யாப் போகும்.

### காமத்துப்பாலின் சிறப்பியல்பு

இவ்வளவும் கூறியமையால், பெறப்பட்டதென்னை? திருவள்ளுவனாரோ, வாத்ஸாயநர், கொக்கோகர் முதலியவர்களைப் போலாது, அன்பின் பயனாகிய இன்பமொன்றனையே கூறுகின்றார்; நக்கீரர் முதலியோரைப் போல. அதனைப் ... ப்த்தேராக்காது, உலகினர் குடைந் தாடும் பூத்தாரும் பொய் ... குகின்றார்; புலவரின் புனைந்துரை யாக்காது உலகியலாக் ... சய்யுள் வழக்கோடு உலகவழக்கும் கூறிச் சிறப்பிக்கின்ற ... ஆணும் பெண்ணும், இறைபணி நின்று, அன்பு வழி ... ம் என்பதாயிற்று. கொடுப்பாரும்

அடுப்பாரும் அன்பு வழிக்குத் துணையாய் நின்று, கற்பு ஒழுக்கத்தைக் களவியலின் வழியே, நிலை நாட்டவேண்டும் என்பதும் இதனால் பெறப் படும். களவொழுக்கம் என்றால், இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப் பாடு முதலாம் கோவைத் துறைகள் அனைத்தும் பயின்றுவர வேண்டு மென்பது திருவள்ளுவர் கருத்தன்று. அதுபற்றி யன்றோ, அப் பெரி யார், கோவைக் கிழவி அனைத்தையும் கோவை செய்யாது, ஆங் கொன்றும், ஈங்கொன்றும் எடுத்து மொழிகின்றார்; அன்பு மணக்க மணப்பதே மணமென்று அன்பின் கதையைச் சுருக்கமாகக் கூறுகின் றார். இந்த அன்பு இல்லாதபோது, இவ் வுலகில் இன்பம் இல்லை. என்பது எல்லாமுணர்ந்த திருவள்ளுவனாரின் முடிந்த முடிபாகும்.

ஒருவனுக் கொருத்தி

பரத்தையிற் பிரிவு

''அன்பின் ஐந்திணை ஒழுக்கத்தின் அருமை பெருமையினை யாவரும் அறிவர். காதலனையும் காதலியையும் எல்லா வகையாலும், எல்லா உரிமையாலும் ஒத்தவர் என்று புகழ்வது களவியலின் தொடக் கத்தில் தான். போகப்போக, 'வரவர மாமி கழுதை போலானாள்' என்ற கதையாகத்தான் முடிகின்றது. வெளிக்கு வேறு போலச் சிறிதுபோது காட்டிப் பின், பழையபடி, 'பழைய குருடி கதவைத் திறஅடி, என்று அடிமையோடு உட்புகுகின்ற கதைதான்! களவியலில் பரத் தையிற் பிரிவொன்று பேசப் படவில்லையோ! காமக் கிழத்தியரோடும், காதற் பரத்தையரோடும் எல்லாமறிந்த தலைமகன் இன்புறுகின்றான் அன்றோ! அவன் கூடிக்குலாவும் பரத்தையரது எண்ணிக்கைக்கும் ஒரு முடிவுண்டோ? மணப் பெண்ணின் வயிறெரிய மனமெரிய வரை வின் மகளிரோடு வரைவின்றி வாழ்பவனையும் தலைமகன் என வாழ்த்து வதோ! இவ்வாறு திருவள்ளுவரும், பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனைப் புகழ்கின்றாரானால், பெண்களுக்கு ஏது பெருமை?'' என இங்கு ஒரு சிலர் எண்ணமிடுவர்.

நிழலருமை வெயிலிலே

நக்கீரர் கூறுவது போல, இல்லது இனியது நல்லதெனப் புல வரால் நாட்டப்பட்ட இக் கள ஒழுக்கத்திற் பரத்தையிற் பிரிவொன்று கூறுவானேன்? பிரிவு கூறாதவழி இன்பம் சிறப்பதில்லையாம் நிழலருமை வெயிலிலே ஆதல்போலப் புணர்ச்சியி[illegible]மை பிரிவிலேதான் காணப்படு மாம். சிறிது பிரிந்து பிரிந்து கூடின[illegible] இன்பம் முன்னினும் பன் மடங்கு சிறந்து விளங்குகின்றதாம்[illegible]ன்றி ஒன்றையே தின்று போனால், தெவிட்டாத தெள்ள[illegible]ப்போகுமாம். தயிர்ச் சோற்றை உண்ணுங்கால் ஊ[illegible]டயிடையே உண்ணு

தல் போலப் புணர்ச்சியின் இடையே பிரிவும் நிகழ்கின்றதாம். இப் பிரிவு பலவகைப்படும்.

'ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழிப் பொருட்பிணி பரத்தையென்
றாங்கவ் வாறே அவ்வயிற் பிரிவே'

என்கின்றார் இறையனார்; நூல்பல கற்கவும், நாட்டினைக் காக்கவும், பகைவரை அடக்கவும், மன்னவரது மாறுபாட்டை ஒழிக்கவும், பொருள் சேர்க்கவும், பரத்தையோடு கூடவும் தலைவன் பிரிவான் என உலகியல்பற்றிப் பிரிவின் வழி பலவற்றையும் கோவைப்படுத்துகின்றார். பரத்தையிற் பிரிவு ஒன்று ஒழிந்த பிறவெல்லாம் சேயிடைப் பிரிவு; தொலைவுள்ள இடத்திற்குப் போகவேண்டுதலின் சேயிடைப் பிரிவாயின. (சேய் - தொலைவு; இடை - இடம்.) பரத்தையிற் பிரிவோ ஆயிடைப் பிரிவு. அவன் வாழும் ஊரிலேயே பரத்தையர் வாழ்வார் ஆதலின், அவ்வூர்க்குள்ளே பிரிந்துபோய் வருகின்றான். (ஆயிடை- அவ்விடை; அவ்விடம் - அவ்வூர்.)

**நாண் சிறத்தல்**

பரத்தையிற் பிரிவு கூறியதும், ஒரு கருத்துப்பற்றியே ஆதல் வேண்டும். உண்மைக் களவொழுக்கத்திற்கும், போலி இன்ப ஒழுக்கத்திற்கும் உள்ள வேறுபாடு தோன்றக் கூறினர் என்பது, அத்துணைப் பொருத்தமுடையதன்று. பொறாமை என்பது புலவி என்ற அளவில் நின்று இன்பத்தினை மிகுதிப்படுத்துவதனை யாவரும் அறிவர். புலவி நிலை இல்லாதபோது, இன்பநிலை ஒரே நிலையாய்த் துறவு நிலையேயாகும். பரத்தையிற் பிரிவு சேர்ந்தபோது, காதலி, வெறுப்பு நிலையில் வெதும்புகின்றாள்; பின் கூடிய போது, விருப்பநிலையில் நழுவிவிழுகின்றாள் வெறுப்பு நிலையை நோக்க, விருப்பு நிலை மிக இன்பம் உடையதாகின்றது. விருப்பு நிலையே முற்றமுடிய இருப்பின், அது சிறப்பதில்லை. அனைத்தும் வெள்ளையானால், அதனைக்கண்டு மகிழ்வார் இல்லை. கருமையின் அயலே, வெண்மை, யாவர் கண்ணையும் கவர்கின்றது. அங்ஙனமே, வெறுப்பு நிலையின் பின்னே எழுந்த விருப்பு நிலையே, இன்பத்தை மிகுதிப்படுத்துவதில் சிறந்ததாகின்றது. இவ் வெறுப்பு நிலையைப் பரத்தையிற் பிரிவு ஒன்றுதான் உண்டாக்கும் என முன்னோர்கள் எண்ணினார்கள் போலும். எவ் வெண்ணம்பற்றிக் கூறியிருந்தாலும், இப் பரத்தையர் நட்பு, இகழத்தக்கது என்பதனைத் திருவள்ளுவரே 'வரைவின் மகளிர்' என்ற தலைப்பின்கீழ்க் கூறியருளுகின்றார் அன்றோ! பரத்தையிற் பிரிவு என்பதற்குப் ''பரத்தையர்மேல் காதல் கொண்டு இன்பந் துய்ப்பது'' எனப் பொருள் கொள்ளாது, 'அவர்

களது ஆடல் பாடல் கண்டு கேட்டு இன்புறுவது' எனப் பொருள் கொள்கின்றார் தஞ்சை வாணன் கோவைக்கு உரை காண்கின்ற அட்டாவதானம் சொக்கநாத நாவலர். 'பரத்தையரது இன்சொல்லும் இழுக்கந்தருமாதலின், அவர்களோடு எத் தொடர்பும் வேண்டாது நள்ளாது விடுக' எனத் திருவள்ளுவர் கூறுகின்றார். ஆதலின், இவ் வகையிலும், பரத்தையிற் பிரிவு கூறுதல் ஒண்ணுமோ என்க.

**வரைவின் மகளிர்**

பரத்தையரைப்பற்றித் திருவள்ளுவர் என்ன கூறுகின்றார்? வரைவின் மகளிர் என்ற தலைப்பினகீழ்ப் பரத்தையர் கூட்டத்தை இழித்துப் பேசுகின்றார். ஒரு சிலர் கொள்கைப்படி, மனைவி பூத்த போதும், கருவுற்ற காலையிலும், நோயுற்ற நாளிலும், தாம், பொருளோ, பிறவோ நாடி அவளைப் பிரிந்த காலத்தும், காதல்வெறி கொண்டாருக்குப் பரத்தையர்களே காதற் கழிவிடமாய் உதவுகின்றார் களாம். போதிய வருவாய் இல்லாமல், மணந்து வாழ இயலாதவர் களை நல்வழியில் நிறுத்துவோர் பரத்தையரே என்பர் சிலர். பரத்தை யர் இல்லாவிடில், இவர்களனைவரும், இக் காலத்தில் கற்புடைய மக ளிரின் கற்பினைக் கெடுத்துவிடுவர் என்றும் எடுத்துக் காட்டுவர். பல ரும் கற்பொடும் வாழவேண்டுமானால், சிலர் கற்பின்றி வாழவேண்டும் என்று வாய் கூசாது கூறுவர். அப்பெண்கள் அத்தொழிலை அறிந்து செய்வதற்கு முன்னரே அவர்களுக்குப் பொட்டுக் கட்டுவதே நல்வழி என்பர். அன்றியும், ஆடல் பாடலில் வல்லவராய்க் கல்வி கேள்விகளில் சிறந்தவராய், அவற்றைக் காப்பவராய் விளங்கும் பரத்தையரே, அவ் வகையிற் பெண்களில் பெருமைபெற்றுத் திகழ்கின்றனராம். அத்த கைய பெண்களே உண்மைப் பெண்ணியல்போடு மகிழ்ந்து வாழ்கின்ற னராம். ஆதலின், அவாகளோடு கூடிவாழ்வதே, வாழ்க்கை என்பர். அவர்களிடையேதான், ஆடவனும் தனது உயிர் நிலையை அடைந்து தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுகின்றானும்.

**கற்பைக் காக்க கற்பைக் கெடுத்தல்**

திருவள்ளுவரோ, இத்தகைய கொள்கைகளை உடன்படுவர்? மணமிலாதாரும், மனைவியைப் பிரிந்தோறும் வரைவின் மகளிரைத் தேடவேண்டுமென்றால், அவர்களை நிறையற்ற மாக்கள் என இகழ்வர்.

'நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.'

[நெஞ்சினுல் பிறவற்றை ஆசைப்பட்டு, அவை காரணமாக கொடுப்பாரை மெய்யாற் புணரும் மகளிர் தோள்களை, நிறையாற் றிருந்திய நெஞ்சமில்லாதவர் தோய்வர்.]

அன்னோர், காந்தியடிகள் இந்நாளில் கூறுவதுபோலத் தம்மைத்தாம் காத்துக்கொண்டு, காதல் என்ற எண்ணமின்றி வாழ்தல் வேண்டு மென்பதே வள்ளுவர் கருத்து. அன்னோர், பரத்தையரோடு கூடுவது இன்பம் வேண்டி அன்றோ? பரத்தையரோடு கூடினால் இன்பமும் இல்லை என்கிறார் திருவள்ளுவர். இன்பமோ அன்புள்ள இடத்திற்றான் உண்டு என்பதே திருவள்ளுவர் முடிவு. பரத்தையரிடத்தே அன்பு இல்லையாதலின் இன்பமும் இல்லை என்பதற்கு மணக்குடவர், 'இன்ப மில்லாத பிறவாகிய பொருளை நெஞ்சினாலே விரும்பி வைத்து அன்புற் றார்போல் புணருமவர்' என்று உரைகூறுகின்றார். 'அன்பின் விழை யார்?' என்பதனையும், திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

### போலி இன்பம்

பரத்தையரது நாட்டமனைத்தும் பொருள் மேலேயே ஆதலின், இன்பத்தை அவர்கள் எண்ணுவதில்லை. தமது திருக்குறளை ஒரு முறை ஓதினும், பின்னர்ச் சாம் வரையும் 'பரத்தையர்' என்ற அள வில், உடல் கூசி நிற்குமாறு, அவர்கள் இழிவினை ஓர் உவமைகொண்டு விளக்குகின்றார் வள்ளுவர்.

'பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று'

மணமாவதற்கு முன்னரே ஒரு பெண் இறப்பின் அவளுக்கு உய்வழி இல்லை என்று எண்ணி, யாரேனும் ஓர் ஆடவனுக்கு, வேண்டிய பொன்னைத் தந்து, அப்பிணத்தை மணந்து தழுவுமாறு வேண்டிக் கொள்ளும் வழக்கம், சில கேடுகெட்ட மாக்களிடை வழங்குகின்றதாம். அவ்வழக்கத்தையே, வள்ளுவர் இங்குக் குறிக்கின்றனர் என்பர் ஒரு சாரார். பரிமேலழகியார், ''கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொது மகளிரது பொய்ம்மையை உடைய முயக்கம், பிணம் எடுப்பார் இருட்டறைக் கண்ணே, முன்னறியாத பிணத்தைத் தழுவினாற்போலும். பொருட்குமுயங்கும் மகளிர், கருத்துஞ்செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதானை முயங்குங்கால், அவர் குறிப்புக் கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாததோரிடத்தின்கண் இயைபில்லாதோர் பிணத்தை எடுக்குங்கால், அவர் குறிப்போடொக் கும்; எனவே, அகத்தால் அருவரா நின்றும் பொருள் நோக்கிப்புறத் தாற்றழுவுவார்' என உரை காண்கின்றார். எவ்வாறு பொருள் கொள்ளி னும், இதனைக் கற்றபின்னும் மனங்கூசாது பரத்தையரை நாடுவார் விலங்கே ஆவர். புலாலினைப் புண்ணென்று இடித்துரைத்தமை போன்று, பரத்தையர் கூட்டத்தினைப் பிணமுயக்கம் என்கின்றார். உவமை கொள்வதில் திருவள்ளுவரினும் சிறந்தவர் உளரோ? பரத்

தையர் கூட்டமொன்றே அன்று; அன்பிலார் கூடும் கூட்டமெல்லாம் பிணமுயக்கமே என்க. அப் பரத்தையர் பேசுவன இனியவாய் இருக் கிறன என்று அவருடன் கூடினால், பொருளை எல்லாம் உறிஞ்சி, நடுத்தெருவில் ஒடெடுத்தலைய விட்டு விடுவர்.

'அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்,'

[ஒருவனை அன்பு பற்றி விழையாது, பொருள் பற்றி விழை யும் மகளிர், அது கையுறுந் துணையும், தாம் அன்பு பற்றி விழைந் தாராகச் சொல்லும் இனிய சொல், அவனுக்குப் பின் இன்னாமை யைப் பயக்கும்.]

'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு,'

[ஒருவனோடு புணர்தலும் புணராமையும் ஒரு காலத்தே யுடைய மனமாகிய கவர்த்த மனத்தினையுடைய மகளிரும் கள்ளும், சூதுமென இம்மூன்றும், திருமகளாற் றுறக்கப் பட்டார்க்கு நட்பு.]

என வருதல் காண்க. பொருளைத் தேட வேண்டுவது இன்றியமை யாததே; ஆயினும், பொருளையே பொருளென்று கருதி, அறமும், அன்பும், இன்பமும் வேண்டாதுழைப்பதைப் பரத்தையரிடத்தே அன்றி எவரிடத்தும் திருவள்ளுவர் பழிக்கின்றார். இன்பத்தையும் இழந்து, அறமல்லாத வழியிற்சென்று, பொருளைச் செலவழித்தபோது, நாமடை வது நோயேயாகும். அவர்களது மேனி மினுக்கும், போலி இன்பந் தரும் புன்மையான பகட்டும், உள்ளீடாக உற்று நோக்குமிடத்து, நோய்க்குத் தாயகமாக விளங்குதலின் அவர்கள் நலம் புன்னலமே யாகும். அவ்வாறு, புன்னலமாதல் எதனால் என்பதனையும் வள்ளுவர் விளக்குகின்றார். இழிபவர், உயர்ந்தோர், மூத்தோர், இளையவர், கழியாநோயாற் கழிபவர், யாவரேனும் கண் வலைப்பட்டு நெஞ்சம் அழிப்பவர் பொருள்கொண் டெள்ளுக் கெண்ணெய்போ லளந்து காட் டிப் பழிபடு போகம் விற்கும் வரைவிலா மாணிழையார், எல்லார்க்கும் பொது நலத்தார் ஆதலின், எல்லார் நோயும் அவர்கள் நோய் ஆகின்றது. இன்பமும், பொருளும், அறமும் இழந்து, நோயினைப் பெறுவாரும் அறிவுடையவரோ?

### இன்ப நுட்பம்

ஒருவனும் ஒருத்தியும் என்ற முறையினைக் கைப்பற்றித் துய்ப் பவரது இன்பத்தில் ஒரு நுட்பம் உண்டு; அந் நுட்பம் பொது நலத் தாரோடு தோயும்போது இல்லை எனலாம்.

'பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
ஆயு மறிவி னவர்.'

[இன்பமாகிய பொருளை இகழ்ந்து, பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லிய நலத்தை அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்து செய்யும் அறிவினையுடையார் தீண்டார்.]

'பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தான்,
மாண்ட வறிவி னவர்.'

[இயற்கையாகிய மதிநன்மையான் மாட்சிமைப்பட்ட செயற்கை யறிவினை யுடையார், பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொதுவாய் ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார்.]

'அருட் பொருளாயு மறிவினவர்' என்பதில் உள்ளதொரு குறிப்பினை நாம் உள்ளத்தே பதித்துவைத்தல் வேண்டும். "புல்லிய உயிர்களிடத்தும் அருள் பாராட்டி நிற்பார் ஆறறிவுடைய மக்களில் ஒருத்தியை, வெறும் காதற்கழிவிடம் என எண்ணி, அவளை, நாண் முதலிய உயிர்ப் பண்புகள் இல்லாத அறிவிலாப் பொருள்போல, நடத்துவது அழகோ?" என வினவும் திருவள்ளுவர் உள்ளக்கிடை, பரத்தையரைப் பழியாது பரத்தையரைக் கெடுக்கும் ஆடவரைப் பழிப்பது போலும்! 'யானோ கெடுத்தேன்! பொருள் வேண்டிப் புனனலம் விற்றார்' என்று விடை கூறினால், அவர்கள் வறுமை யாலோ, அறியாமையாலோ பொருளை நாடி நின்றால், அதனைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களை அடிமை யாக்குவது அருளன்று என்பர் போலும்!

'தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப் பொருட்டா லூன்றருவா ரில்'

[பேதமை காரணமாக அல்லது ஊன் தின்கை காரணமாக உலகங் கொல்லாதாயின், பொருள் காரணமாக ஊன் விற்பார் யாவரும் இல்லை.]

என்று கூறுகின்றமைபோலப் பரத்தையரை வேண்டுவார் இல்லாக்கால், பரத்தையர் இலர் என்று கூறுகின்றனர் போலும்! அருளாளர்கள் தம்மிடம் பொருள் இருந்தால் அவற்றைப் பரத்தையர்க்கும், புன்னலங்கருதித் தாராது, இருள் கருதி ஈந்து, அவர்களை உயர்நிலையின் வைத்தல் வேண்டும் என்பதும் அவர் குறிப்புப் போலும்!

**கல்வியை விற்பதோ?**

ஆடல் பாடலில் வல்லவராய்க் கல்வி கேள்விகளிலே சிறந்தவராதலின், அவர்களோடு கூடுதல் ஓர் இன்பமாகின்றதென்றால், திருவள்ளுவர், அவையனைத்தும் வெளிமயக்கென இகழ்கின்றார்; அவற்றை விற்பனைக்கு அங்காடியில் கொண்டு வந்து விட்டமையால், அவற்

றிற்கு இழிவு தேடுவார், அவற்றின் சிறந்த பயனை அறிந்தவர் ஆகார் என எடுத்துக்காட்டுகின்றனர்; பரத்தையரேனும், வேரெவ ரேனும் கல்வி, கேள்வி, ஆடல், பாடல், அழகு என்ற இவற்றைப் பொருட்கென விற்றல் இழிவினும் இழிவு என்ற உயர்ந்த கொள்கை யினை நிலைநாட்டுகின்றார். கற்றோர் கற்றறிந் தடங்குவர். நிறை குடம் நீர் தளும்பல் இல்லை. பரத்தையரோ குறைகுடமாதலின் செருக்கித் திரிவர் அன்றியும், நாம் வெளிமயக்கால் ஏமாறிப்போதல் ஒண்ணாது, தம்மிடத்து இல்லாத பண்புகளை எல்லாம் உள்ளனபோலப் பொருளைப் பறித்தற் பொருட்டு, எடுத்துக் காட்டுவர் அப்பரத்தை யர். அது கண்டு மயங்கற்க என்கின்றார் வள்ளுவர்.

'தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.'

[ஆடல், பாடல், அழகென்பனவற்றால் களித்துத்தம் புல்லிய நலத்தை, விலைகொடுப்பார் யாவர் மாட்டும் பரப்பும் மகளிர் தோளினை, அறிவொழுக்கங்களானாய தம் புகழை உலகத்துக்குப் பரப் புதற்குரிய உயர்ந்தோர் தீண்டார்.]

'பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்''

[ஒருவனுக்கு உள்ள பொருளை அளந்தறிந்து அஃதெய்துந் துணையும் தம் பண்புடைமை சொல்லும் பண்பில்லாத மகிளிரது ஒழுக லாற்றினை ஆராய்ந்தறிந்து அவரைப் பொருந்தாது விடுக.]

என வருதல் காண்க. 'வரைவின் மகளிர் உலகிற்கே பெருங்கேடு சூழ்வர் என எடுத்துக்காட்டி, அவர்கள் உலகில் இருத்தலாகாதெனக் குறிப்பாகச் சுட்டுகின்றார் வள்ளுவர். அணங்கென்பது காதல் நெறியால் உயிர் கொள்ளும் கடவுட் பெண் எனக் கதைகள் கூறுவதை நேரில் கண்டறிந்தார் ஒருவரும் இல்லை. ஆனால், அறிவில்லாதவருக்கு வரைவின் மகளிர், உண்மையில் அணங்கென விளங்குதலின், அக்கயவர், அவர்கள் வலையில்சிக்கி உடல், பொருள், ஆவி, மூன்றையும் இழந்து மாய்கின்றனர். வரைவின் மகளிரைச் சேர்ந்தார், இவ்வாறு படாதபாடெல்லாம் படுதலினால், அம்மகளிரே அவர்களுக்குத் தீவாய் நிரயமாகின்றனர்.

ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு,'

[உருவுசொற்செயல்களான் வஞ்சித்தலை வல்ல மகளிரது முயக் கத்தை, அவ வஞ்சனையை ஆராய்ந்தறியும் அறிவுடையார் அல்லார்க்கு அணங்குதாக்கென்று சொல்லுவர் நூலோர்.]

'வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு''

[உயர்ந்தோர் இழிந்தோர் என்னாது விலைகொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிருடைய மெல்லிய தோள்கள், அக் குற்றத்தை அறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக் கழுந்தும் நிரயம்.]

எனவருதல் காண்க.

**வரைவின் மகளிர்க்கு அருள் புரிதல்**

வரைவின் மகளிர் என்ற தலைப்பின்கீழ் வள்ளுவர் அரசனும், அவனை ஒழிந்தாரும், அவர்களை நள்ளாதுவிடல் வேண்டுமென்று எடுத்துரைத்த பின்னர், இக் குறட்பாக்களைப் பாடுவதன் நோக்கம் என்ன? மாக்கள் நன்மையையும் கருதி, அரசன் அவர்களை அப்புறப் படுத்தல் வேண்டும்; அல்லது, அவர்களை நல்வழிப் படுத்தவேண்டும் இவ்வாறு சொல்லாமற் சொல்கின்றார் என்பது தானே விளங்க வில்லையா?

**வேலியே பயிரை மேய்தல்**

பிறர் எந்தக் கொள்கைகளைப் பின்பற்றி வரைவின் மகளிரின் இருப்பு வேண்டும் என்றார்களோ, அந்தக் கொள்கைகள் அத்துணையையும், இவ்வாறு மறுத்து உரையாடுகின்ற திருவள்ளுவரே, பரத்தையிற் பிரிவொன்று கூறினால், வேலியே பயிரை மேய்ந்த கதையாகத்தான் முடியும்.

**பரிமேலழகியாரும் பரத்தையிற் பிரிவும்**

பரத்தையரோடு கூடி ஒழுகுவதனை, வாத்ஸாயனர் முதலியோர் கூறுவது போலத் திருவள்ளுவரும் கூறுகின்றாரோ? அல்லாக்கால், வெறுப்பு நிலையால் விருப்பு நிலை சிறந்து விளங்குதலைத் தமது நூலில் திருவள்ளுவர் எங்ஙனம் காட்டுகின்றார்? இவைபோன்ற சில கேள்விகள் நம்மனத்தே இங்கு எழுகின்றன.

திருவள்ளுவர், தமது இன்பத்துப்பாலை 25 தலைப்பின் கீழ்க் கூறுகின்றாரேயன்றி, ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு கோவைக் கிளவியைத் தலைப்பாகத் தந்து எழுத இல்லை. பரிமேலழகியார், அவற்றை இடத்திற்கேற்ப எடுத்தெழுதிக் கோவைக் கிளவியிற் பெரும் பகுதியும் திருக்குறளில் உள்ளமையை விளக்குகின்றார். அவரும் எல்லாக் கிளவியும் பயின்று வருவதாக, உரை கூறவில்லை என்பதை நாம் மறத்தலாகாது. இது நிற்க. இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், மதியுடம்பாடு, இரவுக்குறி என்பனவற்றிற்கு எல்லாம், அப்பெரியார் எடுத்துக் காட்டும் குறட்பாக்களின் உரை நுணுக்

கங்கள் எல்லார் மனத்தையும் இன்புறுத்துவனவாகும். இதனின்றுமே, பரிமேலழகியாரது நுண்ணறிவு பெரிதும் புலனுகும். இவ்வாறு பல துறைகளுக்கும் ஏற்ற குறட்பாக்களை எடுத்துக்காட்டுகின்றமை போலப் பரத்தையர் பிரிவுக்கும் பல பாக்களை எடுத்துக் காட்டுகின்ருர். பிற துறைகளுக்கு இப்பெரியார் காட்டிய பாக்களுக்கு இவர் கொண்ட பொருளையன்றி வேருெரு பொருள் கொள்ள இடமில்லை.

'மதியும் மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்'' (நலம்புனைந்துரைத்தல்)

என்ற திருக்குறளில், தலைவியது நலத்தினைத் தலைவன் புனைந்துரைக்கின்ருன். இவ்வாறு புனைந்துரைப்பது எந்தப் பொழுதில்? இருண்டு பரவிய துன்பத்திடையே, இன்பப் பொறி எனச் சிதறுண்ட வான் மீன் விளங்கும் வானகத்தில், இன்பக்குடமெனத் திங்கள் ஒளிர்ந்து தீஞ்சுவை நிலவினைப் பொழிந்து நின்ற இராப்பொழுதில்தான் இவ வாறு பாடுகின்ருன் என்பதில், இப் பாட்டினை ஓதுவார்க்கு எள்ளளவும் ஐயமிருக்க இடம் இல்லை. எனவே இரவுக் குறிக்கண் பாடுகின்ற பாட்டாதல் வேண்டும் என்கிருர் பரிமேலழகியார். வான்மீன்கள் வானத்தே மினுக்கு மினுக்கென மின்னிப் பொழிகின்றன. மின்னுவது நிலையிற் கலங்கியதெனத் தோன்றுகிறது? ஏன் நிலைகலங்குகின்றன? அவை எப்போதும் திங்களோடேயே ஒன்றன்பின்ருென்ருகக் கூடிவருதல் முறையாகும். அம்முறைபற்றித் திங்களை நாடுகின்றன? தலைவி முகம் திங்களைப் போன்றிருத்தலின், அவை தம்மெதிரே இரண்டு திங்களைக் காண்கின்றன. இவ் விரண்டில் 'எதுதிங்கள்? எது முகம்? என அறியாது, நிலை கலங்கி மின்னுகின்றன. இவ்வாறு நலம் புனைந்துரைத்தல், திங்கள் நன்குபொலியும் இரவிடையேயன்ருே நடத்தல் கூடும்? இவ்வாறே, பரிமேலழகியார், பரத்தையிற் பிரிவொழிந்த மற்றைய துறைகளுக்கு எடுத்துக்காட்டுகின்ற பாடல்கள், அவ்விடத்திற்குப் பொருத்தமுடையனவாகப் பொலிகின்றன. ஆனல் பரத்தையிற் பிரிவினைச் சுட்டுவதாக அவர் எடுத்துக் காட்டுகின்ற பாக்களுக்கு அவர் கூறுகின்ற பொருளன்றி வேறுபொருள் பொருந்தாதெனக் கூற இடமில்லை. அவர் கூறுகின்றதே தலைசிறந்த உண்மைப்பொருள் என்று கொண்டாலும்; அவ்விடத்திற்கு வேறு பொருளும் பொருந்தும் என யாவரும் உடன்படுவர்.

### சில குறள்கள்

பரிமேலழகியார் பரத்தையிற் பிரிவுக்கு எடுத்துக் காட்டும் குறள்கள்தாம் யாவை?

'நாணென வொன்றோ அறியலம் காமத்தாற்
பேணியார் பெட்பச் செயின்.'

[நாம் விரும்பிய காதலர், காமத்தால் நாம் விரும்பிய கலவிகளைச் செய்தபோது நாணமென்பதனை யறியாது போயினேன்; நானே மேல் வீழ்ந்து தழுவினேன்.]

'பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை.'

[தலைவன் வரின் புலப்பேன். புலவி நீக்க, அவன் என்ன சொல்லினும், யாது செய்யினும் புலவி நீங்கேன்; அவனோடும் பேசேன். அவன் முகமும் பாரேன்' என்றெல்லாம் எண்ணியிருந்தேன். கல்விக்கண் எனக்கும் முற்பட வந்து தோன்றினன். என்னினும்தான் அன்பு மிகுதி யுடையான் போலத் தாழ்ந்த சொற்பல சொல்லினன். எனது நிறை எனும் அரணை, அச் சொற்கள் என்னும் படை அழித்து விட்டன. நான் மேல் வீழ்ந்து தழுவிக் கொண்டேன்.]

'புலப்பல் எனச்சென்றேன்; புல்லினேன்; நெஞ்சம்
கலத்த லுறுவது கண்டு.'

['தலைவர் வருவார், ஆனால், நான் புலந்து நிற்பேன்' என்று என் மனம் துணிந்து நின்றது. யானும் உடன்பட்டேன். ஆதலின், அவர் வந்தபோது, அவரெதிரில் நில்லாது, பிறிதோரிடத்துப் போய் மறைந்தேன். அவர் வந்ததும், என்மனம், தன் துணிவினை இழந்து, அவரோடு ஒன்றுபட்டு விட்டது. பின், யான் என் செயல்கூடும்? யானே போய்த் தலைவரைத் தழுவியணைந்தேன்.]

'நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.'

[கொழுப்பை நெருப்பிலிட்டால் உருகும். அதுபோலக் காதலனைக் கண்டால், காதலியின் நிறையும் அழியும்; அத்தகையது எமது நெஞ்சு. தலைவன் எதிர்ப்பட்டால் அவனோடு ஊடிப்பின்னும் உணராது 'முற்றமுடிய ஊடியே நிற்போம்' என்று அத்தகையார் மேற் கொள்வது கைகூடி வருவதோ.]

நிறையழிதல் என்ற இடத்தில் வரும் இந்த நான்கு குறள்களை யும், ''பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு நிறையழிவாற் கூடிய தலைமகள், 'நீ புலவாமைக்குக் காரணம் யாது?' என்ற தோழிக்குச் சொல்லியது'' என்ற தலைப்பின்கீழ் அடக்கிப் பொருள் கொள்கின்றார் பரிமேலழகியார். நாண் என்றால் பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல் எனப் பொருள் காண்கின்றார். இஃதொரு சிறந்த பொருளே யாகும்.

வேறு குறள்கள்

ஆனல், மேலேவரும் பாடல்களோடு இவற்றை ஆராயும்போது, இவை, பரத்தையிற் பிரிவிற்கே உரியன என்பது தெளிவாக விளங்க வில்லை. பரிமேலழகியாரே,

'புலப்பேன்கொல்? புல்லுவேன் கொல்லா? கலப்பேன்கொல்?
கண்ணன்ன கேளிர் வரின்'

என்று அவர்வயின் விதும்பலின்கீழ் வரும் குறளுக்குக் ''கண் போல் சிறந்த கேளிர் வருவாராயின் அவர் வரவு நீடித்தமை நோக்கி யான் புலக்கக் கடவேனே? அன்றி, என் ஆற்ருமை நோக்கிப் புல்லக்கக் கடவேனே? அவ் விரண்டும் வேண்டுதலான், அவ்விரு செயல்களையும் விரவக் கடவேனே? யாது செய்யக்கடவேன்?'' என்று பொருள் கூறி அக் குறளைத் ''தலைமகன் வரவு கூறி, 'ஆற்ருளாய்ப் பசக் கற்பாலை யல்லை' என்ற தோழிக்குச் சொல்லியது'' என்ற தலைப்பின்கீழ் அடக்கு கின்ருர்.

'ஊடற்கட் சென்றேன்மற் ருேழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.'

[''தலைவனைக் காணுத போது ஊடுவான் எண்ணினேன். அவனைக் கண்டபோது, என்னெஞ்சம், அத்துணிவை மறந்து அவனைக் கூடவிரும்பியது.'']

'எழுதுங்காற் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.'

[''மையிடுங்கோலை முன்னெல்லாம் கண்டு, எழுதுங் காலத்துக் காணமாட்டாது கண்; அஃதே போலத் தலைவனில்லாதபோது அவன் குற்றமுணர்ந்த நான் அவனெதிரில் அக்குற்றத்தை மறந்து விடுகின்றேன்.'']

இவற்றைப் பரிமேலழகியார் புணர்ச்சி விதும்பல் என்ற இடத்தில், ''பிரிதற் குறிப்பினனுகியானேடு நீபுலவாமைக்குக் காரணம் யாது? என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது'' என்ற தலைப் பின்கீழ்க் காட்டுகின்ருர். இந்தக் குறள்களுக்கும், மேலே பரத்தையர் பிரிவிற்கு எடுத்துக் காட்டிய குறள்களுக்கும் உள்ள வேற்றுமை தான் என்ன? பரத்தையர் பிரிவிற்கு எடுத்துக்காட்டப்பட்டவற்றை, இத் தலைப்பின் கீழும் அடக்குதல் கூடுமன்ருே? அடக்குதல் வேண்டு மென்பது எமது கருத்தன்று. ஒருதலையாகப் பரத்தையர் பிரிவு கூறப் படுகிறது என்று உறுதி கூறுவதற்கில்லை என்பதனையே வற்புறுத்து கின்ருேம். பரத்தையிற் பிரிவின்பின் நிகழ்ந்தன என வரும் மேற் காட்டிய குறள்கள், சேயிடைப் பிரிவின்கண் நிகழ்ந்தன எனலாம்.

''தலைவன் வருவதற்கு முன்னர் 'அவனை ஏறெடுத்துப் பாரேன்' என்று வலது பேசினையே! இப்போது இருவீரும் ஒன்றாகக் கூடிக் குலாவுகின்றீர்களே?'' என்று தோழி எப் பிரிவின் பின்னும் கேட்பது இயல்பே. பரத்தையிற் பிரிவு நேர்ந்தபோதுதான் கேட்டல் வேண்டும் என்ற முறை யாண்டும் இல்லை. சேயிடைப் பிரிவில்தான் ஆற்றாமை மிக்கெழுமாதலின், அங்குத்தான், தலைவி புலவியையும், நாணையும் மறந்து மேல் வீழ்ந்து தழுவுவாள்.

**நாண்**

நாண் என்பதற்குப் பரத்தையர் தோய்ந்த மார்பினைத்தோய நாணுதல் என்று ஒரு நுட்பம் காட்டுகின்றாரே பரிமேலழகியார் என்றால், அந் நுட்ப உரையும், பரத்தையிற் பிரிவு என்பதனை உடன்பட்ட பின்தான் எழுகின்றது. பரத்தையிற் பிரிவு நேர்ந்தபொழுதுதான் நாணம் எழுவதென்பது இல்லை; பலநாள் தன்னைப் பிரிந்து ஆற்றி இருந்தானே தலைவன் என அவன் பால் தலைவி புலந்தெழுகின்றாள். ''அவர்வரின் அவரோடும் ஒரு சொல்லும் பேசேன் அவர் முகத்தும் விழியேன்'' என்று தோழியரோடு உறுதி கூறுகின்றாள். அவன், வருகின்றான்; பணிமொழி சில பயிற்றுகின்றான். அடங்காத அன்பால் முன்னணைப்போர் ஆடவரே. பெண்கள் பெருநாணினராதலின், தாமாக வலிந்தணைப்பது இயல்பன்று; முன்னிலையில் அவனணைப்பப் பின்னிலையிலே அவளணைப்பாள். ஈது நாணல் இயைந்ததோர் இயல்பு. தலைவனைப் பல நாள் பிரிந்திருந்த தலைவியோ, தான் கூறிய வஞ்சினத்தை மறக்கின்றாள். தோழியர் கண்டு நகையாடுவரே என்பதை எண்ணுகின்றாள் இல்லை. இயற்கை நாணமும் எங்கோ பறந்து போகின்றது. கணவனைக் கண்டதும் கட்டித்தழுவுகின்றாள். இவ்வாறு நாண் கெடுவது; எந்தப் பிரிவிலும் நிகழும்; இந்த நாண் பெண்களுக்கியல்பாவது என்க.

> 'கருமத்தா னாணுத னாணுத் திருநுத
> னல்லவர் நாணுப் பிற'

என்ற குறளுக்குப் பரிமேலழகியார் காணும் உரையில் வரும் பெண்களின் இயற்கை நாண் ஆகும் ஈது. பரத்தையர் தோய்ந்த மார்பினைத் தோய நாணுதல், திருநீலகண்டநாயனாரின் மனைவியார் நாணியபடி, கருமத்தால் நாணுதலாக முடியும். அஃதே செயற்கைநாண். மணக்குடவரோ-ஆண், பெண்-இருபாலாரும் நாணுவது, 'கருமத்தால்'தான் என்று உட்கொண்டு, 'திருநுதல் நல்லவர் நாண்' என்பது பொது மகளிர் வெளிக்குக் காட்டிக்கொள்ளும் போலி நாணே எனப் பொருள் காண்கின்றார். அஃதெவ்வாறாயினும், நாணழிவது பரத்தையிற் பிரிவு சேர்ந்த வழி இயைந்ததொரு கூடலில்தான் என்பதற்கு

இடம் இல்லையன்றோ? பரிமேலழகியாரே பிறவிடத்தும் நாண் அழிவதைக் கூறுகின்றார்.

'இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.'

[''வஞ்சகா! தன்னை உண்டுகளித்தார்க்கு இளிவரத்தக்க இன்னாதவாகிய நாணின்மை, நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மை முதலாயினவற்றைச் செய்யினும் அவரால் மேன்மேல்விரும்பப் படுவதாகிய கள்ளைப்போல, எங்கட்கு நின்மார்பு, நாணின்மை முதலியவற்றைச் செய்யுமாயினும், எங்களால் மேன்மேல் விரும்பப் படா நின்றது. நீ அன்றோ கள்வன்?'']

இதனைப் பரிமேலழகியார் 'தலைமகள் புணர்ச்சி விதுப்பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது?' என்று எடுத்துக் காட்டுகின்றனர். இங்கேயும் நாணழிவு கூறப்படுகின்றது. ஆதலினால், பரத்தையிற் பிரிவில் தான் நாணழிவுச் சிறப்பித்துக் கூறப்படும் என்றமரபு ஒன்றில்லை. ''நாணுத் துறவு உரைத்தலாவது, தலைமகள் நாணும், தலைமகன் நாணும் இயற்கைப் புணர்ச்சியின் வழியே, பாங்கிக் கூட்டத்தில் துறந்ததைக் கூறுவது'' எனப் பரிமேலழகியாரே பொருள் கூறுகின்றார். மேலும்,

'நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணா மடநெஞ்சிற் பட்டு'

என்ற குறளுக்கு,

''தன்னை (நெஞ்சின்) மறந்த காதலரைத்தான் மறக்க மாட்டாத என் மாட்சிமை இல்லாத மட நெஞ்சுடனே கூடி, என்னுயிரினும் சிறந்த நாண்தன்னையும் மறந்து விட்டேன். மாணாமை, ஒரு நிலையில் நில்லாமை; மடமை, கண்ட வழி நினைந்து காணாவழி மறக்குந் தவற்றைக காணாவழி நினைந்து கண்டவழி மறத்தல். நாண், எஞ்ஞான்றுங் கூடி ஒழுகினும் அஞ்ஞான்று கண்டாற் போன்று ஒடுங்குதல். கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலின் 'அதனையும் மறந்தேன்' என்றாள்''

என்று பரிமேலழகியார் உரை கூறுகின்றார். இவ்வுரைக் குறிப்பில் பரிமேலழகியார், நாணின் நுண்ணியல்பை மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றார் அன்றோ?

**மணக்குடவரும், பரிமேலழகியாரும்**

மணக்குடவரோ, பரிமேலழகியார், பரத்தையிற் பிரிவுக்கு எடுத்துக்காட்டிய பாக்களுக்கு, வேறு வகையில் பொருள் கொள்கின்றார். 'பன்மாயக் கள்வன்' எனவருங்குறளை,

''இது, 'பெண்மையல்ல' என்ற தோழிக்கு, 'அவன் என்னோடு கலந்த நாளில் சொன்ன சொற்கள் காண் பெண்மையைக் கெடுக்

கின்றது; அல்லது கெடாது' என்று தலைமகள் கூறியது''

என்பதற்காக எடுத்துக் காட்டி உரை கூறுகின்றார். 'நிணந் தீயி லிட்டன்ன' என்பதற்கும் மேற் கூறியவாறே பொருள் கொள் கின்றனர். போலும்! அவர் உரை கிடைக்கவில்லை. 'புலப்பல் எனச் சென்றேன்' என்றகுறளை,

''இஃது, 'ஊடுதல் தீமை' என்ற தோழிக்கு, 'முன்னொருகால், அவளைப் பிரிந்து கூடிய என் மனம், செய்தது இது, எனத் தலை மகள் கூறியது''

என்பதாகக் காட்டுகின்றனர் 'நாணென ஒன்றோ' என்ற குறளும், இப் பொருள்பற்றி வந்ததெனும் கருத்துடையார் போலும்! மணக்குடவர், உரை கிடைத்திலது. எனவே, பரிமேலழகியார் எடுத்துக் காட்டிய பாக்கள், பரத்தையிற் பிரிவினை உடன்படுகின்றன என்று ஒரு தலை யாகக் கூற இடமில்லை என்பதாயிற்று.

ஆனால், மணக்குவடர் நெஞ்சோடு புலத்தலில், பரத்தையிற் பிரிவினைக் கூறுகின்றார்.

''நெஞ்சொடு புலத்தலாவது தலைமகள் பரத்தையிற் பிரிந்துழி அவனொடு புலக்கக் கருதிய தலைமகள் முற்பட அதனோடுகூட வேண் டிய நெஞ்சொடு புலந்து கூறுதல்'' என்பது மணக்குடவர் உரை. ஆனால், பரிமேலழகியாரோ,

''அஃதாவது, காரணமுண்டாய வழியும், புலக்கக் கருதாது: புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே, தலைமகள் புலத்தலும், தலை மகன் புலத்தலுமாம்,''

என்று நெஞ்சொடு புலத்தலுக்கு உரை கூறுகின்றார். ''புலக்கக் கரு தாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சு'' என்று பரிமேலழகியார் கூறு கின்றமையால், அப்பெரியார் புணர்ச்சி விதும்பலில் பரத்தையிற் பிரி வைக் குறிக்கின்றாரோ என ஐயம் எழலாம். புணர்ச்சி விதும்பல் என்றற்கும்,

''அஃதாவது, தலைமகனும் தலைமகளும் புணர்ச்சிக் கண்ணே விரைதல். மேற் புணர்ச்சி மிகுதிபற்றித் தலைமகன் பிரிதற் குறிப்பு அறிவுறுத்த தலைமகள் அவன் மாட்டே நிகழாது வேட்கை மிகலினாற் பின்னுந் தன் கண்ணே நிகழ்தலான், இது குறிப்பறிவுறுத்தலின் பின் வைக்கப்பட்டது'' என்று பரத்தையிற் பிரிவை உட்புகுத்தாது உரை கூறுகிறார் பரிமேலழகியார். இவ்வாறு வேறுவகையாற் பொருள் கொள்ள இடமிருத்தலால் பரத்தையிற் பிரிவாலேதான், நெஞ்சோடு புலத்தல், ஒரு தலையாக நிகழ்கின்றதெனக் கூறுவதற்கில்லை.

### குறிய ராய்ச்சி

பரிமேலழகியாரும், மணக்குடவரும் கண்ட உரை பொருத்த மற்றவை எனக் கூற எவரும் முன் வாரார். பரத்தையிற் பிரிவுக்கும் எடுத்துக்காட்டுகள் திருக்குறளில் உண்டானல், பரிமேலழகியார் கண்டதே மெய்யுரையாகும். அஃதே மெய்யுரையானபோதும், திருவள்ளுவனுர், பரத்தையிற் பிரிவினைப்பற்றி வெளிப்படையாகவேனும், ஒருதலையாகத் துணியத்தக்க குறிப்பாலேனும் கூறவில்லை என்பதில் ஐயம் இல்லை. ''திருவள்ளுவர் அகப்பொருள் கூறுகின்ருர். அகப்பொருளில் பரத்தையிற் பிரிவும் ஒரு துறையாகும், திருக்கோவை முதலியவற்றைக் காண்க. ஆதலின், திருவள்ளுவரும் பரத்தையிற் பிரிவு கூறுகின்ருராதல் வேண்டும்,'' என்ற குறியாராய்ச்சி (அநுமானம) ஒன்றனுல்தான், திருக்குறளில் பரத்தையிற் பிரிவினைக்காண முந்துகின்ரேம். திருவள்ளுவர் பரத்தையிற் பிரிவினையே பேசுவதில்லை என்ற துணிவுகொண்டு, தமது திருநூலை எழுதியிருந்தால், இக் குறியாராய்ச்சி என்ன ஆகும்?

### ஆயிடைப்பிரிவு

சேயிடைப்பிரிவு, ஆயிடைப்பிரிவு என்று பரிமேலழகியார் பிரிக்கின்றபாகுபாட்டினை முன்னரே குறித்துவைத்தோம். பரத்தையிற் பிரிவொன்றே ஆயிடைப்பிரிவு. மற்றையன எல்லாம் சேயிடைப்பிரிவு. திருவள்ளுவர், பிரிவினைப் புனைந்துரைக்கின்ருர் என்பதில் ஐயமில்லை. பரத்தையிர் பிரிவு என்ற சொற்ருெடரையோ, பொருளையோ மேலே காட்டப் போகும் ஓரிடத்தன்றி, வேறெங்கும் காண்கின்ரேம் இல்லை ஆனுல், அவர் கூறும் பிரிவின் புனைந்துரையில், சேயிடைப்பிரிவு, ஆயிடைப்பிரிவு என்பனவற்றைப் பற்றிய குறிப்பேனும் உண்டோ என ஆராய்தல் வேண்டும். ஆயிடைப்பிரிவு, இடத்தாலன்றிப் பொழுதாலும் சிறிய பிரிவாகும். இதனைப்பற்றி வெளிப்படையாகவேனும் துணிந்து கூறத்தக்க தெளிவான குறிப்பாலேனும் திருவள்ளுவர் கூறவில்லை. ஆனுல், சேயிடைப் பிரிவினைப் பற்றிய குறிப்புக்களே எங்கும் மலிந்துள்ளன.

### சேயிடைப்பிரிவு

சேயிடைப் பிரிவினை விளக்கும் குறிப்புக்கள் யாவை?

'ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்ருர்
வருநாள்வைத்தேங்கு வார்க்கு.' (அவர்வயின் விதும்பல்)

[''சேயிடைப் பிரிந்தார் வருவதாகக்குறித்த நாளை மனத்தில் எண்ணி, 'அந்நாள் எந்நாள் வரும்' என உயிர் தாங்கி வருந்தும் மகளிர்க்கு, ஒரு நாள் பல நாள்போல் நெடிதாகிக் காட்டும்.'']

'வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.' [அவர்வயின் விதும்பல்]

['அவர் நம்மைப்பிரிந்து போய் நாள்கள் சுவரின்கண் இழைத்த வற்றைத் தொட்டு எண்ணுதலான் என் விரல்கள் தேய்ந்தன. அதுவே அன்றி, அவர் வரும்வழி பார்த்து என் கண்களும் ஒளி யிழந்து புல்லியவாயின. இவ்வாருயும் அவர் வரவு உண்டாயிற் றில்லை.']

பல நாள் சென்றமை குறித்தலின் இஃதும் சேயிடைப் பிரிவே ஆகும்.

'சிறுமை நமக்கொழியச் சேட்சென்ரு ருள்ளி
நறுமலர் நாணின கண்.' (உறுப்பு நலனழிதல்)

[''முன்னர் நம்முடைய கண்கள் இன்பத்தோடு பொலிந்த போது அவற்றின் அழகுக்கு உடைந்து வெட்கிய மலரோ பல. தலைவன் இன்ன நாள் வருவதாக, நாள் குறித்து வைத்து உறுதி கூறிப் போய் இருக்கவும், ஆற்ருது புலம்புவது சிறுமையே அன்ரே? இவ் வாறு சேயிடைச் சென்ற தலைவனை எண்ணி, ஆற்ருமையால் ஒளி இழந்து வாடும் கண்கள், முன்னர் நாணி நின்ற மலர்களை இப்போது கண்டு, இதுகாலை, மலர்க்கிருந்த பொலிவும் தமக்கு இல்லாமையால் நாணுகின்றன.'']

'பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நந்நிலைய ராவ ரெனின்.' (பசப்புறு பருவரல்)

[''இப்பிரிவை யானே உடம்படும்வகை சொல்லியவர், இன்று என் தோழியாகிய நின்கருத்தான், நல்ல நிலையினர் ஆவராயின் என்மேனி பட்டது படத்துன்புற்றுப் பசப்பதாக.'']

இதனால், தன்னிடத்தே பிரிவினை அறிவித்துத் தனது உடம்பாட்டினைப் பெற்றுப் போயினன் தலைவன் என்பதனைத் தலைவி கூறுகின்ருள். ஆயிடைப் பிரிந்து செல்வான் அவளுக்கு அறிவித்தலும் செய்யான், அவள் உடம்படுதலும் செய்யாள். எனவே, ஈதும் சேயிடைப் பிரிவே யாகும்.

**தலைப்புக்கள்**

அஃதேயுமன்றி, இன்பத்துப் பாலில் அமைந்த பல தலைப்புக்கள் நின்றமுறையும், சேயிடைப் பிரிவினைத்தான் குறிக்கின்றது. பிரி வாற்ருமை; பிரிவாற்ருமையால் பிரிந்த துன்பத்தினை நினைப்பதால் மெலிந்து இரங்கும் படர் மெலிந்திரங்கல்; படர் மெலிந்திரங்கிய தலைவி, தலைவனைக்காண விரைந்து வருந்தும் கண்விதுப் பழிதல் கண்விதுப்பழிந்தும் கணவனைக் காணப் பெருதவள். பிரிவாற்ருமை யால் உடல் பசந்து வருந்தும் பசப்புறுபருவரல்; பசப்புற்று வருந்திய தலைவி, தலைவன் இன்றி ஒன்றியாய் நின்று, பெருந் துன்பமுறும்

தனிப்படர் மிகுதி; தனிப்படர் மிகுதி எழுமாறு ஒருவரை ஒருவர் பிரிந்த தலைவனும் தலைவியும், முன் கூடிய ஞான்றை இன்பத்தினைப் பிரிந்த இந் நிலையில் நினைந்து, தனித்துப் புலம்பும் நினைந்தவர் புலம்பல்; நினைந்தவர் புலம்புகையில் நனவின்கண் நினைவு மிகுதியால் கண்ட கனவு நிலையுரைத்தல்; 'நனவில் நிகழ்ந்ததே கனவில் நிகழும்' என்பதை நம்பி, 'நெருநற் கனவிற் கண்டதைப் பகலில் காணாது விட்டமை என் குறை' என எண்ணி, கனா முந்துறுத வினையின்மையின், 'இன்று இரவு, கனவினைக் காண்பதற்கு முன், தலைவனோடு கனவில் முயங்கும் முயக்கம், இப்பகலில் மெய்யாகி நிகழவேண்டும்' என்று அதனைக் காண வேண்டிக் கனவு நிலையுறுத்தவள், பகற்பொழுதெல்லாம் ஆற்றி இருந்து, மாலைப்பொழுது வந்ததும் தனியவரை முனிவு செய்யும் அப் பொழுது கண்டிரங்கல்; பொழுது கண்டிரங்கித் துன்பம் மிக்குழி, தலைவி உறுப்பு நலனழிதல்; உறுப்பு நலனழிந்து, உடலும், உள்ளமும் ஒடுங்கிய பின்னும், அவன் வாராமை கண்டு, ஆற்றாமை மீதூரத் தனக்கொரு பற்றுக்கோடு காணாத தலைமகள் செய்திறனறியாது தன் நெஞ்சொடு கிளத்தல்; தன்னைத் துறந்தும், தன் புறக் கவினைப் பசப்புறுமாறு கொள்ளை கொண்ட தலைவன், தன் நினைவின் வழியே, உள்ளத்தில் என்றும் இருத்தலின், அகக் கவினாகிய நிறையினையும் தான் இழக்க வேண்டி வரும் என நெஞ்சொடு கிளந்த தலைமகள், தனது மனத்தே அடக்கற் பாலனவற்றை வேட்கை மிகுதியான் அடக்கமாட்டாது வாய்விட்டுக் கூறி நிறையழிதல்; சேயிடைப் பிரிந்த தலைமகனும், நிறையழிந்த தலைமகளும் வேட்கை மிகலினான், ஒருவரையொருவர், காண்டற்கு விரையும் அவர் வயின் விதும்பல்; பின், தலைவன் வந்த போது, தலைவன், தலைவி, தோழி என்ற இவர்கள், தங்கள் குறிப்பறிவுறுத்தல்; தலைவியும் தலைவனும் புணர்ச்சிவிதும்பல்; தலைவனும் தலைவியும் காரணமுண்டாய வழியும் புலக்கக் கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சொடுபுலத்தல் என்று தொடர்புபடுத்தித் தலைப்பின் அமைப்பின் முறையினைப் பரிமேலழகியார் விளக்குகின்றார்; பின்னே, புலவியும், புலவிநுணுக்கமும், ஊடலுவகையும் கூறுகின்ற முறையினையும் விளக்கித் தம்முரையை முடிக்கின்றார். இவ்வாறு செல்லும் நூலின்போக்கை நோக்கினாலும், இங்குக் கூறப்படும் பிரிவு சேயிடைப்பிரிவு என்பதும், ஆற்றாமையும், புலம்பலும், உடல்மெலிதலும், நிறம் பசத்தலும், நிறையழிந்து வாய்வெருவலும் முதலான துன்ப மனைத்தும் தொடர்ந்தெழுவது நெடுநாட் பிரிவிலேதான் என்பதும் நமக்குத் தெள்ளிதின் புலனாகின்றன. பரிமேலழகியாரே. அவர்வயின் விதும்பலுக்குப் பொருள் கூறுமிடத்து, ''அஃதாவது, சேயிடைப் பிரிவின்கண் தலைமகனும், தலைமகளும்

வேட்கை மிகலினுன் ஒருவரை ஒருவர், காண்டற்கு விரைதல், தலைமகன் பிரிவும், தலைமகள் ஆற்ருமையும், அதிகாரப்பட்டு வருகின்றமையின் இருவரையும் சுட்டிப் பொதுவாகிய பன்மைப் பாலாற் கூறினர்,'' என்று உரை எழுதுகின்ருர்; மேலும், இப் பாலின் பல தலைப்புக்கள், ஒன்றன்பின் ஒன்ருகத் தொடர்ந்து எழுகின்றன என மேலே காட்டியபடியே காட்டுகின்ருர். எனவே திருவள்ளுவர் சேயிடைப் பிரிவே கூறுகின்ருர் என்பது அவர்க்கும் கருத்துப்போலும்!

**பிரிவு அறிவுறுத்தல்**

மற்ருெரு குறிப்பினையும், இங்கு எடுத்துக்காட்டல் வேண்டும். இந்த நூல் கூறுகின்ற பிரிவின் தொடங்குநிலையைப் பிரிவாற்ருமையிற் புனைந்துரைக்கின்ருர் வள்ளுவர். அங்குப் பிரிவினைத் தலைவன், தலைவிக்கும் தோழிக்கும் அறிவுறுத்திப் போவதாகவே வள்ளுவர் கூறுகின்ருர்.

'செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.'

[''நீ எம்மைப் பிரியாமை யுண்டாயின் அதனை எனக்குச் சொல்; அஃதொழியப் பிரிந்துபோய் நின் விரைந்து வருதல் சொல்வையாயின் அதனை அப்பொழுது உயிர் வாழ்வார்க்குச் சொல்.'']

'பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை.'

[''நம் கவவுக்கடுமை அறிந்த தலைவர், தாமே நம்முன் நின்று தம் பிரிவினை உணர்த்தும் வன்கண்மையுடையராயின், அத்தன்மையார் பின்பு நம் ஆற்ருமை அறிந்து வந்து தலையளிசெய்வர் என்றிருக்கும் ஆசைவிடப்படும்.''] இவை பிரிவறிறுவுத்துவது உண்மையேயாயினும், பிரிவாற்ருமையில் மற்றைய பாக்கள் இல்லையோ என்ருல் அவற்றை எல்லாம், நால் வகையாக எழுந்த பிரிவாற்ருமையில் அடக்குகின்ருர் பரிமேலழகியார்.

''அஃது (பிரிவாற்ருமை) ஆவது, வரைந்தெய்தியபின், தலைமகன், அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுச் சேயிடையினும், ஆயிடையினும் தலைமகளைப் பிரிந்து செல்லும்; செல்லுஞான்று, அப்பிரிவினை அவளாற்ருளாந் தன்மை. அஃது (1) ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி கூறலும், (2) அவள் தனக்குத் தலைமகடானே அவன் குறிப்பாலுணர்ந்து கூறலும், (3) பிரிவுணர்த்திய வழிக்கூறலும்; (4) தலைமகன் பிரிந்துழி ஆற்றுவிக்குந் தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறலும் என நால்வகையாற் கூறப்படும்.''
என்பது அவர் உரை, இவை நான்கில், முதற் கூறிய மூன்றுவகையான பிரிவாற்ருமையும் பரத்தையிற் பிரிவின் கண் எழுந்தன. ஆகா

பரத்தையிற் பிரிவைத் தலைவிக்குக் குறிப்பாலோ, வெளிப்படையாலோ உணர்ந்தும் வன்கணாளன் தலைவனாகான். அன்றியும், அஃது உலக வழக்கும் அன்று. நான்காவதாகக் கூறப்பட்ட பிரிவாற்றாமையோ எனின், அஃதும், பரத்தையிற் பிரிவால் நிகழ்வதன்று. இதனைப் பரிமேலழகியார், அத் தலைப்பி லடங்கிய குறள் கொண்டே விளக்கு கின்றார்.

'அறிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.'

(ஈது) ''தலைவியர் பலரும் பிரிவாற்றி இருப்பர், அது நீ செய்கின்றிலை என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.'' ''நீ சொல்லுகின்ற தொக்கும். பிரிவுணர்த்தியவழி அதற்குடன்பட்டுப் பிரியுங்கால் நிகழும் அல்லல் நோயினையும் நீக்கிப் பிரிந்தால், அப் பிரிவுதன்னையும் ஆற்றிப் பின்னுமிருந்து உயிர்வாழும் மகளிர் உலகத்துப் பலர்.'' 'இக் குறளிலும் 'அரிதாற்றி' என்பதால் பிரிவுணர்த்தல் பேசப்படுகின்றதன்றோ? மற்றைய பாக்களை, இந் நான்காந் தலைப்பின்கீழ்ப் பரிமேலழகியார் அடக்கிப் பொருள் கூறவில்லையாதலின், அவற்றை ஆராயவேண்டுவதில்லை. எனவே, சேயிடைப் பிரிவே, பரிமேலழகியாரும் கூறுகின்றார் என்பதாயிற்று.

அறம்பொருள் பற்றிய பிரிவு

ஈண்டு, மற்றொரு குறிப்பும் ஆராயத்தக்கதாம். பரத்தையிற் பிரிவினைப்பற்றி ஒரு குறிப்புமில்லையானால், மற்றைய பிரிவினைப் பற்றிய குறிப்பு உண்டோ என்ற கேள்வி எழுவதும் இயல்பே. ஆறு வகையாகப் பிரித்த பிரிவின் வகையினை முன் கண்டோம். பரிமேலழகியாரோ, முப்பாலாக உலகத்து உறுதிப்பொருளை ஆராயும் திருவள்ளுவரது முறையினைப் பின்பற்றி, அறம்பற்றிப்பிரிவு, பொருள் பற்றிப் பிரிவு, இன்பம்பற்றிப் பிரிவு எனமாந்தர்களுக்கு அமைந்த உறுதிப் பொருள்களையே அடிப்படையாகக் கொண்டு பாகுபாடு செய்கின்றார். வீட்டைப் பற்றிய பிரிவோ துறவாகும். அது நிகழ்ந்தபின் கூடுதல் இல்லையாதலின், அதனை அகப்பொருள் ஆராய்வார் கூறுவதில்லை. எனவே, பரிமேலழகியார் கூறும் மூன்று பிரிவின் வகையே, இறையனார் கூறும் ஆறு பிரிவும் என்க. பரத்தையிற் பிரிவு, இன்பம் பற்றிய பிரிவு; காவற்பிரிவு அறம்பற்றிய பிரிவு; காவற்பிரிவிலும் அறமே துணையாக நிகழாதனவும், பிறபொருட்பிரிவு எனக் கண்டு கொள்க. பேரருட் பிரிவினைத் திருவள்ளுவர்,

'பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர்' (பொழுதுகண்டிரங்கல்)

[''காதலர் பிரிவைப் பொறுத்து இறந்து படாதிருந்த என்னுயிர் இன்று பொருளியல்பே தமக்கியல்பாக உடையவரை நினைந்து இம் மயங்கும் மாலைக்கண்ணே இறந்துபடா நின்றது.''] என்று கூறுகின்றார். அறம் பற்றிய பிரிவினை,

'வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து' (அவர்வயின்விதும்பல்)

[''வேந்தன் வினை செய்தலைப் புரிந்து வெல்வானாக; யாமும் மனைவியைச் சென்று கூடி ஆண்டை மாலைப்பொழுதிற்கு விருந்தயர் வோமாக.'']

என்றும்,

'உரனசைஇ உள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னும் உளேன்'' (அவர்வயின் விதும்பல்)

[''இன்பம் நுகர்தலை நச்சாது வேறலை (வெற்றி) நச்சிநாந் துணையாதலை இகழ்ந்து தம் ஊக்கந் துணையாகப்போயினார். அவற்றை இகழ்ந்து ஈண்டு வருதலை நச்சுதலான் யான் இவ் வெல்லையினும் உளேன் ஆயினேன்.''] என்றும் கூறுகின்றார். உரன் என்பதற்கு அறிவு என்றேனும், நில்லா வுலகத்து நிலைஇய அறன் என்றேனும் பொருள் கொள்ள இடமுண்டு. இவ்வாறு அறனும் பொருளும் கூறுகின்றமைபோல, இன்பம் பற்றிய பிரிவினை வள்ளுவர் கூறவில்லை.

## நாணழிவு

அல்லாமலும், பரத்தையிற் பிரிந்து வந்தபோது வெறுப்புநிலை வலிவுற்று நிற்றலின், நாணுத்துறத்தல்எளிதில் ஆவதில்லை. எனவே, நாணழிவு கூறிய குறட்பாக்கள் பரத்தையிற் பிரிவல்லாத பிரிவுக்கே சாலப் பொருந்தும். பரிமேலழகியார், பிரிவினை மூவகை யாக்கித் ''தலைமகன் அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினும் தலைமகளைப் பிரிந்து செல்லும்'' என்று கூறுகின்றமை கண்டோம். ஆனால், அவரே இப்பாலில் அமைந்த தலைப்பின் அடைவினைக்கூறி வருகிற பொழுது, இன்பப் பிரிவினைச் சொல்லாது விடுகின்றார். தனிப்படர் மிகுதிக்கு பொருள் கூறுகின்றவர், ''அது தனியாகிய, படர் மிகுதி என விரியும். அஃதாவது படர் மிகுதி, தலைவன்கண் இன்றித் தன்கண்ணதேயாதல் கூறுதல். அறமும் பொருளும் நோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லை ஆயிற்று'' என்று எழுதுகின்றாராதலின், அவர்க்கும் இன்பப் பிரிவாகிய பரத்தையிற் பிரிவினைக் கூறாமை உடன்பாடாம்.

புலவி

இவ்விடம் இவ்வாறாக, மற்றோரிடத்தும் பரிமேலழகியார் பரத்தையிற் பிரிவினைச் சுட்டுகின்றார். சில தமிழ்ப் பெரியோர், இன்பத்துப் பாலின் 25 தலைப்புக்களையும், ஐயைந்தாகப் பிரித்துக் குறிஞ்சி நெய்தல், பாலை, முல்லை, மருதம் எனப்பாகுபடுத்திக் கடைநின்ற 5 தலைப்பாகிய புணர்ச்சி விதும்பல், நெஞ்சொடு புலத்தல், புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை என்பனவற்றை, ஊடலும், ஊடல் நிமித்தமும் கூறும் மருதவியல் என்பர். மருதமாவது, ஊரும் ஊர்ப் புறமும் ஆகும். முன்னேற்றம் அடைந்த ஊர்கள் தாம் பலருக்கும் இடமாதலின்; பரத்தையருக்கும் இடமாகின்றன. அங்கன்றி வேறெங்கும் பரத்தையர் இருப்பதாகப் பண்டைத் தமிழர் கூறியதில்லை. இயற்கைக்கு மாறுபட்ட வாழ்க்கை அங்குத்தான் உள்ளது போலும்! பரத்தையர் உள்ள இடத்தில் நிகழும் அகப்பொருள் வரலாற்றில் அவர்களும் வருவர் அன்றோ? பரத்தையர்பாற் சென்று வந்தபோது ஊடல் நிகழ்வது மருதமாதலின், இம் மருத இயலில் இப் பிரிவு கூறுதல் பொருத்தமுடையதாகும். இம் மருத இயலுக்கு முந்திய பகுதிகளில் பரத்தையிற் பிரிவு கூற இடமில்லை அன்றோ! இதுவரை நாம் ஆராய்ந்ததும் அன்றோ! இதுவரை நாம் ஆராய்ந்ததும் அதனையே வற்புறுத்துகின்றது. ''நிறையழிதல்'' என்ற இடத்தில், பரிமேலழகியார், பரத்தையரைக் கொண்டுவந்து புகுத்துகின்றார் எனக் கண்டோம். அவர் காட்டிய குறள்களுக்கு மணக்குடவர் வேறு பொருள் கொள்கின்றமையும் கண்டோம். அக் குறள்களைப் போன்றே புலவியைக் கூறும் குறள்கள், 'அவர்வயின் விதும்புதலும், புணர்ச்சி விதும்பலில்' வருகின்றமையையும் கண்டோம். அவர்வயின் விதும்பலில் 'சேயிடைப் பிரிவே குறிக்கப்படுகின்றது' எனப் பரிமேலழகியாரே எடுத்துக்காட்டுகின்றமையும், பரத்தையற் பிரிவைப்பற்றிக் கூறாமல் பரிமேலழகியார் உரைகாண்கின்றமையும் கண்டோம். ஆதலின், பரத்தையிற் பிரிவைக் குறிப்பதாக அவர் எடுத்துக்காட்டிய குறள்களுக்கும், 'அவர்வயின்விதும்பல்' முதலிய இடங்களில் வரும் வேறு சில குறள்களுக்கும், அப்பெரியார் பொருள் கொள்கின்றமைபோல, பரத்தையிற் பிரிவைக் குறியாமலே பொருள்கொள்ளுதல் கூடும் எனவும் கண்டோம். ''நிறையழிதல்'' என்பதற்கும் பரிமேலழகியார், ''அஃதாவது தலைமகள் மனத்தடக்கற்பாலனவற்றை வேட்கை மிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல்'' என்று காண்கின்ற பொருளும் பரத்தையைக் குறிக்கவில்லை யன்றோ? எனவே மருத இயலுக்கு முன்னுள்ள பகுதியில் பரத்தையரைப் பற்றிய தெளிவான குறிப்புகள் ஒன்றேனும் இல்லை என்பதாயிற்று. மேல், மருதஇயலில் முதலாம் பிரிவாகிய புணர்ச்சி

விதும்பலில் பரத்தையிற் பிரிவு கூறப்படாமை கண்டோம். இரண்டாவதாகிய நெஞ்சறிவுறுத்தலில், மணக்குடவர் பரத்தையிற் பிரிவு கூறுகின்றமை காண்கிறோம். ஆனால், பரிமேலழகியார் வேறு வகையிற் பொருள்கொள்கின்றனர் அன்றோ? எனினும், பரிமேலழகியார் மூன்றாவதாகிய புலவி என்ற தலைப்பின்கீழ்ப் பரத்தையிற் பிரிவினைச் சுட்டுகின்றார்.

'அலந்தாரை யல்லனோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்,'

"தம்மைப் பெறாது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கலவாது, ஆடவர் சேறல், பண்டே துன்பமுற்றழிந்தாரை அதன் மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற் போலும்" என்று பாவின் பொருள் கூறிப் "பிறர்பாற் சேறலின் நும்மைப்பெறாது புலந்தூடி இருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவி நீக்கிப் புல்லீராயின் அவர் ஆற்றார்" எனக் கருத்துரைக்கின்றார் பரிமேலழகியார். இக்குறளுக்கு மணக்குடவர் எழுதிய உரை நமக்கு அகப்படவில்லை.

'ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று,'

"நும்மோடு ஊடிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடாதொழிதல், பண்டேநீர் பெறாது வாடிய கொடியை, அடியிலே அறுத்தாற் போலும். நீர் பரத்தையரிடத்தர் ஆயவழி எம் புதல்வரைக் கண்டு ஆற்றி இருக்கற் பாலதாய யாம் நும்மோடு ஊடுதற்குரியம் அல்லம். அன்மையின், எம்மையுணர்தல் வேண்டா. உரியராயூடிய பரத்தையரையே உணர்த்தல் வேண்டுவது. அதனால், ஆண்டுச்சென்மின் என்பதாம்"

எனப் பரிமேலழகியார் உரை கூறுகின்றார். ஆனால் மணக்குடவர்,

"நும்மோடு ஊடிக்கண்டும் இவையிற்றால் வரும் பயன் இல்லை; நும்மோடு நெருநல் ஊடிய காமக்கிழத்தியரை ஊடல் தீராது பெயர்தல், வாடிய கொடியை அடியிலே அறுத்தாற் போலும். இது 'காமக்கிழத்தியரை ஊடல் தீராமைதீது. ஆண்டுப் போம்' என்று தலைமகள் கூறியது" என உரை கூறுகிறார். இவ்விடத்தே இவை இரண்டு பாக்களுந் பரத்தையிற் பிரிவே குறிக்கின்றன என ஒருதலையாக உறுதி கூறுவதற்கில்லை. இக்குறட்பாக்களிரண்டும், 'பரத்தையாரிடத்தும் வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியன' என்கிறார் பரிமேலழகியார்.

அன்பின் கதை

'தலைவி புலந்தமை கண்டு, தலைவன் தன்னுள்ளே சொல்லிய பாக்கள் இவை' என்று கொண்டால், பரத்தையரைப் பற்றியோ, காமக்கிழத்தியரைப் பற்றியோ, எண்ண வேண்டுவதில்லை. இப் புலவி என்ற பகுதியில் தொடக்கத்தில் ''தலைவனது அல்லல் நோயினைச் சிறிது காணப் புலப்பேமாக'' என்கிருள் தோழி.

'புல்லா திராஅப் புலத்தை யவருறு
மல்லனோய் காண்கஞ் சிறிது'

[''நீ அவரை விரைந்து சென்று புல்லாதே. இத்தொழிலை மேலிட்டுக்கொண்டிருந்து புலப்பாயாக. அங்ஙனம் புலந்தாற் காதலர் எய்தும் அல்லல் நோயினை யாம் சிறிது காணக்கடவோம்''] புலந்து நின்ற தலைவியை வழிப்படுத்த வேண்டித் தோழி இது கூறுகின்ருள். அது கேட்டுச் சிறிது தணிந்த தலைவி தலைவனெதிரே, ஊடலுணர்தலின்றிப் போமோ' என எண்ணி நிற்கின்ருள்.

'உப்பமைந் தற்ருற் புலவி யதுசிறிது
மிக்கற்ரு னீள விடல்,'

[''புலவி, கலவியின்பம் செயற்கு வேண்டும் அளவிற்ருதல், உப்புத்துய்ப்பனவற்றை இன்சுவையாக்கற்கு வேண்டுமளவிற்ருதல் போலும். இனி, அவ்வளவிற்கு சிறிது மிக விடுதல் அவ்வுப்பு அளவின் மிக்காற் போலும்.'']

இவ்வாறு தலைவி மனத்தொடு கூறி நின்ருள். அன்பாயினர், உயிராலும் அறிவாலும் ஒருவராய், உடலால் இருவர் ஆதலின், ஒருவரை ஒருவர் அறியாமலே இருவரும் ஒரே எண்ணத்தை ஒரு பொழுதகத்தே எண்ணுவர். புலவி நீட்டித்தல் உப்பு மிகுதலோடு ஒக்கும் என்று எண்ணுகின்ருள் தலைவி. அக்கருத்தைத் தொடர்ந்து மேல் எண்ணுகின்ருன் தலைவன்; தலைவியின் புலவியை மாற்றல் வேண்டி நெஞ்சோடு கூறுகிருன். அக்கூற்றுத் தலைவி கூறியகருத்தின் தொடர்ச்சியேயாகும். ஈருடலும் ஒருயிரும் ஓரறிவுமாம் அன்பின் உயர் நிலையை மிக அழகாக இங்ஙனம் விளக்குகின்ருர் வள்ளுவர். ''புலவி நீட்டித்தலோடு நில்லாது, அதுநீங்காதே விடுமாறல், அலந்தாரை அல்லல் நோய்செய்தல் போலும். அம்மட்டோ! வாடிய வள்ளி முதலறிந்தற்று, ஆதலின் நாமே அவரை ஊடலுணர்த்தல் வேண்டும் என எண்ணுகின்றேன்.'' இவ்வாறு பொருள் கொள்ளுமிடத்து அக்குறள்களில் பரத்தையிற்பிரிவைப் பற்றிய குறிப்பொன்றும்இல்லை எனலாம். பின்வருங்குறளும் நாம் கூறிவரும் கதையைத் தொடர்ச்சி

யாகக் கொண்டு செல்கின்றது. ஊடலுணர்த்திப் புணர்ந்தவன் பின் புலவியைப் புகழ்கின்றான்.

'நலத்தை நல்லவர்க் கேளர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரிடத்து'

இக்குறளுக்கு மணக்குடவர்,

"நலத்தைகையினானே நல்லாரான பரத்தையர்க்கு ஒருகாம் பூவன்ன கண்ணார் பாட்டுப்புலத்தல்; நமக்கு ஆகார் மாட்டுப்புலத்தல் தீது' என்றவாறு. இப்பரத்தையரோடு புலந்து கூறிய தலைமகட்குத் தோழி கூறியது" என்று உரை காண்கின்றார்.

ஆனால் பரிமேலழகியாரோ யாம் கூறியது போல,

"தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது. 'நற்குணங்களாற் றகுதி யுடையராய தலைவர்க்கும் அழகாவது தம் பூவன்ன கண்ணார் நெஞ்சின்கண் நிகழும் புலவி மிகுதியன்றே.' சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தவறில்லார்க்கும் புலவி இனிதென்பான் நலத்தை நல்வர்க்கும் என்றான். அழகு இன்பப் பயனைத் தலைப்படுதல், தானுகர்ந்த இன்பத்திற்கேதுவாகிய புலவியை வியந்து கூறியவாறு" என்று அழகியதொரு பொருள் காண்கின்றமையால், இங்கும் பரத்தையிற் பிரிவு குறிக்கபபடவில்லை என்பதாயிற்று. இப்பாடலைப் பரிமேலழகியார்,

'நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து'

என ஓதுகின்றார்.

**இந்நாளுக்கு ஏற்ற உரை**

வடநூல் கடலையும், தமிழ் நூல் கடலையும் நிலைகண்டுணர்ந்த பரிமேலழகியார் போலத் திருவள்ளுவர் உள்ளம் துண்மைப் பொருளினை அறிந்தவர் வேறொருவரும் இல்லை எனலாம். அவரது செருப்பிற் படிந்த தூசியினைத் தட்டவுந் தகுதியற்ற அளவிலா ஏழையேம் அவருரையில் குற்றம் கூறுகின்றோம் இல்லை. திருக்குறளுக்கு ஆவர் கூறுகின்றதே மெய்யுரையாயினும், நாம் காட்டியபடி பொருள் கொள்ளவும் பெரிதும் இடமுண்டு என்பதே நாம் கூறுவது. இவ்வாறு பொருந்தும் பொருள் கொள்வதால், இந்நூல் எந்நூலினும் ஏற்றமுடையதாக இந்நாளும் திகழ்வதென இக்காலத்தவரும் ஏற்றுக் கொள்ள இடமுண்டு.

**தான்சிறக்கும் புது வழி**

பரத்தையிற் பிரிவு கூறவில்லை என்பது உண்மையானால், அப் பிரிவின் பின்னெழும் புணர்ச்சியில் மகிழ்தலைத் திருவள்ளுவர் வேறு எவ்

வழியால் பொருத்திக் காட்டுகின்றார்? நாணில்லாதவளைக் கூடுவது விலங்குகள் கூட்டத்தோடு ஒக்கும். நாணம் ஒன்று உள்ளா மையால் தான் கூடுந்தோறும் கூடுந்தோறும் இன்பம் புதிதாகத் தோன்று கின்றது.

'அறிதோ றறியாமை கண்டற்றாற் காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.'

சிறிது புலந்து நின்றவர் கூடும்போது பழையபடி நாணம் வந்து தோன்றலின் புலவிதான், காதலுக்கமைந்த உப்பாயிற்று. வேறுவகை யாகப் புலத்தலினும் பொருமைவழியாகப் புலத்தலே புலவியோடு துனியையும் விளைவித்து நிற்கும். அந்நிலையில் கூடும்பொழுது, நாணம் முன்னினும் தலைசிறந்து விளங்குகின்றது. திருவள்ளுவர் நாண் சிறந்து விளங்குதலைக் கூறுகின்றார். ஆனால், இவருடைய தலைவன் பரத்தையையும் காணவில்லை; காமக்கிழத்தியையும் கூட வில்லை; காதலியையன்றி வேறொரு மனைவியை மணக்கவும் இல்லை; காதலியையன்றி வேறொருவரைக் கனவிலும் அறியாத கற்புநிறை வாய்ந்தவள். ஆனால், அவனோ உலகினர் கண்டறியாத கட்டழகுடை யவன். கட்டழகு கண்ட காதலி, ''கண்ணில் காண்பரேல், ஆடவர் பெண்மையை அவாவுதோளினனாதலின், பெண்மை எனப்படும் இவ னடி வணங்குவதல்லால்'' எனத் தனது அன்பின் பெருக்கால் எண்ணா ததும் எண்ணுகின்றாள்; பிற பெண்கள்பால் இவன் மனம்செல்லுமோ என அஞ்சுகின்றாள்; பிறரோடு இப் பெரியோன் பேசுவதாகவும் கூடு வதாகவும் கனவும் காண்கின்றாள்; இவன் வெளியே சிறிது உலாவப் போய்வரினும் ஐயுறுகின்றாள். ஐயப்பாடு அன்பினால் வலியுறுதலும் புலந்து நிற்கின்றாள், ஊடலுணர்ந்தபோது பெருநாணினளாய் ஒசிந் தொல்கி நிற்கின்றாள்; உண்மைப் பரத்தையிற் பிரிவோ திருநீலகண்ட நாயனாரது கதைபோல ஒவ்வோரிடத்துத் துன்பத்தில் முடிகின்றது. ஆனால், திருவள்ளுவர் கூறும் கனாப் பிரிவு என்றும் இன்பமே ஆகின் றது. இவ்வாறு நாணம் சிறந்து விளங்குவதை நன்கு புனைந்துரைக் கின்றார் திருவள்ளுவர்.

புலவி நுணுக்கம்

வரவு நீட்டித்தால் மனைவி புலத்தல் உலகறிந்ததொன்று; ஆத லின் அதனை உழவில் ஒருவமையாகக் கொள்கின்றார் வள்ளுவனார்.

'செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.'

[''அந்நிலத்திற்குரியவன் அதன்கணாடோறுஞ் சென்றுபார்த்து அடுத்தன செய்யாது மடிந்திருக்குமாயின் அஃது அவனில்லாள் போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின்னவனோடு ஊடிவிடும்.'']

வரவு நீட்டித்தமை முதலானவற்றை நோக்கிப் புலத்தலைப் புலவி என்ற தலைப்பின் கீழ்க் கூறுகின்றார் வள்ளுவனார். அங்குக் கூறப்படுவன எல்லாம் ஒரு வகையாக நோக்குமிடத்துக் காதலர் பாராட்டுங் குற்றங்களேயாம். அங்கெல்லாம், பரத்தையரைப் பற்றிய குறிப்பொன்றும் இல்லை என்றோம். ஆனால், புலவி நுணுக்கம் கூறுகின்ற இந்த இடத்தில் பிற பெண்களைப்பற்றி முன்னர்ப் பேசவில்லை என்று நாம் கட்டிய முடிவு வலியுறுகின்றது. புலவி நுணுக்கத்தின் நின்றும், பரத்தையர், காமக்கிழத்தியர் என்ற இவரோடு தலைவன் கூடுவதில்லை என்பது விளங்குகின்றது. திருவள்ளுவருடைய தலைவன் இராமனைப் போல ஒருவனுக்கு ஒருத்தியே என்ற கொள்கை உடையவன். 'ஒருத்திக் கொருவன், ஒருவனுக் கொருத்தி' என்பதே திருவள்ளுவர் கண்ட முறை. திருவள்ளுவரின் தலைவி, முன் கூறியபடி அன்பின் மிகுதியால் ஐயம் எழவேண்டா இடத்தும் ஐயங் கொள்கிறாள். அன்பினாலே, அச்சம் எழவேண்டா இடத்தும் அச்சம் பிறக்கக் காண்கின்றோம். ஆண்டவனுக்கு ஊறேனும் உறுமோ? அங்ஙனம் இருந்தும் பெரியாழ்வார் ஆழியையும் வளையினையும் பிறவற்றையும் நோக்கி, ''உறகல்'' ''உறகல்'' ''பள்ளியறை குறிக்கொண்மின்'' என்று இறைவனைக் காக்க வேண்டி விழித்திருக்கத் தூண்டுகின்றார். சிவனடியாரும், திருமாலடியாரும் பல்லாண்டு பாடுகின்றனர். அஃதே போலப் பொறாமை எழவேண்டா இடத்தும் பொறாமை எழும். காதலன் தன் நேர் இல்லாத தகுதி உடையான் என அறிந்துவைத்தும், தன் அன்பின் மிகுதியாலும், அவனது அழகின் மிகுதியாலும், ஐயம் சிற்சில இடத்தே எழுகின்றதும் இயல்பேயாம். புலவி நுணுக்கத்தில் ஐய எண்ணமும் உண்டு. அங்கு வரும் தலைவி பெரும்புலவர் பெருமாட்டியாதல் வேண்டும். தலைவன் பேசிவரும் ஒவ்வொரு பேச்சிலும் குற்றம் கண்டு அவன் கூறுவனவற்றிற்கு எல்லாம் வேறொரு பொருள் கூறி அவனை அலைக்கழித்துப் புலந்து நிற்கின்றாள். நாணம் சிறத்தற்கும் இன்பஞ் சிறத்தற்கும், இப்புலவி நுணுக்கத்தில் கூறப்படுவதினும் குற்றம் அற்ற வேறு வழி உண்டோ?

**தும்மலின் கதை**

பள்ளியிடத்தே தலைவன் தும்முகிறான். உயிர் எங்கே தும்மலோடேயே போய்விடுகின்றதோ என அஞ்சி அயல் நின்றார் வாழ்த்துவது மரபு. தலைவி, தலைவன் தும்மியதைப் பொய்த்தும்மல் எனக்கொண்டு, ''புலந்த நான் ஊடலை மறந்து இவரை வாழ்த்தித் தழுவுவேன் என்று தும்மினார்'' எனக் கூறுகின்றாள்.

> 'ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
> நீடுவாழ் கென்பாக் கறிந்து.'

மற்றுமொருமுறை தும்முகின்றான் தலைவன். "நீடு வாழ்க" என்று தன்னையு மறியாது வாழ்த்துகின்றாள் தலைவி; இதற்குள் வேறொன் றுணர்ந்து அழத் தொடங்குகின்றாள்; அன்புடையார் தம்மன்பரை நினைத்த போது அவ்வாறு நினைக்கப்பட்டார்க்குத் தும்மல் தோன்றும் என்பது மகளிர் வழக்காதலின், தலைவன் தும்மியது "இவன்மேல் அன்பு கொண்ட பிறிதொரு பெண் இவனை நினைத்ததால் விளைந்த தாகும்" எனத் தலைவியும் எண்ணுகின்றாள்; நம் தலைவனுக்கும் நம் போன்று அன்பாயின பெண்கள் வேறுளர் போலும்" என்று எண்ணிப் புலந்தழுகின்றாள்; நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிர் பலருள்ளும் யாவர் நினைத்தலால் நீர் தும்மினீர்" என்று வினவுகின்றாள்.

'வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.'

தும்மல் தொடர்ந்து வருகின்றது போலும். தும்மலிலும் தலைவி குற் றங் காண்பது நோக்கி அதனை அடக்கி நிற்கின்றான் தலைவன். தலைவியோ அதனைக் கண்டுவிடுகின்றாள்; "உம்மோடு ஒன்றாகி உயிரா கிய பெண்கள் உம்மை நினைப்பதனை நும்மோடு இயைபில்லாத எமக்கு ஏன் மறைக்கின்றீர்? நன்றாகத் தும்முவது தானே!" என்று புலந்தழு கின்றாள்.

'தும்முச் செறுப்ப அழுதா ளுமர்உள்ள
லெம்மை மறைத்திரோ வென்று.'

தும்மினும் குற்றம் ஒழியினும் குற்றமானபோது என்ன செய்வது? தும் மலின் கதை ஈதோடு முடிகின்றது.

**வேற்றுப் பொருள்**

உலாப் போய் வருகின்றான் தலைவன்; தலைவியை அணைக்க அணுகுகின்றான். இவளோ பின்வாங்கி எட்டிப் போய் நிற்கின்றாள்; "நின்னைப் பெண்ணியல்பினை உடையார் யாவரும் தம் கண்ணால் பொதுவாக உண்பர், அதனால், அவர் மிச்சிலாய நின் மார்பினைப் பொருந்தேன்" எனப் புலக்கின்றாள்.

'பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு'

பிறர் தன்னைக் காண்பதைப் பெருந்தகை எவ்வாறு தடுப்பான்? தலைவிக்கு மகிழ்ச்சியூட்டி அவளை அணைய வேண்டுகின்றான்; அவள் கண்டு மகிழுமாறு பூமாலை சூடுகின்றான். "இவ்வொப்பனையை எவள் கண்டு மகிழ, இப்பூமாலை சூடினாய்" என வெகுண்டெழுகின்றாள்.

'கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று.'

''தலைவியிடம் பணிமொழியேனும் கூறியிருக்கலாம்'' என எண்ணி இவளை அணுகிக் காம நுகர்தற்குரிய இருவராயினர் யாவரினும் யாம் இருவரும் மிக்க காதலை யுடையேம்'' என்ற கருத்தோடு ''யாரினும் காதலம்'' என்று இவளையும் தன்னையும் உடன் புகழ்ந்து நிற்கின்றான். தலைமகளோ எதிர்பாராதபடி மனமெரிந்து போகின்றாள். 'யாரினும் காதலம்' என்பதற்குத் 'தலைவனுகிய என்னால் காதலிக்கப் பட்ட மகளிர் பலருள்ளும் நின்கண் காதலுடையேன்', என்று தலைமகன் கூறியதாகப் பொருள் கொள்கின்றாள். ''மகளிர் பலர் என்றீரே! அவர்களில் எந்த எந்தப் பெண்ணைக் காதலிப்பதினும் மிகுதியாக என்னைக் காதலிக்கின்றீர்'' என்று கூறிப் புலக்கின்றாள்.

'யாரினும் காதல மென்றேனா வூடினாள்
யாரினும் யாரினு மென்று.'

தலைவன் காதல்மிகுதியினால் ''இம்மையாகிய பிறப்பின் கண் இருவரும் பிரிவதில்லை'' என்று உறுதிகூறி, அணையப் புகுகின்றான். அதற்கு இவள் ''இம்மையில்தான் பிரியாதிருப்போம்; மறுமையில் பிரிவோம்'' என்று பொருள் கொண்டு, தன் கண்களில் நிறைய நீர் ததும்ப வருந்தி, அழுது நிற்கின்றாள்.

'இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.'

எனல் காண்க. பிரிந்து வந்த தலைவன், தலைவியை நோக்கி, பிரிந்த நாள் எல்லாம், இவளை இடையீடின்றி நினைந்திருந்ததாக ''உள்ளினேன்'' என்கின்றான். ''நினைப்பது ஒருகால் மறந்தாலன்றோ'' என்று உட்கொண்ட தலைவி, புல்ல வந்த கையை நெகிழ்த்துப் புலந்து நிற்கின்றாள். ''என்னை ஏன் மறந்தீர்?'' என வருந்துகின்றாள்.

'உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக்க னள்'

இப்பாடல் மணக்குடவர் உரையில்,

'உள்ளினேம் என்றீர்மற் றெம்மறந்தீர் என்றெம்மைப்
புல்லாள் புலத்தக்க னள்.'

என்று காணப்படுகிறது. பார்க்கின்றான் தலைமகன். எது சொல்லினும் குற்றமாகின்றது. ''தான் செய்தன அனைத்தும் பிழையே' என்று இவளடியில் வீழ்ந்து பணிகின்றான். தலைமகள் இதுகண்டும் வெகுளா நின்றாள். 'பிற மகளிரும் ஊடியவழியும் நீர் இவ்வாறு தானே பணிவீர்', என்று கவல்கின்றாள்.

'தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரிந்நீர ராகுதி ரென்று.'

தன் சொற்களும் செயல்களும் கண்டு தலைவி வெகுள்வது நோக்கிப் பின், செய்வதறியாது, அவளையே நோக்கி நிற்கின்றான் தலைவன். தலைவியினுடைய உறுப்பு நலத்தின் தனிப்பெருஞ்சிறப்பினை நினைந்து நினைந்து கண்ணுற் பருகுகின்றான். அஃதும் குற்றமாகவே முடிகின்றது. ''நீர் என் உறுப்பனைத்தும் நோக்கினீர். அவற்றது ஒப்புமையான் எவ்வெம் மகளிரை நினைத்தீர். யான் எல்லா உறுப்பானும் ஒருத்தியோடு ஒத்தல் கூடாமையின் ஒன்றால் ஒருவராகப் பலரையும் நீர் நினைக்கவேண்டும். அவர் எல்லோரையும் யான் அறியச்சொல்லுமின்'' என்று புலந்து நிற்கிறாள்.

'நினைந்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று'

எனவருதல் காண்க.

கனாப் பிரிவு

இப்புலவி நுணுக்கத்தில் பிறமகளிரைத் தலைவனோடு தொடர் படுத்தி வெளிப்படையாகத் தலைவி பேசுவதனைக் காண்கிறோம். இங்குத் தலைவி கண்ட குற்றமனைத்தும் பொய்க்கனா என்பதனைத் திருவள்ளுவர் உடனே தலைவி வாய்வைத்தே விளக்குகின்றார்.

'இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.'

இதற்கு, 'அவர் மாட்டுத் தவறில்லை யாயினும் நமக்கவர் தலையளி செய்கின்றவாறு அவரோடு ஊடுதலை விளைக்கவற்றாகின்றது.' எனப் பரிமேலழகியார் பொருள் கூறுகின்றார். 'தன்னையுணர்த்தினும்' என்ற குறளின் உரையில், அளவிறந்த இன்பத்தாராகலின் யானெய்தற் பாலதாய இத்தலையளி ஒழிந்தாரும் எய்துவர் எனக் கருதிப்பொருமையான் ஊடனிகழா நின்றது' என்று விரிவுரை எழுதுவது முன் நாம் கூறி வந்ததை வற்புறுத்தல் காண்க. தலைவனிடத்துத் தவறில்லை என்பதை,

'ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்'

என்ற குறளின் உரையில் அவர் எடுத்துக்காட்டுகின்றார்.

''ஊடலேதுவாக நங்கட் டோன்றுகின்ற சிறிய துனி தன்னால் காதலர் செய்யும் நல்ல தலையளி வாடுமாயினும், பெருமை எய்தும்; தவறின்றி நிகழ்கின்ற ஊடல் கடிதினீங்கலின் அத்துன்பமும் நில்லாது' என்பாள் சிறுதுனி என்றுகூறினாள். அது வருத்த மெனப்படாதாம்': என்பது அவர் உரை. புலவிநுணுக்கம் என்ற சொற்றொடரே தலைவனிடத்துக் குற்றமில்லை என்பதைக் குறிக்கின்றது.

°'புலவி நுணுக்கம்: அது புலவியது நுணுக்கமென விரியும்.

அஃதாவது தலைமகனும் தலைமகளும் ஓர் அமளிக்கண் கூடி இருந்துழி அவன் மாட்டுப்புலத்தற்கான காரணம் இல்லையாகவும் காதல் கைம்மிகுதலால் நுண்ணியதோர் காரணமுளதாக உட்கொண்டு அதனை அவன்மேலேற்றி அவள் புலத்தல்' என்பது பரிமேலழகியார் உரை.

'புலவி நுணுக்கமாவது தலைமகன்மாட்டுத் தவறிலவாயினும் தன் காதல் மிகுதியால் சொல்லெச்சத்தினாலும் குறிப்பெச்சத்தினாலும் வேறுபடப் பொருள் கொண்டு தன் மகள் புலந்து கூறுதல். இது செவ்வியிற்றேன்று மாதலின் நுணுக்கமாயிற்று' என்பது மணக்குடவர் உரை.

ஊடலுவகை

இப்புலவி நுணுக்கம் மற்றைய புலவிபோலாது எந்நாளும் நிகழ்தற்குரிய காதலின் இதன் சிறப்பினை ஊடலுவகையில் பாராட்டுகின்றார் வள்ளுவனார்.

'ஊடுதல் காமத்திற்கு கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்'
'புலத்தலிற் புத்தேண டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ன ரகத்து'

என வருதல் காண்க. ஒரொரு பொழுது நாணம் சிறத்தற்குப் பரத்தையிற் பிரிவு கூறுவதினும், எந்நாளும் இன்பம் சுரத்தற்கும், நாணம் சிறத்தற்கும் உரிய புலவி நுணுக்கம் கூறுவதே தக்கதென ஒரு புது வழியினை உலகிற்கும், அகப்பொருள் ஆராய்வார்க்கும் காட்டுகின்றார் திருவள்ளுவர். இதனால்தான், பரத்தையிற் பிரிவினைப் பற்றி ஒரு குறிப்பும், இவர் நூலின் பிற இடங்களில் இல்லை என்பது இவ்வளவும் கூறியமையால் எளிதில் புலனாகின்றது. வடநூல்களும, தமிழ் நூல்களும் விரித்துரையாத இப்புலவி நுணுக்கத்தினைத் திறம்படப் புனைந்துரைத்து அகப்பொருள் ஆராய்ச்சியைத் தூய்மைசெய்யும் இன்னோரன்ன பெருமையைக் கருதியன்றோ முன்னோர் இவரைத் திருவருட் புலவர் என வாழ்த்தி வணங்கியது.

திரட்டு

இவ்வாறு திருவள்ளுவனார் அன்பு வழியாக ஒருவரை ஒருவர் மணக்கும் உரிமையை வற்புறுத்துகிறார்; அன்பில்லாதவரது கூட்டம் பிணமுயக்கம் என்கிறார்; அன்பு வழி நிற்பதே இன்ப ஒழுக்கமென்று தாஅனுட்டித் தனது நிறுத்துகின்றார். 'ஒருவனுக்கு ஒருத்தியும், ஒருத்திக் கொருவனும், என்பதை மணமுறையின் மரபென நிலைநாட்டுகின்றார்; பரத்தையிற் பிரிவு கூறாது புலவி நுணுக்கம் கூறி அகவாராய்ச்சியைத் தூய்மை செய்கின்றார்; வரைவின் மகளிரின் இழிவினையும்

மருள் வலையினையும், அவர்களைக் கெடுப்பாரின் இழிதகையினையும் எடுத்துக்காட்டி அரசனும் அருளுடையாரும் அவர்களை நல்வழிப் படுத்தவேண்டும் என்று குறிப்பாகச் சுட்டிக் காட்டுகின்றார்; அறத்தால் வருவதே இன்பம் என்றும் வற்புறுத்துகின்றார்; அன்பினால் ஒத்த உரிமையோடு ஒருவனும் ஒருத்தியுமாய்ப் பிணைந்து அறவாழியந் தணராய் வாழ்வதே வாழ்வு என முடிவு கட்டுகின்றார்.

— ஃ ஃ —

# 5. அடிமையா? வாழ்க்கைத்துணையா?

— o —

## அறத்துப்பால்

— o —

### இல்லறம் இவள் அறமே

**தாய்**

திருவள்ளுவர் அறத்திலே பெண்பாலார்க்கு என்ன உரிமை உண்டெனப் பாடுகின்றார்? இக் கேள்வியை இவ்வடிவில் எழுப்பினால் பெண்களுக்கு அறத்தில் எல்லா உரிமையும் உண்டென்று எவரும் உடன்படுவர். திருவள்ளுவர், இல்லறம், துறவறம் என்ற இரண்டிடத்தும் பெண்களைப் பழியாது போதலை முன்னரே கண்டோம். வடநூலார் கல்விநிலை, மனைநிலை, நோன்புநிலை, துறவுநிலை என நான்காகக் கூறுவதனையே, திருவள்ளுவர் இல்லற நிலை, துறவறநிலை என இரண்டாகக் கூறுகின்றார். கல்விநிலை மக்கட் பேற்றைப்பற்றிக் கூறுகின்றதில் அடங்கும். மனைநிலையை இல்லறவியலிலே காணலாம். துறவறவியலைப் பரிமேலழகியார், விரதம், ஞானம் என இரண்டாகப் பிரித்து ஓதுகின்றார். அவற்றுள் விரதம் நோன்புநிலையைப் பற்றியது; ஞானம் துறவு நிலையைக் குறித்தது. கல்விநிலையில் பெண்ணெனும் கடவுள் தாயாகி நம்மைக் காக்கின்றது; சான்றோனாக்க முயல்கின்றது. இந்தத் தமிழ்ப் பெருந்தாயின் தனிப்பெருஞ் சிறப்பை முன்னரே கண்டோம். தன் மகன், என்ன கொடுமைசெயினும், தாய் மனம் பொறுத்திருப்பாள் என்பதனைக் குறிப்பாக உணர்த்துகின்றார் வள்ளுவனார்; ஆனால், அத்தகைய அன்புடைய தாயும் கட்குடியை வெறுப்பாள் என எடுத்துக்காட்டுகின்றார்.

'ஈன்றாள் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.'

'யாது செய்யினும் உவக்குந்தாய் முன்பாயினும் கள்ளுண்டல் இன்னா

தாம். ஆனபின் குற்றம் யாதும் போருத சான்ரேர் முன்பு களித்தல் அவர்க்கு யாதாம்? மனமொழி மெய்கள் தம்வயத்த அன்மையான் நாணழியும், அழியவே ஈன்ருட்கும் இன்ஞதாயிற்று. ஆனபின், கள் இருமையும் கெடுத்தலறிந்து, சேய்மைக்கண்ணே கடியுஞ் சான்ரேர்க்கு இன்ஞதாதல் சொல்ல வேண்டுமோ என்பதாம்.'' அத்தகைய தாய்க்கு என்ன கைம்மாறு செய்தல்கூடும்? எல்லா அறத்திலும் சிறந்தது தாய் வழிபாடேயாகும். எவ்வகையானும் ஈன்ருள்மனம் நோவாதபடி அவளைப் பேணிப் போற்றல் வேண்டும் என்பதே திருவள்ளுவர் கருத்து. பேரிடர் வரினும் சான்ரேர் பழிக்கும் வினை செய்தலாகாது என்கின்ற வள்ளுவர், பேரிடர்க்கு எடுத்துக்காட்டாகத் தாய்ப்பசி காண்டலே கூறுகின்ருர்.

'ஈன்ருள் பசிகாண்பா ஞயினுஞ் செய்யற்க
சான்ரேர் பழிக்கும் வினை.'

[தன்னைப் பயந்தாளது பசியை வறுமையாற் கண்டிரங்குந் தன்மையஞயினுன் எனினும், அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யாதொழிக.]

**வாழ்க்கைத்துணை**

மனைநிலையில் மனைவியோடு வாழ்தலே முறை. நோன்பு நிலையிலும் மனையாளோடு வாழ்தல் பழியன்று. அதுபற்றியன்ரே, திருவள்ளுவர் மனைவியோடு வாழ்தலைத் துறவறத்தில் மறுத்துரையாடாது போகின்ருர். மனையாள், தன் கணவன் எந் நிலையில் நின்ருலும், அவன் உயிரோடு வாழும் வரையில் துணையாகி நிற்பவள். இது கருதியே திருவள்ளுவஞரும் மனைவியை வாழ்க்கைத் துணை என்று பொதுப்படக் கூறுகின்ருர். இல்லறவியலில் கூறப்படுவதால் இல்வாழ்க்கைத்துணை எனப் பொருள் கூற இடமுண்டேனும், இல்வாழ்க்கைத்துணை என்ஞது, 'வாழ்நாள் எல்லாம் துணையாவாள்' என்ற பொருள்பட 'வாழ்க்கைத்துணை' என்றே வள்ளுவர் பேசுகின்றமை குறித்துவைத்துக் கொள்ளத் தக்கதாம். வீட்டு நெறியினும், இல்லாள் உடன் நோற்றலைத் தொல்காப்பியஞர்,

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே,'

எனக் கூறுகின்றமைக்குப் பொருள் காணும் நச்சிஞர்க்கினியர்,

''ஏமஞ்சான்ற ஆவன வானப்பிரத்தமும் சன்னியாசமும்; னவே, இல்லறத்தின் பின்னர் இவற்றின் கண்ணே நின்று பின்னர்

மெய்யுணர்ந்து வீடுபெறுப என்ருர். இவ்வீடு பேற்றினை இன்றி யமையாது இவ் இல்லறமென்பது இதன் பயன்'' என்றுரை கூறுகின்ருர். ஆதலின், வள்ளுவனுரும் வாழ்க்கைத் துணை எனப் பொதுவாகக் கூறுகின்ருர். எல்லாம் துறந்தார்க்கும், இல்லாள் துணையாதலை இராமகிருஷ்ணரின் வரலாற்றில் காண்கின்ரேம். மணாளன் துறந்து சென்ருலும், மனையாட்டி தன் மனத்தால் தொண்டாற்றலாம் என்ற உண்மை, மனநிலையை அறிந்தவர்க்கு நன்கு புலனுகும். வாழ்க்கைத்துணை என்ருதனுல், மனைவி மணாளனது வாழ்க்கையில் அறத்திற்கும் துணையாகின்ருள்; பொருளுக்கும் துணையாகின்ருள்; இன்பத்திற்கும் துணையாகின்ருள் என்பது தானே போதருகின்றது. இதற்கு மேலும் பெண்களுக்கு உரிமை கொடுத்தார் யாரே என அறிய விரும்புகின்ரேம்.

## மனை மாட்சி

வாழ்க்கைத்துணை என்று திருவள்ளுவர் தொடங்கினுலும், பெண்ணை வாழ்க்கைக்கு முதலாகவே வைத்து முடிக்கின்ருர்.

> 'மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை,'

மனைத்தக்க மாண்பாவது யாது? இல்லறவியலில் கூறுகின்ற அறமே மனைத்தக்க மாண்பாகும். இல்லற இயலில், அன்புடைமை முதலாகிய பல தலைப்பின் கீழும் அறத்தினை ஆண்மேல் வைத்துக் கூறுகின்ருர் வள்ளுவர். அவையனைத்தும் பெண்ணுக்கும் உரியனவே என்பதனை இங்குக்குறிக்கின்ருர். இயல்பிலேயே இப் பண்பு பெண்களுக்கு அமைந்து கிடத்தலின், இதனைப் பலபடப் புனைந்துரைக்கின்ருர் இல்லை. மணக்குடவர் ''மனைத்தக்க மாண்பு'' என்பதற்குத் ''தான் பிறந்த குடிக்குத் தக்க ஒழுக்கம்'' எனக் குறுகிய பொருள் கொள்கின்ருர். பரிமேலழகியாரோ ''மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடையாள்'' எனப் பொருள் கொண்டு, ''நற்குணங்களாவன, துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட் டருளுடைமையும் முதலாயின; நற்செய்கைகளாவன, வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைபிடித்தலும், அட்டிற்ருெழில் வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலாயின'' என விரிவுரை எழுதுகின்ருர். ''முதலாயின'' என்பதால் இல்லற வியலில் சொல்லிய யாவும் கொள்ளப்படும் அன்ரே? அன்பு. இன்சொல், விருந்தயர்தல், செய்ந்நன்றி மறவாமை, நடுவுநிலை, அடக்கம், பொறை, பிறர்க்குரியாரை நயவாமை, ஒழுக்கம், வெஃகாமை, அழுக்காருமை, ஒப்புரவு, ஈகை, புகழ் முதலாயினவற்றில் பெண்களுக்கு எதனை வேண்டா எனல் கூடும்?

எனவே, இல்லற ஒழுக்கத்திற்கு இயல்பாய உரிமை பூண்டவள் பெண்ணே என்பது பெற்றும்.

வளத்தக்காள்

மேலே, ''தற்கொண்டான் வளத்தக்காள்'' எனக் கூறுகின்றார் திருவள்ளுவர். ''வளத்தக்காள்'' என்பதற்குப் பரிமேலழகியார் ''வருவாய்க்குத் தக்க வாழ்க்கையுடையாள்'' எனப்பொருள் கொண்டு ''வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது முதலையறிந்து அதற்கியைய அழித்தல்'' என விரிவுரையில் எழுதி விளக்கிவைக்கின்றார். மணக்குடவரும் ''வருவாய்க்குத்தக்க செலவினை யுடையவள்'' என்றே உரை எழுதுகின்றார். ''மனைத்தக்க மாண்பினை வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளுவது?'' என்பதை, ''வளத்தக்காள்'' என்பதாய் வள்ளுவர் கூறுகின்றார். 'மனைத்தக்க மாண்புடையாள்' என்பது பெண்ணின் நின்ற நிலை. வளத்தக்காள் என்பது பெண்ணின் இயங்கு நிலை. விருந்து, ஒப்புரவு, ஈகை, புகழ் முதலிய தலைப்பின் கீழ்க் கூறிய அறத்தை, வருவாய்க்குத்தக்கபடி ஆற்றுதல் வேண்டும். ''தற்கொண்டான் வளத்தக்காள்'' என்பதினின்றும் இல்லறத்திலே, தற்கொண்டானது பொருளுக்கெல்லாம் மனைவியே உரியவள் என்பதும், அப்பொருளை அறத்தாற்றில் பயன்படுத்துவதும் அவளே என்பதும் புலனாகின்றன. 'செலவனைத்தும் அவள் கையில்' என்றதால் ஆண்மகனுக்கு அந்த வேலை இல்லை. அங்கு, அவன் துணையாகி நிற்க, அவளே அறத்திற்கு முதலாகின்றாள். பொருட் செலவெல்லாம் பெண் எண்ணியபடியே என்றால் விருந்து, ஒப்பரவு முதலிய எல்லாம் அவள் எண்ணிய அளவே அமையும். இல்லறமானது வேளாண்மை மேல் நிற்கின்றது. பொருளில்லாதாருக்கு இவ்வுலகம் இல்லையாதலின், பொருள் இன்றி வேளாண்மை யில்லை. இல்லறமும் இல்லை. அப்பொருளைச் செலவிடும் உரிமை பெண்ணுக்கே உண்டு. பேழையின் திறவுகோல் பெண்ணதேயாயின், இல்லறமனைத்தும் அவளறமே யாகும். இதுபற்றியன்றோ தமிழர், வாழ்க்கைத்துணையை ''மனைவி'' என்றும் 'இல்லாள்' என்றும் சிறப்பித்து இன்றளவும் உலக வழக்கினும் புகல்கின்றனர்.

தாஅனுட்டித் தனது நிறுத்தல்

இல்லற ஒழுக்கமே இல்லாளின் ஒழுக்கமாதலின் அவ்விடம் அவ்வொழுக்கமில்லாத போது இல்லறமே இல்லையாம். தாஅனுட்டித் தனது நிறுப்பாக இதனைப் பன்முறையும் உடன்பாட்டானும் எதிர்மறையானும் கூறி வற்புறுத்துகின்றார் வள்ளுவனார்.

'மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்.'
'இல்லதே னில்லவள் மாண்பானு லுள்ளதே
னில்லவள் மாணுக் கடை.'

பொருள் நாடி, இவன் உலகில் உழைக்கச் சென்றபோது இல்லிருந்து இல்லறம் நடத்துவாள் இவள் பெண்ணுதலின், அவளிடத்தே, 'மனைத்தக்க, மணைமாண்பு' எனும் மனைமாட்சி இல்லாமற் போனுல், இல்லறமே இல்லையாம். இவனிடத்தே மனை மா ட் சி யில்லாது போயினும், அவளிடத்தே அஃது உண்டாயின் அஃது போதும் அவ்விடத்தில் இல்லறம் சிறந்து விளங்கும், அவளிடத்தே இல்லற ஒழுக்கம் இல்லையானுல் இவனை இகழ்வார் பலர் ஆவர். இவனது மனையாட்டி, இருவர்மாட்டும் நன்மை யமைந்த புகழ் வளருமாறு விரும்பி, இல்லறத்தை நன்கு நடத்தி வருவாளாயின். இல்லறம் தலை சிறந்து விளங்கும்; அப்போது மனைமாட்சி இல்லாத மணுளனும், தன்னை இகழ்பவர் முன்னே, ஏறுபோலப் பெருமித நடை நடந்து செல்லலாம். இல்லாளிடத்தே மனைமாட்சி உள்ளதால், இகழ்வார் வாயெல்லாம் அடங்கும். அத்தகைய இல்லாளை இல்லாதவன் தன்னளவில் மனைத்தக்க மாண்புடையவனுய் உலகில் சிறந்தவனுய் விளங்கினுலும், இகழ்வார் முன் தலையிறங்கி மறைந்துதான் போய் வாழ்தல் வேண்டும்.

'புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை.'

[புகழை விரும்பிய இல்லாளை இல்லாதார்க்கில்லை தம்மை இகழ்ந்துரைக்கும் பகைவர் முன் சிங்க ஏறுபோல நடக்கும் பெருமிதநடை.]

### பெண்வழிச் சேறல்

அறமுழுதும் ஒருவகையால் நோக்குமிடத்து, இல்லாளே செய்கின்ருள் என்ருல் அவள் வழியே அகமுடையான் செல்கின்ருன் என்பதாயிற்று. ஆனுல், பெண் வழிச் செல்லுதலைத் திருவள்ளுவர் இழித்துரைக்கின்ருர் அன்ருே! ''இங்குக்கூறி வ ரு வ து மெய்யுரை யாதல் எங்ஙனம்?'' என்ற ஐயம் இங்கே எழுகின்றது. பரிமேலழகி யாரும், ''பெண் வழிச்சேறல்'' என்பதற்கு ''அஃதாவது தன்வழி ஒழுகற் பாலளாய இல்லாள் வழியே தாளுெழுகுதல்'' என உரை கூறுகின்ருர். இதனைப் பின்பற்றி விநாயக புராணம் பாடிய கச்சியப்பர்,

'தன்னு ளாளப் படுமனைவி தன்னு லாளப் படுவானேன்
அன்னுற் கற்றும் பொருளுமுள வாகா தொல்லைப்
பொருளானும்

மன்ற பயன்கள்; வினைமுடியா; மறுமை யணுகாதெப்பிழையு
முன்னும்; பின்னும் பெருநாணு மூவாப்பழியு மறிமைந்தா!''

என்று பாடுகின்றார். ஆனால் திருவள்ளுவர் கூறும் அன்பொழுக்கத்தில், அடிமையும் இல்லை; ஆண்டானும் இல்லை. பெண் என்பதற்கு இல்லாள் எனப்பொருள் கொண்டு, ''அவள் கூறியபடி ஒழுகுதல் ஆகாது' என்போமானால் அவள் நல்வழி கூறினாலும், அதனையும்கைப் பிடித்தலாகாது என்றுமுடியும். இல்லாளை இல்லறத்தானுக்கு அமைச்சு என்று பெரியோர் கூறுதலின், இவ்வாறுகூற இயலாது. பெண் அறமும் பொருளும் கூறினால், ஆண் அதைக் கைப்பிடித்தல் தகும்; அங்ஙனமே, ஆண், அறம் பொருள் ஓதினால் பெண் அவ்வுரையைக் கைப்பிடித் தொழுகலும் தகுதியே யாகும். இவை எல்லாம் 'பெண்வழிச்சேறல்' 'ஆண்வழிச்சேறல்' எனப்பெறுது, அறம்வழிச்சேறல், அறிவுவழிச் சேறல் எனப்பெயர் பெறுதல் வேண்டும். அவ்வாறின்றி, அறமும் பொருளும் பேணாது, காதலால் கண் மூடிப் பெண்ணை விழைவானாயின், அவன் அறவழியும் போவதில்லை; பொருள் வழியும் காண்பதில்லை. காதலால் கண்மூடியவன், மனைவி தனக்கு இன்பந்தர மறுப்பாளோ என அஞ்சி அவள் சொல்லியபடி எல்லாம் ஆடுகின்றான். ''விழைதல்'' என்று திருவள்ளுவர் கூறுவது காதற் கூட்டத்தைக் குறியாது, அன்போடு சேராத இணை விழைச்சினையே குறிக்கின்றது. இணை விழைச்சு என்ற தொடரில் உள்ள விழைவு என்பது விலங்கின்கூட்டம் என்ற இழி பொருளையே குறிக்கின்றது. இன்பத்துப்பாலில் கூறுகின்ற காதற் புணர்ச்சி, அன்பு வடிவாகிய வேள்வியும் நோன்பும் ஆகும். எனவே, அன்பு வாழ்க்கையை விரும்பாது இணைவிழைச்சை நச்சித் திரிவாரையே திருவள்ளுவர் இகழ்ந்துரைக்கின்றார்.

விழைதல்

'மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.'

''இன்பங் காரணமாகத் தம் மனையாளை விழைந்து, அவள் தன்மையராய் ஒழுகுவார் தமக்கு இன்துணையாகிய அறத்தினை எய்தார்; இனிப் பொருளைச் செய்தலை முயல்வார் அதற்கு இடையீடு என்று இகழும் பொருளும் அவ்வின்பம்,'' என்பது பரிமேலழகியார் உரை.

'பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.'

''தன் ஆண்மையை விட்டு மனையாளது பெண்மையை விழைவான் எய்தி நின்ற செல்வம் இவ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம் பெரியதோர் நாணுண்டாகத் தனக்கும் நாணுதலைக் கொடுக்கும்,'' என்பது

பரிமேலழகியார் உரை. மணக்குடவரோ, ஆண்மையைப் பற்றிப் பேசாது, ''அறத்தினையும் பொருளினையும் பேணாது மனையாளைக் காதலிப்பானது செல்வம் பெரியதோர் நாணம் உலகத்தே நிற்கும் படியாத் தனக்கும் நாணினைத் தரும்,'' என்று நாம் கூறிவரும் கொள்கைக்கு எடுத்துக்காட்டாகும் ஒருரை எழுதுகின்றார். இவ்வாறு இரண்டு குறள்களிலும் விழைதல் கூறப்படுகின்றது.

**அச்சம்**

இனை விழைச்சை நச்சி நிற்பவன், அவள் அதனை மறுப்பாளோ என்று எண்ணி அவளைக்கண்டு அஞ்சி ஒழுகுகின்றான்.

'இல்லாள் கட்டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்றும்
நல்லாரு ணாணுத் தரும்.'

'ஒருவன் இல்லாள் மாட்டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம், அஃதிலாராய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்தும் கொடுக்கும்.' என்பது பரிமேலழகியாரது உரை.

''இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை'' என்பதற்கு ''மனையாள் மாட்டுத் தாழ்ந்தொழுகும் இயல்பாகிய கேடு'' என்று மணக்குடவர் கூறுகின்றார். மணக்குடவர் உரையினும் பரிமேலழகியாருரை விளக்கமாய் இருத்தல் காண்க. இயல்பு இன்மை, என்பதற்கு, இயல்பாகிய இன்மை' எனக் கொள்வதினும் 'இயல் பின்மை' என வழக்கிற்போலப் பொருள் கொள்ளுதலினால் எளிதில் பொருள் விளங்க நிற்றலும் காண்க. பரிமேலழகியார், மேல் சென்று ''அவள்தான், அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின் அவளை அஞ்சுதல் இயல்பின்மையாயிற்று'' எனக் குறிப்புரை கூறுகின்றார் எனின், அவள் ஒழுக்கத்திற்கும், இவன் ஒழுக்கத்திற்கும் அன்பு அடிப்படையாகுமே யன்றி அச்சம் அடிப்படையாயின், அது கயவர்ஒழுக்கமென்கின்றார் திருவள்ளுவர் என்க. அன்பு வடிவமான மணாளன் அறக்கொடியோனல்லனாதலின், அஞ்சுவது எது பற்றி? பின்னே இயல்பாவது அன்பு வழியாகக் கூடும் இயல்பேயாகும். அஃதின்மை யாவது அன்பின்றி அச்சத்தாலும் இணைவிழைச்சாலும் கூடுவதாகும். பரிமேலழகியார் கூறுகின்றது இடைக்காலத்து எழுந்த வடநூல்களைப் பின்பற்றியோர் பொருத்தமெனக் கொள்ளும் கொள்கையேயன்றி அந் நூல்களை யுடன்படாதவர் ஒப்புக் கொள்வதொன்றன்று.

'மனையாளை யஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.'

''தன் மனையாளை அஞ்சி ஒழுகுகின்ற மறுமைப்பயன் இல்லாதானுக்கு, வினையை ஆளுந்தன்மை உண்டாய வழியும் நல்லோரால் கொண்டாடப்படாது.'' என்று உரை கூறி,

'இல்லறஞ் செய்தற்குரிய நன்மையின்மையின் மறுமையி லாளன் என்றும், வினையை யாளுந் தன் தன்மையில்லாத அவனுன் முடிவு போகாமையின் வீறெய்தலின்று என்றும் கூறினர்,'' என்ற அழகிய குறிப்புக்களை எடுத்துக் காட்டுகின்றார் பரிமேலழகியார். இந்தப் பெண்வழிச்சேறல், வாழ்க்கைத்துணை நலத்தில் கூறிய அறம் வழிச் சேறலினும் வேறென்பதை ''இல்லறம் செய்தற்குரிய நன்மை யின்மையின்'' என்று பரிமேலழகியார் எடுத்துக்காட்டுகின்றார். இக் குறளின் கருத்தை மணக்குடவர் ''இது பொருள் செய்யமாட்டார் என்றது'' என்று எடுத்துக் காட்டுகின்றார்.

'இல்லாளை அஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்'

'தன் மனையாளை அஞ்சுவான் தான் தேடிய பொருளே ஆயினும் அதனால் நல்லார்க்கு நல்லன செய்தலை எஞ்ஞான்றும் அஞ்சா நிற்கும்,'' என்பது பரிமேலழகியார் உரை. இக் குறளின் கருத்தை ''இஃது அறஞ்செய்ய மாட்டா னென்றது'' என்பதாக எடுத்துக்காட்டுகின்றார் மணக்குடவர்!

'இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்'

ஆண்களது ஆண்மையும், பெண்களது அச்ச நிலையையும், வடநூல் மரபுபற்றி வற்புறுத்துகின்ற பரிமேலழகியார்,

''தம் மில்லாளுடைய வேய்போலுந் தோளினை அஞ்சுவார். வீரத்தால் துறக்க மெய்திய அமரர்போல, இவ்வுலகத்து வாழ்ந்தாரா யினும் ஆண்மையிலர்'' என்று பொருள் காண்கின்றார். ஆனல், திருவள்ளுவர் காட்டும் முரண்பாடு அச்சத்திற்கும் அன்பிற்குமே அன்றி ஆண்மைக்கும் அச்சத்திற்கும் அன்றெனல் இன்பத்துப்பாலி லும், அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் நன்கு புலனாகின்ற தன்றோ? இதற்கேற்ப மணக்குடவரும் ஆண்மையை வற்புறுத்தாது, இக்குறள் செல்வத்தைக் குறிப்பதாகவே பொருள் கொண்டு, ''தேவரைப்போல் இன்புற்று வாழினும் பெருமையில் லாதவராவார்? மனையாளது வேய்போலும் தோளை அஞ்சுபவர். இது செல்வமுடை யாராயினும் பிறரால் மதிக்கப்படார் என்றது'' என்று உரை எழுது கின்றார். அன்றியும், ''வேய்போலும் தோள் அன்போடு அணைதற் குரியதாக, அதனை அஞ்சுதல் என்னே' என்பதன்றோ அக்குறளில் குறிக்கப்படுகின்றது! ''அமையார் தோள்'' என்னும் குறிப்பு அஞ் சும் நிலைக்கு மறுதலையான நிலை அன்புநிலையேயாம் என்பதை வற்

புறுத்துகின்றதன்றே? இவ்வாறு இந்த நான்கு குறட்பாக்களாலும் அஞ்சுதலைக் கூறுகின்றார் வள்ளுவர்.

**ஏவலாளன்**

அவ்வச்சத்தால் அவள் சொல்லியபடி எல்லாம் அறம் இல்லா வழியினும் அவன் ஆடி நிற்கின்றான், பெட்டாங்கொழுகி ஏவல் செய்கின்றான்.

'பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை தரும்.'

''நாணின்றி தன்னில்லாளது ஏவற்றொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண்டன்மையின் நாணினை யுடைய அவள் பெண்டன்மையே மேம்பாடுடைத்து,'' என்பது பரிமேலழகியாருரை. இங்கு, ஆண்மை என்பது மறத்தினைக் குறியாது ஆண்டன்மையைக் குறிக்கின்றது.

'நாட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.'

இதற்குப் பொருள் காண்கையிலும், பரிமேலழகியார், தமது கொள்கையை வற்புறுத்தித் ''தாம் வேண்டியவாறன்றித் தம் மனையாள் வேண்டியவாறு ஒழுகுவார் தம்மோடு நட்புச்செய்தார் உற்ற குறை முடிக்க மாட்டார், அதுவேயன்றி மறுமைக்குத் துணையாய அறஞ் செய்யவு மாட்டார்'' என்று உரை எழுதி, ''அவள் தானே அறிந்து ஏவலுர், பொருள் கொடுத்தலும் கூடாமையின் இருமைக்கும் வேண்டுவன செய்யமாட்டார் என்பதாம்,'' என்று எடுத்துக் காட்டுகின்றார். எனினும், மனம் போனபடி ஒழுகுதல் ஆணுக்கும் அழகன்று; பெண்ணுக்கும் அழகன்று; அறத்தினையும் பொருளினையும் இன்பத்தினையும் வீட்டினையும் அறிந்த அறிவு வழியே ஒழுகுதல் வேண்டும். ஆதலின், தாம் வேண்டியவாறு ஒழுகாமை பற்றிப் பரிமேலழகியாரைப்போல வள்ளுவர் குறை கூறுகின்றார் இல்லை. அவளது மெய்யுணர்வுக்கு ஏற்றபடி ஒழுகினாலும் ஒரு குறையும் இல்லை. ''நன்னுதலாள்'' என்பதற்கு ''அஞ்சுதற் காரணத்து எண்மை கூறியது'' எனப்பொருள் கொள்வதினும், அதனை அடிமை கொள்ளும் அழகினைக் குறிப்பதாகக் கொண்டு, ''அதுகண்டு அன்புருவாக வேண்டுமேயன்றி அஞ்சி அடிமையாய் ஏவல் செய்தொழுகல் இறைவன் வடிவமாகிய அழகினையே பழித்தலாகும்'' என்ற கருத்துரை உரைக்கவே இடமுண்டு. அவ்வழகுக்கு அழகாகிய அவளது அறிவின் வழியே செல்லாது அவளது விருப்பின்படி சென்று ஒழுகுதலே இங்குப் பழிக்கப்படுகின்றது. சூடாலையின் அறிவு வழியே சென்றொழுகிய சிகித்துவசன் பழிக்கப்படுவதென்றும் இல்லையாம்

இதனைக் குறிக்கவே ''பெட்டாங்கொழுகுபவர்'' என வேறு பிரித்து அவர் நிலையில் நின்றாரைப் பழிக்கின்றார் வள்ளுவனார். பரிமேலழகியார் இரண்டாமடிக்குக் கூறுகிற உரை எவ்வாறாயினும், முதலடிக்குக் கூறுகிற உரை போற்றத்தக்கதாம். ''நன்றாற்றார்'' என்பதற்கு மணக்குடவர் '' அவர்க்கு (நட்டார்க்கு) நல்லது செய்யவுமாட்டார்'' என்று கூறுகிற பொருளினும் '' அறம் செய்யவுமாட்டார்'' என்று பரிமேலழகியார் காண்கின்ற பொருளே சிறப்புடைய தாகும்.

' அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்''

''அறச்செயலும், அது முடித்தற்கு ஏதுவாம்பொருட்செயலும், அவ்விரண்டின் வேறாய இன்பச் செயல்களும் தம் மனையாள் ஏவல் செய்வார் மாட்டு உளவாக,'' என்பது பரிமேலழகியார் உரை. இங்கும் ஆண்மைக் கொள்கையை நிலைநாட்டி, ''புலன்கள் ஐந்தாகலின் பிறவினை எனப் பன்மையாயிற்று. அவை (இன்பச்செயல்) நோக்கி அறச் செயல் பொருட் செயல்கள் முன்னே ஒழிந்தார்க்கு தலைமை அவள் கண்ணதாகலின், பின் அவை தாமும் இலவாயின என்பது தோன்ற அவற்றைப் பிரித்துக் கூறினார்,'' என்று எடுத்துக் காட்டுகின்றார். பிரித்துக் கூறியமையை எடுத்துக் காட்டும் நயம் பாராட்டற்பாலதாம். ஆனால், இவன் இன்பம்இழத்தல் இவள் தலைமை பூணலால் அன்று. அன்பு நிலையில் அன்றி இன்பம் இல்லை என்பது திருவள்ளுவர் கொள்கையாதலின், அவா நிலையிலும் அச்ச நிலையிலும உண்மையின்பம் இல்லை என்கிறார். அவள் தலைமை எய்தலால் இன்பம் இல்லை என்று கூறுதற்கில்லை. ஏன்? இன்பத்துப்பாலில்,

'பயங்கெழு துணையணை புல்லிய புல்லா
துயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப்
புல்கென முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய விரவு'

என்று தொல்காப்பியர் கூறுகின்றபடி, ஆடவன் அடி பணிந்து நிற்பத் தலைமை எய்துவாள் பெண்ணே ஆகும். அங்கு, இன்பம் இல்லையோ? ஆனால், பரிமேலழகியார் உரைக்கு, வேறொரு வகையால் அமைதி கூறிக் கொள்ளுதல் கூடும். அரசனும் அடிமைப்பெண்ணும் கூடினாலும், அவர்கள் இன்பந்துய்ப்பது, இருவரும் உயர்வு தாழ்வு என்ற எண்ணமகன்று, ஒத்தநிலையை, அப்பள்ளியறை யளவிலேனும் அடைந்தாலன்றோ? அதுபற்றியே போலும் அகப்பொருள் ஆராய்வார் 'ஒத்த தலைவனும் ஒத்த தலைவியும்' என்று வற் த்துவது? ஆடவன்

அஞ்சி நின்று ஏவல் செய்தொழுகினால், அவளோடு ஒத்த நிலை அடைவது எங்ஙனம்? அங்கு நிகழும் கூட்டம் இருவர் கூட்டமாகாது; அவளது கூட்டமேயாக முடியும். இவ்வாறு, அவளது தலைமை இன்பத்திற்கு மறுதலையாதல் ஒருதலை. இங்ஙனம், இந்த மூன்று குறட்பாக்களாலும் பெட்டாங்கொழுகி ஏவல் செய்தலைக் கூறுகின்றார் வள்ளுவனார். விழைந்து நிற்கும் அவாநிலையிலும், அஞ்சி நிற்கும் அச்சநிலையிலும் நிற்பார். அன்பு நிலையில் இன்பந் துய்யாது, அடிமை வாழ்வில் துன்பமுறுவர் என்கிறார்.

**அன்பின்மை**

ஆண்மகனோ பெண்மகளோ அன்பால் பிணிக்கப்பட்டு ஒழுகுதல் வேண்டுமே அன்றி, அச்சத்தாலும் அவாவினாலும் ஒற்றித்து வாழ்தல் அடிமை வாழ்வாம் என்பதே திருவள்ளுவர் துணிபு. அன்பாலும் அறிவாலும் ஒன்றாகாது, அச்சத்தாலும் அவாவினாலும் ஒன்றுபடுவார் கயவரே ஆவர்.

'அச்சமே கீழ்கள தாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது'

''கயவர் ஆசாரம் உடையராதற்குக் காரணம் அச்சமே. அஃதொழிய, ஒரு பொருள் மேல் ஆசையுடையராயின், அதுகாரணமாகவும் சிறிது ஒழுக்கம் உண்டாம்'' என்பது மணக்குடவர் உரை. அச்சம் என்பதற்குப் பரிமேலழகியார் கூறுகின்றபடி, ''அரசர்க்கஞ்சுதல்'' என்று பொருள் கொள்வதிலும், பொதுவாக அச்சம் எனப் பொருள் கொள்ளுதல் உலகவழக்கிற்கும் இவ்விடத்திற்கும் பொருத்தமாகும். பரிமேலழகியார் சிறப்புப்பற்றி அரசர்க்கஞ்சுதலையே எடுத்து ஓதுகின்றார் எனலாம். இது நிற்க தலைசிறந்த தலைவனும் தலைவியும் இணைவிழைச்சு விரும்பியும், அஞ்சிநின்றும் ஒன்றாய் வாழ்தல் என்றும் இல்லையாம்; எங்கும் இல்லையாம். அறத்தினையும் பொருளையும் கருதாது இணைவிழைச்சு ஒன்றே கருதிப் பெண்களோடு வாழ்தலையே திருவள்ளுவர் பழிக்கின்றார். அறவழியில் நின்று பொருள் வரும்வழி அறிந்த அறிவுடைய இல்லாளின் அறிவுரைகளைக் கேட்டலாகாது எனத்திருவள்ளுவர் கூறுகின்றார் இல்லை. அறம்பொருள் வேண்டாது, இணைவிழைச்சு ஒன்றே வேண்டி விழைதலையும், ஏவல்செய்தலையும், அஞ்சுதலையுமே பழிக்கின்றார். ''பேணாது பெண் விழைவான்'' என்பதற்கு, ''அறத்தினையும் பொருளினையும் பேணாது மனையாளைக் காதலிப்பான்'' என மணக்குடவர் கூறுகின்ற உரையினைக் கண்டோம். ''மனைவிழைவார்'' என்ற குறளின் கருத்தினைக் கூறுகின்ற அப்பெரியார் ''இஃதுஅறத்தினும் பொருளினும் காதலின்றி அவர் தன்மையே

காதலிப்பார்க்கு அறனும் பொருளும் இல்லையாம் என்று கூறுகின்றமையும் காண்க. ''அறவினையும் ஆன்ற பொருளும்'' என்ற குறளில் திருவள்ளுவர் அன்னோர் அறத்தையும் பொருளையும் மறந்து இன்பம் வேண்டிநின்று இன்பத்தையும் இழப்பவர் எனக் கூறுகின்றமைகாண்க. விழைதலும், அச்சமும், ஏவலும் பழிக்கப்படுகின்றன என்பதைப் பரிமேலழகியாரும் வற்புறுத்துகின்றார்.

'எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதமை யில்'

என்பதற்குக் 'கருமச் சூழ்ச்சிக்கட் சென்ற நெஞ்சத்தினையும் அதனானாய செல்வத்தினையும் உடையராய வேந்தர்க்கு மனையாளைச் சேர்தலான் வினையும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது' என்று பொருள் எழுதி, 'அப் பேதைமையாவது மேற்சொல்லிய விழைதல். அஞ்சல், ஏவல் செய்தல் என்ற மூன்றற்கும் காரணமாவது' என எடுத்துக் காட்டுகின்றார் பரிமேலழகியார். இக்குறளில், திருவள்ளுவர், அன்பு நிலையில் அறிவு விளங்குதலையும், அவா நிலையிலும் அச்ச நிலையிலும் பேதமை, நம் கண்ணை மூடுவதனையும் குறிக்கின்றமை ஆராயத்தக்கனவாம். எனவே விழைதலும் அஞ்சுதலும் ஏவல் செய்தலுமே பழிக்கப்படுகின்றன. இவ்வாறொழுகுதல், மனைத்தக்க மாண்புடையாள் தற்கொண்டான் வளத்தக்காளாய், இல்லறத்தை நடத்துவது அன்று என்பதனைப் பரிமேலழகியாரே, 'மனையாளை யஞ்சும் மறுமையிலாளன்' என்ற இடத்தில் எடுத்துக்காட்டுகின்றார். ஆதலின் 'இல்லறத்திற்கு மனைவி வாழ்க்கைத்துணையும் முதலுமாகின்றாள்' என்று அங்குக் கூறுகின்றமைக்கும், இல்லறம் என்ற எண்ணமே இன்றிப் பெண்வழிச் சேறலை இங்குப் பழிக்கின்றமைக்கும் ஒரு முரண்பாடும் இல்லை.

### பெண்மை

அன்றியும், பெண்வழிச்சேறல் என்ற தொடரில் பெண் என்ற சொல்லினை எடுத்து ஆண்டமையும் குறிக்கற்பாலதாம். பெண் என்னும் சொல்லுக்குச் சிறந்ததொரு பொருளைத் திருவள்ளுவர் பிறிதோரிடத்தில், ''தற்காத்து'' என்ற குறளில் கூறுகின்றார்; அவர் காலத்தில், அச் சொல்லிற்கு இருந்த பொருளில்தான், அவ் வோரிடம் தவிர்த்த மற்றைய இடங்களில், திருவள்ளுவர். அச்சொல்லைப்பயன்படுத்திக்கொள்கின்றார். ஆணொடு பெண்ணும் 'மக்கள்' என்ற வகையில் வேற்றுமையிலர், ஆனால், உடல் உறுப்புவகையாலேயே வேற்றுமையுடையார் இவ்வேற்றுமையால், வழக்க ஒழுக்க வேற்றுமைகள் உண்டாயின. உடலுறுப்பின் அமைப்பினையே பெண் என்

பது. ''பெண்மையாவது கட்புலனாயதோர் அமைதித்தன்மை'' என்பர் பெரியோர்.

''கற்பு நாண் முதலிய குணங்கள் இன்மையிற் பரத்தையர்க்கு உள்ளது பெண்ணியற்கை மாத்திரமே,'' என்று பிறிதோரிடத்துப் பரிமேலழகியார் உரை எழுதுகின்றமையும் காண்க. அதற்கேற்ப இங்குப் பெண் என்பதற்குப் பொருள் கூறப் புகுவோமானால், திருவள்ளுவரின் உயர்ந்த கொள்கை நன்கு புலனாகும். உடலுறுப்பின் அமைதி ஒன்றனையே விரும்பி, அவர்களுக்கு அஞ்சி ஏவல் செய்தலே பழிக்கப்படுகின்றது எனலாம். மணக்குடவரும் இதுபற்றியே, ''பெண்வழிச்சேறல்'' என்பதற்கு ''இன்பங் காரணமாக மனையாள் வழியொழுகுதல்'' என்று பொருள் கொண்டு, அஃதொன்றனையே பழித்தல் வேண்டுமென வற்புறுத்துகின்றார். பெண்வழிச் சேறலே பழியுடையது; இல்லாள் வழிச் சேறலோ, மனைவிவழிச் சேறலோ பழியுடையதன்று; ஆனால் இல்லாளை விழைதலோ, மனைவிழைதலோ பழித்தற்குரியது. இல்லாளைக் காதலித்தலோ, மனையாளைக் காதலித்தலோ போற்றற்கு உரியதாம். எனவே, பெண்மைக்கு அடிமையாதலும் விழைதலுமே பழிக்கப்படுகின்றன எனலாம். அறம் கருதியும், பொருள்வழி நாடியும் அறிவுடைய இல்லாள் வழிச்சேறல் போற்றற்கு உரியதாகும்; அவ்வளவும் அறிவிலாதாருக்கு இன்றியமையாததாகும். ''கொல்'' என ஆண்மகன் கூறினால் பெண் அவ்வழியே செல்லவேண்டும் என எந்த அறநூலும் கூறுவதில்லை. அஃதேபோல் ''மெய்யேபேசு'' எனப்பெண் கூறினால், அதனை ஆண்மகன் பின்பற்றலாகாது என்று எந்த அறநூலும் கூறாது. சுசீலை சொற்கேட்டுக் கண்ணபிரானைக் காணச் சென்ற குசேலர். பெண்வழிச் சென்றவர் எனப் பழிக்கப்படுவது இல்லை. இவ்வாறன்றி,

'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்று கூறுகின்ற திருவள்ளுவர் வேறுவகையாகக் கூற முன்வருவாரோ!

எனவே, பெண்களை இணைவிழைச்சு ஒன்றே கருதி விழைதலின் இழிவு நன்கு பேசப்படுகின்றமையின், பெண்களின் உயிர்ப்பண்புகளே குறிப்பாகப் புகழப்படுகின்றன. இத்தகைய உயர்ந்த பெண்களே பேழைத் திறவுகோலைத் தம் கைவைத்துப் பொருளினைப் பொருந்தும் வழியில் செலவு செய்து இல்லறம் நடத்துதற்கு உரியவர்கள் ஆவார்கள்.

**ஆடுமாடுகள் -தற்கொண்டான்**

இல்லற ஒழுக்கம் அனைத்தும் இவ்வாறு இல்லாள் கையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதை உணராதார் ''தற்கொண்டான்'' என்ற ஒரு தொடர்கொண்டே, திருவள்ளுவர், பெண்களை ஆடுமாடுகளைப் போலவும், துணிமணிகளைப்போலவும் விற்க வாங்க வரும் பொருள் களாகப் புனைந்துரைக்கின்றார் என முடிவுகட்டுகின்றனர். கொண்டான் என்றால், விலைக்கு வாங்கியவன் என்பதே பொருள் என இவர்கள் எங்கே கண்டார்கள்? ''கொண்டான்'' என்றால் ''காதல் கொண்டான்'' என்ற பொருள் இல்லை என யார் எடுத்து ஓதினார்கள்? உலகத்தின் தொடக்கத்தில் கொண்டான் என்பதற்கு ''விலைக்கு வாங்கினான்'' என்பதே பொருளாய் வழங்கியிருத்தல் வேண்டும் என முடிவுசெய்தாலும், திருவள்ளுவர் காலத்தில் அம்மொழிக்கு அப்பொருள் இல்லை என்பது ஒருதலை. அல்லாக்கால், கொண்டான் என்ற பொருளையுடைய ''கொண்கன்'' என்ற சொல்லை, ''அன்புடைய காதலன்'' என்ற பொருளில், காமத்துப்பாலில் அப்பெரியார் பயன்படுத்துவாரோ? இன்பத்துப்பாலில் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி, அன்பாற் பிணிக்கப்பட்ட இருவரிடை விற்றலோ வாங்கலோ ஏது? நம் நாட்டு மொழிகளை ''வெர்னகுலர்ஸ்'' என்ற பெயர் கொண்டு பலர் அழைக்கின்றனர். அச்சொல்லுக்குத் தொடக்கத்தில் ''அடிமைகள் பேசும் மொழி'' என்பது பொருள். அப்பொருளிலேயே அதனை நாம் இன்று பயன்படுத்திக்கொள்கின்றோம்? நாற்றம் என் பது முன்காலத்தில் நறுமணத்தைக் குறித்து வழங்கியது; இப்போ தைய வழக்கில், தொண்டை நாட்டில், தீ நாற்றத்தையே குறிக்கின் றது. எனவே, ஒரு நூலின் கொள்கையை அந்நூல் முழுதினையும் ஆராயாது, அதில் வரும் ஒரு சொல்லிற்குப் பண்டைக் காலத்தில் வழங்கிய உறுப்புப் பொருளை அறிந்து, அதுவே அந்நூலின் முடிந்த பொருள் என முடிவு கட்டுவது மூதறிஞர்க்கு முடிவதொன்றன்று; மற்றவர்களுக்கோ மிகமிக எளிதாகும்.

**பிறன் பொருளாள்**

தற்கொண்டான் என்ற சொற்றொடரை எடுத்துக்காட்டியது போல, வேறு பல சொற்றொடர்களையும் எடுத்துக்காட்டலாம். ''பிறர்மனை நயவாமை'' என்ற தலைப்பின் கீழ், மனைவியைப் பலவாறு புனைந் துரைக்கின்றார் திருவள்ளுவர். அவை எல்லாம் அடிமைப் பொருளையே குறிக்கின்றன என்று சில பெரியோர்கள் எடுத்துக் காட்டுவார்கள்.

'பிறன்பொளாப் பெட்டொழுகும் பேதமை ஞாலத்
தறன்பொருள் கண்டார்க ணில்.'

''பிறன்பொருளாள்'' என்பதற்குப் பிறனுடைய பொருளாவாள்

என்பர். ஈதே இத் தொடரின் பொருள் எனக்கொண்டாலும், ஆடும் மாடும், தட்டும்முட்டும் போன்ற பொருள் என ஏன் கொள்ளுதல் வேண்டும்? ''தம்பொரு ளெம்ப தம்மக்கள்'' என்பதற்கும், ''பொரு ளல்லவற்றைப் பொருள் என்றுணரும் மருள்'' என்பதற்கும், ''அருள் பொருள்'' என்பதற்கும் என்ன பொருள் கூறுவார்கள்? '' இதனை ஒரு பொருளெனக் கருதேன்'' எனவரும் உலக வாழ்விற்குப் பொருள் என்னே? பொருள் என்றால் உறுதிப் பொருள் என்பதும் பொருள் அன்றோ? இல்லறத்தானுக்கு இல்லாள் உறுதிப் பொருள் ஆவாள் என்பதொன்று அன்றியும் அன்பு மிக்கார் அன்புடைப் பொருளைப் புதையல் என்று புகழ்வார்; ஆதலின், அகமுடையானுக்குப் பெரும் புதையல் ஆவாள் மனையாட்டியே எனலாம்.

அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறும் சேயிழை மாட்டு;

'சிவந்த இழையினை உடையாளை இடைவிடாது செறியச் செறிய இவள் மாட்டுக் காதல், நூல்களானும், நுண்ணறிவானும் பொருள்களை அறியஅறிய முன்னறியாமை கண்டாற் போலக்காணப்படா நின்றது.' என்றவாறு, புதிது புதிதாக, இவள் நலம் சிறந்து விளங்கலின், இவ ளோர் இன்பஞ்சுரக்கும் புதையல் ஆவாள். பொன்னும் பொருளும் போற்றப்படுவது அவை வாங்கித்தரும் இன்பத்தைக் கருதியே ஆம். ஆதலின், பொருள் என்பதுமுடிவாக இன்பத்தையே சுட்டும். எனவே, ''பிறபொருளாள்'' என்பதற்கும் ''பிறனுக்கு இன்பமாவாள்'' என்றும் பொருள்கொள்ள இடமுண்டு.

குறிப்புவினை

பொருள் என்பது பொருளை உடையவள் என்று பொருள்படு வதே இயல்பு. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என வரும் பெயரடியாகப் பிறக்கும் குறிப்பு வினைச் சொற்கள் முறையே, பொருள் தந்து நிற்கும் நிலையைச் சங்கர நமச்சிவாயப் புலவர், தமது நன்னூல் விருத்தியுரையில், ''குழையினன், அகத்தி னன், புறத்தினன், ஆதிரையான், ஓணத்தான், குறுந்தாளன், செங் கண்ணன்; கரியன், நெடியன், நல்லன், உண்மையன், உடையன், கடுநடையன், இன்சொல்லன்'' என்பவற்றை எடுத்துக் காட்டாகக் கொண்டு,''இவை பொருளாதியாருன் ஒருபொருளை வழங்குதற்குவரும் பெயராய் நில்லாது, 'இவை குழையை யுடையனுயினுன்' என ஆரும் வேற்றுமையினது உடைமைப் பொருட்கண்ணும், 'அகத்தின்கண் இருந்தனன்; புறத்தின்கண் இருந்தனன்' என ஏழாம் வேற்றுமை நிலப்பொருட்கண்ணும், 'ஆதிரை நாளிற் பிறந்தான்' 'ஓணநாளில் உதித்தான்' என அவ் வேழாம் வேற்றுமையது காலப் பொருட்

கண்ணும், குறுந்தாளை உடையான்' 'செங்கண்ணையுடையான்' என அவ்வாரும் வேற்றுமையது உடைமைப் பொருட்கண்ணும் 'கரு வண்ணமாய் இருப்பன்.' 'நெடுவடிவாய் இருப்பன்' 'நற்குணமாய் இருப்பன்' 'உண்மைத் தன்மையன்,' 'உடைப்பொருள் சிறந்தனன்' எனப் பண்பின் கண்ணும் 'கடுநடையாக நடப்பான்' 'இன்சொல்லாகச் சொல்லுவான்' எனத் தொழிற் பண்பின் கண்ணும், வருதலின் வினைக்குறிப்புச் சொல்லாயின'' என்று விளக்குகின்றார். இவ்வுரை சிவஞான முனிவர் திருத்திய பதிப்பில் கண்டது. வீரசோழியமோ குறிப்பு வினையை வடமொழி மரபு பற்றித் தத்ததம் என்று கூறி அதன் வகையை,

'உண்ணு மிதனு லுரைக்கு மிதனை யுடையினிது
பண்ணு மிதனைப் பயிலு முதிற்பயன் கொள்ளுமித்தா
லெண்ணு மிதனை யிதனுக்கு நாயக னீங்கிருக்கும்
நண்ணு மிதனை யிதையொக்கு மிங்குள னன்னயத்தே'

'மகனிவ னுக்கிவ ளுக்கிந்த வர்க்கத் தினனிவனைத்
தகவிய தேவ னெனும்யாவ னென்றுநற் றத்திதங்க
ணிகழும் பிறபொரு ளின்கண்ணு நிற்கு நினைந்தவற்றைப்
புகண்மலி தெய்வப் புலவர்க்கும் பொச்ச மடக்கரிதே'

என்று கூறி விரித்துரைக்கும் பிரயோக விவேகம் எனும் நூலும், இவ்வாறே தத்திதப் படலத்தில், முறையடியாகவும், ஓதல் அடியாகவும், பிற அடியாகவும் குறிப்புவினை பிறந்து பொருள்படும் என்று வடமொழி வழியே விரித்துக் கூறும், வினைக்குறிப்பு. தமிழ்மொழியில் அமைந்ததொன்றாதலின், அதனைத் தமிழ் நூன் முறையே, சங்கர நமச்சிவாயர் விளக்கிக் கூறிய மரபினைப் பின்பற்றி ஆராய்வதே அமைவுடைத்தாம்.

பொருளுடையாள்

''எனவே, 'பொருள்' என்ற பொருட்பெயர் அடியாகப்பிறந்த ''பொருளாள்'' என்பது, சங்கரநமச்சிவாயர் காட்டுகின்ற ''குழையையுடையனுயினான்'' என்பதுபோல, ''பொருளையுடையளுயினுள்'' என ஆரும் வேற்றுமையது உடமைப்பொருட்கண் வரும் என்பது தெளிவாகின்றது. ''பிறன் பொருளாள்'' என்பதற்குப் பிறனுடையபொருளையுடையாள் என்பது பொருளாகும் ஆனல், பரிமேலழகியார், ''பிறன் பொருளாள்'' என்பதற்குப் 'பிறனுடைமை' என்றன்றே பொருள் காண்கின்றார் எனின், அப்பெரியார் தமிழினியற்கையை முற்று முணர்ந்தவர்; ஆதலின் பொருளானவள் எனப் பொருள்கொள்ளாது பொருளாளந் தன்மை உடையாள் என்றே உடைமைப் பொருள்

கொள்கின்ற உரை நுணுக்கம் இங்கு ஆராய்தற்பாலதாம். பொருளாந் தன்மை உடையாள் என விரித்து வலிந்து பொருள் கொள்வதைவிட நேரே 'பிறனுடைப் பொருளை உடையாள்'' எனப் பொருள் கொள்வதால் வரும் கேடென்னை? ''பொருளையுடையது'' என்ற பொருளில் பொருட்டு'' என்ற இச்சொல் ''இப்பொருட்டு'' என்ற தொடர் முதலியவற்றில் பயின்றுவரக் காண்கின்றோம். ஒன்றன்பால் வினையாகிய பொருட்டு என்பதற்கு இயைபுடைய பெண்பால் குறிப்புவினை, பொருளாள் என்பதே அன்றோ? எனவே, பொருளையுடையாள் என்ற உரையும் பொருந்திய உரையே யாகும். மனுமுறையைப் பின்பற்றாத பிறநாட்டார்க்கும் பிறகொள்கையினர்க்கும் பரிமேலழகியார் கூறுகின்ற உரை ஏலாதது ஒன்றாகும். 'பிறனுடைய பொருளையுடையாள்'' என இக் காலத்திற்கு ஏற்பப் பொருள் கொள்வதற்கே, திருவள்ளுவர் தமது நூலில் இடந்தருகின்றார். ''வளத்தக்காள்''. (மணாளனது பொருளினை அறவழியில் பயன்படுத்தும் உரிமையுடையாள்) என முன்னரே கூறியுள்ளமையால், மனைவியை, மணாளனது பொருள் முழுதுமுடையாள் என்று புனைந்துரைப்பதற்கு என்ன தடையுண்டு? இவ்வாறு பொருள் கொள்ளும் போது, ''அறம் பொருள் கண்டார்கணில்'' என்பதில் ஒரு புது நயம் தோன்றுகிறது. பிறனில் விழைந்தொழுகுவது அறமன்று என்பது எவர்க்கும் எளிதில் புலனாகும். ஆனால் பிறர்மனை விழையாமைக்கும் பொருளுக்கும் என்ன தொடர்புண்டு என்றுதான் நமது மனம் இடர்ப்படுகின்றது. பிறனுடைய பொருளையுடையாள் என உரை கூறினால், இத்தொடர் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. இளமை தந்துதவும் பழமொன்றினை ஒரு முனிவர் கைப்பற்ற அரசன் அதனைத் தன் உயிரனைய காதல் மனைவி கையில் கொடுத்தான்; அவளோ அதனை தன்காதற்கிழவனாய்க் களவில் கூடும் குதிரை ஓட்டிக்குக் கொடுத்தாள். குதிரை ஓட்டியோ அதனைத் தனது காதற் கிழத்தியாய்க் குதிரை எருவினைக் கொண்டு செல்வாளுக்குக் கொடுத்தான். அவள் எருக் கூடையில் இப் பழத்தை வைத்துச் செல்வது கண்டு உண்மையுணர்ந்து அரசினைத் துறந்து பர்த்ருஹரி என முனிவரில் உயர்ந்தான் அரசன் எனக் கதை ஒன்று வழங்குகின்றது. இக்கதையில் நிகழ்ந்ததுபோல், மணாளன்பொருள் மனையாளுடையதாகின்றது; மனையாளின் பொருள் அவனை நயந்தானுக்கு ஆகின்றது. அவ்வழியால் பொருள் தேடுவது பொருளீட்டும் நெறியன்று என்று திருவள்ளுவர் இக்குறளில் கூறுகின்றார்.

> 'பகைபாவ மச்சம் பழிஎன நான்கும்
> இகவாவா மில்லிறப்பான் கண்'

என்பது உண்மையாகலின், இது பொருள் தேடும் நெறியன்று என்பது வெளியாகின்றது.

**பிறனியலாள்**

'அறனியலான் இல்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்'

என்ற திருக்குறளையும் அதில் ''பிறனியலாள்'' என்பதற்குப் பரிமேலழகியார் ''பிறனுக்கு உரிமை பூண்டு அவனுடைய இயல்பின்கண்ணே நிற்பாள்'' எனக் கூறுகின்ற பொருளையும் எடுத்துக்காட்டித் திருவள்ளுவர் தம் மகளிர், அடிமைகளே என வற்புறுத்துவாரும் உண்டு. இங்கு ''இயல்'' என்றூ கூறப்படுகின்ற இடம், இல்லற இயலாதலின், அஃது இல்லற ஒழுக்கமே ஆகும். ''இயல்பினான் இல்வாழ்வான்'' என வருதல் காண்க. எனவே, ''பிறன் இயலாள்'' என்பது ''பிறனொருவனுடைய இல்லறத்தாள்'' என்றாகிப் ''பிறனுடைய இல்லறத்தை இனிதிருந்து நடத்துபவள்' எனப் பொருள்படுகிறது. பரிமேலழகியாரது உரைக்கும் இப்பொருள் பொருந்தும் என்க. எனவே, பிறன் மனைவியை விரும்புகின்றவன் அதனால், பிறனது இல்லறத்தினையே கெடுக்கின்றான் அன்றோ? ''உள்ளதென் இல்லவள் மாணாக்கடை'' என்பதை நோக்குக. பிறனொருவனுக்கு அறத்தாறென்றும் இல்லாதவாறு செய்து பெரும் பழி சூழ்கின்றானே என்று மனமெரிந்தே திருவள்ளுவனார்,

'விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்'

என்று இறந்தாரோடு பிறர்மனை நயந்தாரையும் வைத்து எண்ணுகின்றார். பின்னும்,

'எனைத்துணை யராயினு மென்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்'

என்ற குறளில், பிறர்மனை நயந்தானை, அவனுடைய பிற உயர்வினை நோக்கிப் பன்மையிற் பேசத் தொடங்கி, அவனுடைய இழிதகைமையை ஆற்றமாட்டாத நெஞ்சினராய் அவனை ஒருமையாகக்கூறி இழித்துரைத்து முடிக்கின்றார்.

**பிறன்வரையாள்**

மேலே,

'அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று'

என்ற குறளினை எடுத்துக்காட்டிப் ''பிறன்வரையாள்'' என்பது அடிமையையே குறிக்கும் என்று மன்றாடுவாரும் உண்டு. அவர்கள்

''பிறன்வரையாள்'' என்பதற்குப் ''பிறன் எல்லைக்கு உட்பட்டவள் சிறைப்பட்டவள்'' என்று பொருள் கொள்வார்கள். 'வரை' என்பது எல்லையே என்பது உண்மையே. ''பிறனுடைய எல்லையே தனது எல்லையாக உடையாள்'' என்பதே அதன்பொருள். இருவரும் அன்பால் ஒருவராயினர். ஆதலின், ஒருவர் எல்லை மற்றொருவர் எல்லையாயிற்று. மனைவியும் மணாளனும் நடத்தும் இல்லறம், ஒரு வகையில் நோக்குமிடத்து மணாளனது வருவாய்க்குத்தக்கபடி உள்ளதாகும். ''தற்கொண்டாள் வளத்தக்காள்'' என்பதனையே இக் குறளும் வலியுறுத்துகின்றது. எனவே, அவ்வகையில் அவனெல்லை இவள் எல்லையாகின்றது. எல்லை என்றால் அவனுடைய உடலின் எல்லையோ? வீட்டின் எல்லையோ? இவையல்ல என்று எவரும் உடன்படுவர். பின் எவ்வெல்லையோ? இருவரும் ஒருயிராக நின்றதோர் அன்புடைய உயிரின் எல்லையும், அவனை மக்களிற் சிறந்தோனாக்கி அவ்வுயிர்க் குறுதி பயப்பனவாகிய அறம் பொருள் இன்பம் என்பவற்றின் எல்லையுமே ஆகும். அவனுடைய அறத்தின் எல்லை எதுவோ அதுவே இவளுடைய அறத்தின் எல்லையாகும். அவனுடைய பொருளின் எல்லை எதுவோ அதுவே இவளது பொருளின் எல்லையாகும். அவனுடைய இன்பத்தின் எல்லை எதுவோ அதுவே இவளது இன்பத்தின் எல்லையாகும். இயல்பாகிய இல்லற நெறியினின்றும் இவளை விலக்கிப் பிறனொருவன் கெடுப்பானாயின் தன் அகமுடையானது உயிர்க்கும் எல்லையாக நின்ற இவள் அவ்வுயிர்க்கே உலை வைக்கின்றாள். எனவே, அறம் பொருள் இன்பம் என்றவற்றையும், இவையிலாத போது வீட்டையும் இழந்து உயிரையும் ஒருகால் இழக்கின்றான் எனப் பிறர்மனை நயத்தலால் அப்பிறனுக்கு வருங் கேடு பேசப்படுகின்றது. ஒத்த தலைவனும் தலைவியும் துய்க்கும் இன்பத்தினைப் பற்றிக் காமத்துப்பாலில் ஓதுகின்ற உண்மைகளின் நின்றுமே, இவையனைத்தும் வெளியாகின்றன. இந்நுட்பம் அறியாதார் ''எல்லை'' என்பதற்கு வீட்டின் எல்லை எனக்கொண்டு அதைத் ''தாண்டாதவள்'' என ஒரு சிறையாளியைப் பற்றிக் கணக்கண்டு, வாய்வெருவிப் பொருள் கூறுவர். தம்மைச் சுற்றிலும் சிறையாளிகளைப் பார்ப்பவர்கள் இவ்வாறே பொருள் கூற முற்படுவர். ஆனால் ''சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்'' எனக் கூறுகின்ற திருவள்ளுவரின் கொள்கை அஃதன்று என யாவரும் உணர்வர்.

**பிறற்குரியாள்**

இவற்றோடு நில்லாது,

'நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற்
பிறற்குரியாள் தோடோயா தார்'

என்ற திருக்குறளில் வரும் ''பிறற்குரியாள்'' என்ற தொடரை அடிப்படையாகக்கொண்டு, அகமுடையாளை அடிமையாக்குவர் சிலர். ''பிறற்குரியாள்'' என்பது அடிமைப் பொருளை எவ்வாறு குறிக்குமோ யாம் அறியோம். அடிமையாகாது, எல்லா உரிமையும் உடைய பெண்ணினைக் குறிக்கும்படியாக, இவர்கள் சொற்படி நாம் இத் தொடரை மாற்றியமைக்கப் புகின் 'பிறர்க்குரியாள்' என்பதனை 'எல்லார்க்கும் உரியாள்' என்று மாற்றுதல் வேண்டும் போலும்; அல்லது மணாளனுக்கு உரியவள் அல்லள் என்று மாற்றுதல் வேண்டும். எனவே, இவர் காட்டும் பொருள், பெண்களைப் பொதுமகளிடம் கொண்டுபோய் விடும். இங்கொரு கதை நமது நினைவிற்கு வருகின்றது. ஓரூரின் முதலாளிக்கு இரண்டு புதல்வர் பிறந்தனர். ஒருவன் அறிவாளன்; மற்றொருவன் அறிவிலி. அறிவாளன், முதலாளியாகி ஊராரது நலம்பொலத்திற்குப் போய் வருகையில் தன் தம்பியையும் உடன் அழைத்துப் போயினன்; ஊரில் உள்ள ஒருவரின் தாய் இறந்தபோது அறிவாளன் சென்று அவரைத் தேற்றி, ''இவ்வம்மையார் உமக்கு ஒருவர்க்கு மட்டும் தாய் அல்லர், ஊரார் அனைவர்க்கும் தாய்'' என்று தாயாரைப் பாராட்டினன்; மற்றொருமுறை வேறொருவரின் தமக்கை இறந்தபோது, ''இவ்வம்மையார் உமக்கொருவர்க்கு மட்டும் தமக்கையல்லர்; ஊரார் அனைவர்க்குந் தமக்கை'' என்று பாராட்டித் தேறுதல் கூறினன். இதைக் கண்ட தம்பி, இவ்வளவே முதலாளி வேலை எனக்கருதித் தானும் முதலாளியாகி, அவரவர் வீடு சென்று மேன்மை யடைய வேண்டுமெனப் போராடத் தமையன் உடன்பட்டு, அவனை அழகு பிள்ளையாக ஒப்பனை செய்து மற்றொருவருடைய மனைவி இறந்தபோது, அவரைத் தேற்றிவர அனுப்பி வைத்தான். சென்ற அறிவிலி, அகமுடையாரைத் தேற்றவேண்டி ''ஐயா, இவ்வம்மையார் உமக்கொருவருக்கு மட்டும் மனைவியல்லர்; ஊரார் அனைவர்க்கும் மனைவியாவார்'' என்று பாராட்டத் தொடங்கியதும், எல்லோரும் இவனை வெளியோட்டினர். ''பிறற்குரியாள்'' என்பதற்கு இவர்கள் கூறும் பொருளும் இக்கதையாகத்தான் முடியும்.

**பெண்மை**

'அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவாத வன்'

என்ற குறளில், திருவள்ளுவர் ஒரு பெண்ணிடத்தே எதனை நயத்தல் ஆகாது என்பதனைக் கூறுகின்றார் அஃதே பெண்மை. அஃது ஒன்றுதான் கணவனுக்கே சிறப்பாக உரியது. அவளது மற்றைய நல்லியல்பெல்லாம் உலகிற்கே உரியனவாகும். பெண்மை என்பதற்கு

இந்த நுண்ணிய பொருளைப் பரிமேலழகியார் புலவி நுணுக்கத்தில் கூறுகின்றார்.

''கற்பு நாண் முதலிய நற்குணங்கள் இன்மையிற் பரத்தையர்க்கு உள்ளது பெண்ணியற்கை மாத்திரமே என்னும் கருத்தால் பெண்ணியலார் என்றார்'' எனப் ''பெண்ணியலார்'' என்ற குறளின் உரையில், ஒரு குறிப்பு எழுதுகின்றார். பெண்களுக்கு உள்ள பல நலங்களில் பெண்வடிவம் ஒன்றே கீழ்நிலையில் உள்ளது. அஃது உடலின் பண்பாகும். அதனைத் துய்க்கும் உரிமை கணவனுக்கே உண்டு. நயத்தலாவது நச்சித் திரிதல். பிறர் மனை நயத்தலே பழிக்கப்படுகின்றது. பறவையினழகையும் இறைவன் வடிவாகக் கண்டு களித்துப் புகழ்ந்து போற்றுவதுபோலப் பெண்களின் அழகையும் காதற்குறிப் பின்றி இயற்கையன்னையின் எழிலார் வடிவமெனக் கண்டு வணங்குவது நயத்தாலாகாது; இயற்கைக்காட்சியாகி, வழிபாடெனப்படுமாதலின், அதனை வள்ளுவர் பழிக்கவில்லை அன்றியும், திருவள்ளுவர் ''பெண்மையை நயவாதே'' என்றாரே அன்றிப் பெண்களது அறிவினைப் பாராட்டாதே; நல்லொழுகத்தை விரும்பாதே; அதனைப் பின்பற்றி ஒழுகாதே; அவ்வை முதலியோர் கூறியவற்றை நீ படியாதே என்றும் கூறவில்லை. பிறன் மனையாளோடு பேசுவதையோ, அறிவாராய்ச்சி செய்வதனையோ தடுக்கின்றார் இல்லை. இல்லிற் செல்வத்தைப் பழியாது, இல் இறப்பதனையே பழிக்கின்றார். இல்லிறப்பான் என்பதற்கு. ''பிறர் இல்லாள்கண் நெறி கடந்து செல்வான்'' ('பகைபாவம் எளிதென' என்ற குறளுரைகளைக் காண்க) என்று பரிமேலழகியார் எழுதுகின்ற உரை நுணுக்கத்தையும் காண்க. பெண்கள் மேல், ஆடவர் காற்றுப்படுதலும் ஆகாது என அவர்களுக்கு முக மூடியிட்டுத் திரைக்குப் பின்னே ஒருபுறம் மறையவைத்துக் கதவைத் தாளிடுகின்றார் இல்லை திருவள்ளுவர்; இவ்வாறு பரிமேலழகியார் காட்டுவது போலப் பெண்மையையும், பெண்களுக்குரிய மற்றைய மக்கட்பண்பினையும் வேறு பிரித்தமை, அவருடைய திருவருட்புலமையைக் காட்டுகின்றது. பெண்களை வெறும் பிள்ளை பெறும் பொறிகளாகவும், காதற் கழிவிடமாகவும் திருவள்ளுவர் கருதவில்லை; அவர்களது மனைமாட்சியும், பிறமாட்சியுமே சிறந்தன என எடுத்துரைக்கின்றார். எனவே, ''பிறற்குரியாள்'' என்பதற்குப் பெண்மை அளவில் ''பிறனுக்கே உரியாள்'' என்று பொருள் கொள்வதே அமையும். பெண்மை உடலளவில் நிற்பது என்பதனை

'கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று'

[''கல்வியில்லாதானொருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை அவாவுதல், இயல்பாகவே முலையிரண்டும் இல்லாதாள் ஒருத்தி, பெண்மையை அவாவினாற்போலும். சிறிதும் இல்லாதாள் என்பதாம், அவாவியவழிக் கடை போகாது, போகினும் நகைவிளைக்கும் என்பதாயிற்று.''] என்ற குறளில் காண்க.

பிறற்குரியாள்

அன்றியும் ''ஆவினுக்குரியவள்'' என்றபோது 'கு' என்ற நான்கனுருபேற்ற. ''ஆ'' என்பது, உடைமையாகும். அதன் பயனிலையாகிய அவள், உடையாளாகின்றாள். ''அவளுக்கு உரியது இவ்வா'' என்றபோது நான்கன் உருபேற்ற அவள் உடையாள் ஆகின்றாள்; அதன் பயனிலையாகிய உரியது என்பதும் ஆ என்பதும் உடைமை ஆதல் காண்க. பிறற்குரியாள் என்பதன் பொருள் என்ன? மேலே நான்கன் உருபேற்ற பெயர் உடையாளாகவும் உடைமையாகவும் வரக்காண்கின்றோம். ஆதலின், ''பிறற்குரியாள்'' என்ற தொடரில் எந்தப் பொருளில் வந்துளது? பெண்ணை அடிமையாக்கியவர்கள், ''அவளுக்குரியது இவ்வா'' என்ற தொடரை மனத்திற் கொண்டு நான்கனுருபேற்ற பெயரை உடையவன் பெயராகவும், அது கொண்டு முடியும் சொல்லாகிய உரியாளை உடைமையின் பெயராகவும் கொள்வர். ''ஆவினுக்கு உரியவள்'' என்ற தொடரை மனத்திற் கொண்டு நான்கனுருபேற்ற ''பிறன்,'' என்பது மணாளனாகிய உடைமையைக் குறிப்பதாகவும் அது கொண்டு முடியும் சொல்லாகிய ''உரியாள்'' என்பதன் பொருளாகிய ''மனையாட்டி'' என்பது உடையாளைக் குறிப்பதாகவும், பொருள் கொண்டு, ''அகமுடையானே அகமுடையாளுக்கு அடிமை'' எனத் திருவள்ளுவர் கூறுகின்றார் என்றால், வரும் இழுக்கு என்னை? ''பிறற் குரியாள்'' என்பதனை இரட்டுற மொழிந்து இவ் விருபொருளும் கொள்வதே ஏற்புமுடைத்து. அப்பொழுதுதான் ஒருவர்க்கொருவர் சார்பாகின்றனர் என்ற உண்மையும், திருவள்ளுவர் அடிமை வாழ்க்கையைப் பற்றிப் பேசவில்லை என்ற குறிப்பும் வெளியாகும். ஒருவர்க்கொருவர் கொடியும் கொழு கொம்பும் என இன்றியமையாது நிற்றலின், ஒருவர்க்கொருவர் உரியவர் ஆவர். அடிமைக்கும் ஆண்டானிடத்தில் சில உரிமைகள் உள்ளன. ஆண்டான், அடிமைக்கு உணவளித்தல் வேண்டும். இத்தகைய உரிமை அடிமைக்கே இருக்குமானால், 'பெண்டாட்டிக்கு அகமுடையானிடத்தில் உரிமை உண்டு' என்று சொல்ல இடம் இல்லையோ? உரிமை என்பது கடமை என்பதன் பின்புறமாகும். அக் க மை மற்றொருவனது உரிமையைக் குறிக்கின்றது. உரிமை இரண்டிடத்தும் ஒத்து வருதலே உலக வழக்கும் என்க. காமத்துப்பாலை

ஓதியவர்கள், காதலர் ஒருவருக்கொருவர் உரியவராவர் என்றே பொருள் கொள்வர். பெண்மையளவில் அவள் இவனுக்கே உரியவளாதல்போல ஆண்மையளவில் இவனும் அவளுக்கே உரியவனுவன். 'ஒருத்திக்கு ஒருவன்' 'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதனைப் 'பிறற்குரியாள்' என்பது பின்னும் வற்புறுத்துகின்றது.

## அடிமை — தாய்மை

அவ்வாருயின், திருவள்ளுவனார், பெண்கள் அடிமைகளாய் நின்று அகமுடையானை வழிபடவேண்டும் என்று யாண்டும் கூறவில்லையோ? திருவள்ளுவர் புனைந்திருக்கின்ற பெண்ணின் இயல்பு, நாமாராய்ந்த அளவிலேனும் அடிமையின் இயல்பானுல், கூறுகின்ருர் என விடை தருவோம். அடிமையின் இயல்டன்ருனல் கூறவில்லை என விடை கூறுவோம். இதுவரை நாம் கூறியது அடிமையின் இயல்பெனச் சிலர் கூறினுல் அதனையே நல்லோர் உரிமை எனப்புகழ்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டுவோம். ஆனுல், அடிமை வழிபாட்டைப்பற்றிக் கூறிய குறட்பாக்கள் எவ்வாறு போவதெனச் சிலர் கேட்கலாம். அவற்றினையும் ஆராய்ந்து காண்போமாக. பெண் செய்ய வேண்டுவன என்ன?

> 'தற்காத்துத் தற்கொண்டாள் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்.'

கற்பின் நின்றும் வழுவாமல் தன்னைக் காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலியவற்றுல் பேணி, இருவர் மாட்டும் நன்கமைந்த புகழ் நீங்காமற் காத்து, மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளிலும் கைப்பிடி உடையாளே பெண்ணுவாள். தன்மாட்டுப் புகழாவது வாழும் ஊர் கற்பால் தன்னைப் புகழ்வது. 'சோர்வு-மறவி;' என்பது பரிமேலழகியார் உரை. ஒருமை மகளிரில் ஒருத்தி யாதலின், தன்னைத்தானே காத்து நிற்றல் வேண்டும். தன் அகமுடையானை, அவனுடைய தாய் பேணி வளர்த்தல் போலத் தானும் அன்புடன் போற்றல் வேண்டும். கொழுநனைப் பேணி வளர்த்தலால் பெண் எனப்பெயர் பெறுகின்ருள். விருந்து ஒப்புரவு முதலியவற்றையும் பேணிச் செய்து புகழ்பெறுதலாலும் பெண் எனக்குரியாள். ''அந்தணர் என்போர் அறவோர்'' என அங்கு உறுப்புப் பொருள் கூறுகின்றமைபோலப் பெண் என்பதன் உறுப்புப்பொருளை இங்குக் கூறுகின்ருர். 'என்னே இவள் தகுதி!' என்று தன் தகுதியினைப் பிறர் புகழ்ந்து கூறும் சொல், பழுது படாதவாறு அப்பெண் காத்தல் வேண்டும். 'என்னே இவன் தகுதி!' எனத்தன் மணாளனைப் பிறர் எல்லாம் புகழ்ந்து பாராட்டுமாறு அவனை அறநெறி பிறழாதபடி ஆற்றினெழுக்கிக் காத்தல் வேண்டும். இவ்வாறு தன் புகழையும்,

அவன் புகழையும் காத்து இல்லறம் நடாத்தும்போது, இல்லற ஒழுக்கங்களாகிய மனை மாட்சியில், ஒரு சிறிதும் பிறழாது, அவற்றை என்றும் மறவாது கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். மணாளன் சோர்ந்திருக்கலாம். ஆனால், இல்லறமென்னும் பழமரத்திற்கு ஆணிவேராய் அமைந்த அவள் சோர்ந்திருத்தல் ஆகாதன்றோ? தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாத பெண்ணே பெண். மற்றையோர் பெண் பாவையேயாவர். இக் குறளிலும் இவளே அவனை நல்வழிப்படுத்தும் கடவுள் எனக் கூறுகின்றார் வள்ளுவர். இவளிடத்தே தற்காக்கும் மறமும் உண்டு; தற்கொண்டாற் பேணும் பொருளும், தாய்மையும் உண்டு; தகைசான்ற தன்சொற்காத்துத் தற்கொண்டானையும் ஆற்றினொழுக்கி அவன் சொல்லையுங் காத்துவரும் பெருமையும் அறிவும் அன்பும் உண்டு; சோர்விலா அறமும் உண்டு; வீடும் உண்டு; ஏரெழிலாம் அழகும் இன்பமும் உண்டு. பெண்ணெனும் பேரும் உண்டு. இவையனைத்தும் ஒன்று கூடியதே பெண் என்கின்றார் திருவள்ளுவனார். தற்கொண்டாற் பேணும் தாய்மை ஒன்றே கூறுகின்றாரே யன்றி அடிமையாய் வாழ்தலை எங்கும் கூறவில்லை; பெண் என்பதற்கு உடலளவிற் பொருள் கொண்டு மாதரை அடிமையாக்குவதை மறுக்கின்றார்; கட்புலனாயதோர் அமைதிக்கேற்ற உயிர்ப்பண்புகளும் நிறைந்திருத்தல் வேண்டுமென்கிறார்; அப்போதுதான் பென்ணானவள், பரத்தையர்போல மாக்களில் ஒருத்தியாகாது, மக்களில் ஒருத்தியாகின்றாள் என வற்புறுத்தி இக்குறளைப் பாடுகின்றார்.

## இருதலைப் பேறு

'பெற்றான் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு'

என்ற குறளையும் அதற்குப் பரிமேலழகியார் "பெண்டிர் தம்மை எய்திய கணவனை வழிபடுதல் பெறுவாராயின் புத்தேளிர் வாழும் உலகின்கண் அவராற் பெருஞ் சிறப்பினைப் பெறுவர்" என்று காண்கின்ற உரையையும் எடுத்துக்காட்டி, இங்கு அடிமை வழிபாட்டினையே வள்ளுவர் கூறுகின்றனர் என்பர் ஒரு சாரார். பரிமேலழகியாரும் அடிமை வழிபாடு கூறாது தற்கொண்டான் பேணும் தாய்மையையே கூறுகின்றார் என்பது வெள்ளிடைமலை. அன்றியும், "பெண்களுக்கு ஐம்பெரு வேள்வி, நோன்பு முதலியவற்றில் தனியுரிமை இல்லை. கணவனுக்குப் பணிவிடை செய்வதனாலேயே துறக்கத்தில் பெருமை அடைகின்றார்கள்," எனவரும் மனுவின் பாட்டின் பின்னடியையே திருவள்ளுவர் மொழி பெயர்த்து அருளுகிறார்

என்ற கொள்கையோடு, பரிமேலழகியார் மேற் கூறியவாறு பொருள் காண்கிறார். மனுவின் பாட்டை, வள்ளுவர் மொழி பெயர்க்கவில்லை என்பது ஒருதலை. மனுவை உடன்படா தாரும் பரிமேலழகியார் கூறுகின்ற பொருளை ஏற்றல்கூடும். ஏலாதபோது 'இல்லறத்திற்கு வேண்டிய பண்புகளும் செயல்களும் பெற்ற ஆடவனை மணாளனாகப் பெறின், அவ்வாறு பெற்றமகள் மனை மாட்சி தன்னிடத்து இருத்தலினால், அம்மாட்சி மணாளனிடத்து இல்லாதபோதும், தானே இல்லறத்தை நடத்தக் கூடுமானாலும், அவன் மனைமாட்சி யுடையவனானால் அவனுதவியையும் கொண்டு வெற்றியும் புகழும் பெற நடத்தல் கூடும்; இருதலையும் அறமும் அன்பும் ஒத்திருத்தலின் அறம் வளரும் என்பதில் ஐயப்பாடில்லை. இதற்குத் தடை செய்வார் ஒருவரும் இல்லையாதலின் அறம் வளர்க்கும் அம் மங்கை மறுமையின்பம் பெறுதல் ஒருதலை' என்னும் பொருள் கொள்ளலாம். அகமுடையான் மனை மாட்சி இல்லாதவனாகிய போதும் அன்பெனும் உயிரோடு கூடிய இல்லாளது மனைமாட்சி ஒன்றே இல்லறத்தை இனிது நடாத்தும். இல்லறமாகிய உடம் பிற்கு முதுகெலும்பு போன்றவள் இல்லாள்தான். இல்லாளது மாட்சியோடு இவனது மாட்சியும் இணைந்து வருமானால், அறமாகிய உறுதிப்பொருளை இருவரும் திண்ணமாக, அடைந்தே விடுவர். இல்லற ஒழுக்கம் இவனுக்கு இல்லாதபோது இவனை இல்லற வழியில் உடன்கொண்டு செல்வது அருமையினும் அருமையாதலின், அந்நிலை யில் மனைவி இவனைப் பேணிக் காக்கும் முறையில் அறத்தாற்றில் சிறிது பிறழ்ந்தாலும் பிறழ்தல் கூடும். அறஒழுக்கத்திற்கு இவனியை யாது நிற்கலாம். அவ்வாறின்றி அவனும் அறவொழுக்கம் உடையா னாயின் பழம் நழுவிப்பாலில் விழுந்த கதையாகி இல்லறமே இன்ப மாகும். அன்றியும், பெண்களுக்குப் பெருஞ்சிறப்புச் செய்வது அவர் களுடைய அகமுடையான் மாரோடு ஒருங்குவைத்துத்தானே! அச்சிறப்பு எப்போது புத்தேளிர் உலகில் கிடைக்கும்? அகமுடை யானும் நல்லறிவும் நல்ல பண்பும் செயலும் பெற்றானாய்ப் புத்தேளிர் உலகிற் புக உரியனாயின போதேயன்றோ அதுகிடைக்கும்?

**மணக்குடவர்**

மணக்குடவரும் பரிமேலழகியார் கூறுகின்ற உரையினும் வேறோர் உரையே காண்கின்றார். 'பெண்டிரானவர் தம்மை மனைவி யராகப் பெற்றவரையே தமக்குத் தலைவராகப்பெறின், தேவர் வாழும் பெரிய சிறப்பினை யுடைய உலகத்தைப் பெறுவர் என்பது அவள் உரை. உலகில் மணமாகாத பெண்மகள் ஒருவனை விரும்பலாம். ஆனால் பெரியோர் வற்புறுத்தலாலோ பொருள் முதலியவற்றிற் கடிமையா

தலாலோ பெண்கள் தான் விரும்பியவனை மணப்பதில்லை. தலை எழுத்தே என இருவரும் கூடி வாழ்கின்றனர். இந்நிலையில் மனமொத்திருவர் வாழ்வது இயலாதது ஒன்றன்று. ஆனால், அஃது அருமையினும் அருமை. இங்குக் கற்பென்பது மனமார எழுந்தொளிர்வதும் அருமையினும் அருமை. அங்குக் கற்பென்பது பிறரை அணையாமை என்ற இன்மைப் பொருளைக்குறிக்குமேயன்றி 'கணவன்மேல் காதலுண்மை' என்ற உண்மைப்பொருளைக் குறிப்பதில்லை. எதிர்மறையளவில் நில்லாது, உடன்பாட்டளவில் உயர்ந்தால் அன்றோ கற்பு கற்பாவது? அல்லாக்கால் கற்பு என்பது கல்லில் மலர்ந்த பூவெனப் பொருள்பட்டுக் கற்பூவாகும். ஆனால், மனைவி விரும்பிய மணாளனும், மணாளன் விரும்பிய மனைவியும் ஒருங்கு கூடியபோது இயற்கைக்கற்பு எழுந்தொளிர்கின்றது. இல்லறம் இனிய அறமாகிப் புகழ் பெருக மிளிர்கின்றது; துறக்கமும் ஆகின்றது. இவன் ஒரு பேறு பெற்றான் என்னை? தான் விரும்பிய காதலியை மணந்தான் ஆதலின் என்க. அவளொரு பேறு பெற்றாள்; என்னை? தான் விரும்பிய மணாளனையே மணந்தாளாதலின் என்க. இவ்வாறு மணப்பதன் சிறப்பை நோக்கி அதனைப் பேறு எனப் புகழவேண்டியே (இவளைப்) பெற்றான் என்றும் (இவனைப்) பெறின் என்றும் பெறுதல் என்ற வினையால் குறிக்கின்றார். இவ்விரு பேறும் ஒருபேறாய் இணைந்தபோதுதான், பெரும்பேறாய்ச் சிறப்பது. அதுபொழுதன்றோ அன்பு இருதலையும் ஒத்துவருகின்றது. அந்த நிலையில் புத்தேளிர் வாழும் உலகிலே பெறத்தக்க இன்பச் சிறப்பினை இவ்வுலகிலேயே அடைவர் என்றும் பொருள் கொள்ள இடமுண்டு. இருவரும் இன்பம் பெறுவதைக் கூறுகின்றவர் இவள்மேல் வைத்து ஓதுவது ஏன்? வளத்தக்காள் என்பதால் குறிக்கப்பட்டபடி இவளே இல்லறத்திற்கு இன்றியமையாத சிறப்பினள் ஆதலின் என்க. இவன்வானகம் புகுதலை,

> 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்'

என்று கூறுகின்றமையால், இங்கு இவள் வானகம் புகுதலைக் கூறுகின்றார். மணக்குடவர் உரைக்கு இவ்வாறு பொருள் கொள்ளாது, தலைவன் என்று அவர் கூறுகின்றமையால் ஆண்டான் அடிமை முறையே குறிக்கப்படுகின்றதெனப் போராடினால் இன்பத்துப் பாலில் தலைவி என்பதற்கு என்ன பொருள் கொள்வதென விடுக்க. இக் காலத்தார் அத்தகைய அடிமைக் கதையைப் படிக்க விரும்புவதில்லை; ஆதலின் அவர்களுடைய போராட்ட மனைத்தும் வீணே.

**கொழுநற்றொழுதல்**

அஃதும் அவ்வாறாயின்,

'தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'

என்ற குறளுக்குப் பொருள்தான் என்னே? தெய்வங்களை வழிபடும் முறையினை மறுத்துரைக்கும் புத்தர் கொள்கையினை வற்புறுத்துவது இக்குறள் எனக்கொண்டு,

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்
பிசியு நொடியும் பிறர்வாய்க் கேட்டு
விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக்
கடவுட் பேணல் கடவியை யாகலின்
மடவர லேவ மழையும் பெய்யாது
நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
பிறர்நெஞ்சு சுடூஉம் பெற்றியும் இல்லை
ஆங்கவை யொழிகுவை யாயி னாயிழை
ஓங்கிரு வானத்து மழையுநின் மொழியது''

என்று சீத்தலைச் சாத்தனார் பூதத்தின் வாய்வைத்துப் பாடுகின்றார். புத்தர்களுக்கு அவ்வுரை ஒவ்வும் போலும் இது நிற்க.

**மாதரே நிறைமொழிமாந்தர்**

'பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றால் என்னே? நோன்பு நோற்றுச் செயற்கரிய செய்தலைக் கைவரப் பெற்ற பெரியோராகிய நிறைமொழி மாந்தரது பெருமையை அவர்களது மறைமொழி காட்டி விடுதல்போலப் பெண்களும் நோன்பு முதலிய மேற்கொள்ளாமலே, செயற்கரிய செய்யும் பெருமை பெற்றுத் தமது வாய்மொழியே மறை மொழிகியப் பயன் தந்து நிற்கும் உயர்நிலையடைவர் என்பதாம்; மழை ஒன்றே பொழியும் என்பதன்று; இவர்கள் வாய்மொழி மறை மொழி காட்டிவிடும்' என்பதே கருத்து. 'மழை பெய்தல்' ஓர் எடுத்துக் காட்டாகப் பொருளை விளக்க வந்தது. 'தெய்வந் தொழா அள்' என்பது 'துறவியர் மேற்கொள்ளும் நோன்பென்பது ஒன்றும் செய்ய வேண்டியதில்லை' என்பதைக் குறிக்கின்றது. கடவுள் வழிபாட்டை மறுத்துரை ஆடுகின்ற தன்று. பெண்கள் பெருமையை எடுத்துக் கூறவே, இங்ஙனம் ஓதுகின்றதாதல் வேண்டும்.

**காலில் விழுவதா?**

இவ்வுயர் நிலையடைவதற்குப் பெண்கள் செய்யவெண்டுவது தான் என்னே? அதனைக் 'கொழுநற் றொழுதெழுவாள்' என்பதால்

விளக்குகின்றார் வள்ளுவர். அதற்குக் 'கொழுநனை மண்டியிட்டுப் பன்முறை வணங்குவது' எனப் பொருள் கொண்டு பெண்களை அடிமை எனப் பேசுவார் பலர். பாட்டிலே நயங்கருதிப் புனைந்திருப் பனவற்றிற்கு இருந்தவாறே பொருள் கொண்டு இடர்ப்படுவாரில் இவர்களும் ஒருவகையார். முத்தே பல் என்பதுகேட்டுப் பிறனொரு வனது பல்லினைத் தகர்த்து எடுத்துக்கோவை செய்து அணியப்புகுந் தவனது கதையே இவர்கள் கதையும் என்க. 'நோன்பு நோற்பாரும் அடைதலாகாத அருமைப்பயனை மண்டியிட்டு வணங்குவதாலேயே ஒருத்தி பெறுகின்றாள்' என்பது நம்பத்தகுந்தது அன்றாம். திருவள்ளு வர் இதனினும் உயர்ந்த நிலையினைக் குறித்தாராதல் வேண்டும். அன்றியும், தொழுவதென்பதனாலேயே, 'பெண்கள் அடிமைகள்' என முடிவுகட்டவேண்டுவதில்லை. நம்நாட்டுப் பெண்கள், தம்கணவன் மாரைவிட ஆண்டிற் சிறியராதலினாலும், சிறியர் பெரியாரை வழி படுவது நம் நாட்டு வழக்கமாதலினாலும், தொழுதல் என்றால் அன்பு பாராட்டல் என்றே பொருள் எண்க. பிறரை நினையாது மணாளனையே நினைந்துருகுகின்றாள் என்று கற்பின் உடன்பாட்டு நிலையைக் கூறு கின்றார்; பிறரை எண்ணுவதில்லை என்ற எதிர்மறை நிலையைக் குறிக் கின்றார் வள்ளுவர். அன்றியும் தொழுதல் எல்லா இடத்தும் அடி மையின் தொழில் ஆவதில்லை. ஆண்மகன் பெண்ணடி வீழ்ந்து பணிந்து புலவி நீக்க முயல்வதைத் திருவள்ளுவரும் பரிமேலழகியாரும் காட்டுகின்றார்கள். இன்பத்துப் பாலில் காதலன் காதலிக்குப்பணி செய்தலைக் காண்கிறோம்.

'குதைவரிச் சிலை நுதற், கொவ்வை வாய்ச்சியர்
பதவுகைத் தொழில்கொடு பழிப்பி லாதன
ததைமலர்த் தாமரையன்ன தாளினு
லுதைபடச் சிவப்பான உரவுத் தோள்களே'

என்று கம்பன் கூறுகின்றதையும் காண்க. அதனால், ஆடவன் பெண்களுக்கு அடிமையாவதில்லை. அன்றியும் பகலெல்லாம் தன் வேலையில் கண்ணும் கருத்துமாய் உழைக்கிறான். புலவிநுணுக்கம் நாடோறும் நடத்தல் கூடுமெனப்புதுவழி ஒன்றினைத் திருவள்ளுவர் கண்டு பிடித்தமையால், அவளடியில் இரவெல்லாம் வீழ்ந்து வணங்கு கின்றான். பின் ஏதோ ஒருபொழுது மனைவி பணிந்தால் வரும் கேடென்னை? இரவு பணிந்ததை எண்ணிக் காலையில் எழுந்ததும் தலைவி பணிகின்றாள்போலும். இவை எல்லாம் உளறல் என விடுக்க.

**தொழுதல்**

தொழுவதென்றால் என்ன? நமக்கும் மேலானதொரு பொருளைக் கண்டபோது மனந்தாழ்ந்து அடங்கி அப்பொருளின் வழி நிற்பதே

தொழுகையாம். வணங்கப்படும் பொருள் உயர்ந்ததொரு நோக்க முடையதாதல் வேண்டும். குறியைக் குறியால் குறித்தறிந்து குறியாவதே வணக்கம். அதனை வணங்குவதாவது இடைவிடாது எண்ணி அதனை அடைய முயலுதல். மற்றைய தொழுகை எல்லாம் வெளி மயக்கும் உலக மயக்கமுமேயாகும். முடிந்த பொருளாகிய குறிப்பினை இடைவிடாதெண்ணி நினைந்திருத்தலையே திருள்ளுவரும் குறிக்கின்றார் என்பதனைப் பரிமேலழகியாரே மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றார். எழுதல் என்றால் உறங்கி விழித்தெழுதல் என்பது பொருள். உறங்கி எழுவதற்கு முன் எத்தொழிலும் செய்ய இயலாது. அங்ஙனமாகத் தொழுது பின் எழுதல் எங்ஙனங் கூடும்? கூடாது. ஆதலின், 'தொழுதெழுவாள்' என்பதற்குப் பரிமேலழகியார் 'தொழா நின்றெழுவாள்' எனப் பொருள் கொள்கின்றார். தொழுதுகொண்டெழுதலும் இயலாதென்று பரிமேலழகியாரை மறுப்பாரும் உள்ளனர். பிரயோக விவேக நூலுடையார், திங்ஙப்படலத்தில் 5-ம்பாட்டினுரையில்' 'கொழுநற்றொழுதெழுவாள் என்புழி எழுந்து தொழுவாள் என முன்பின்னாகப் பிறந்தது; வடநூலாரும் வாய் பிளந்து உறங்கினான், குறட்டைவிட்டு உறங்கினான் எனவும், கொடுத்து இருந்தான் எனவும்; காட்டுவர்... இனிக் 'கொழுநற்றொழுதெழு', 'தொழுதெழுவார் வினைவள நீறெழ' என்னும் திருவள்ளுவரினும் திருக்கோவையாரினும் பரிமேலழகியாரும் பேராசிரியரும் 'தொழாநின் றெழுவார்' எனத் துணைவினையாய் உரைப்பர். எழுதல் துயிலொழிதலாகலின் எழுந்து தொழுவாளென முன்பின்னாகப் பொருள்படுதலின்றி நகுபுவந்தான், ஓடிவந்தான் என்பன போலத் தொழா நின்று துயிலொழிதல் கூடாதென்க.

> 'வைகறை யாமந் துயிலெழுந்து தான் செய்யு
> நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
> றந்தையும் தாயுந் தொழுதெழுக'

என்பது 'துயிலொழிந்து பின் தந்தையுந்தாயுந் தொழுது பின் காரியத்திற் செல்க' எனப் பொருள்பட்டு வருதலானும் அவருரை அசம்பாவிதம் என்க' என்று மறுத்துரை யாடுகின்றார், பரிமேலழகியார்.

''தெய்வந் தொழுதற்கு மனந்தெளிந்து துயிலெழுங்காலத்து ஆதலின் தொழுதெழுவார் என்கிறார்'' எனக் குறிப்புரை கூறுகின்றார் பேராசிரியர்.

''தொழுதெழுவார் என்றது துயிலெழுங்காலத்து அல்லது முன்னுணர்வு இன்மையின் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார்'' எனக் குறிப்புரை கூறுகின்றார். இவ்விரு குறிப்பின் உண்மையைப் பொருட்படுத்தாத பிரயோக விவேக நூலாரது கூற்றிற்கு மறுப்புரையாகத் ''துயில் கூடும் காலத்து எந்த நினைவு (ஸ்மிருதி) உள்ளத்தில்

(அந்தக்கரணத்தில்) சம்ஸ்காரமா (வாசனையா) கின்றதோ, அந்த ஸ்மிருதி விழிக்குங் காலத்துச் சம்ஸ்காரவாயிலாக அவ் விழித்தலே முன்னாகக் கொண்டு வெளிப்பட்டு முன் பின் என்பதன்றி நிகழுதல் பிரசித்தமாயிருத்தலின் 'தொழு தெழுவாள்' என்பதற்கும் பரிமேலழகியார் அநுபவ முதிர்ச்சி காரணமாகத் தொழாநின்று துயிலெழுவாள் என்று கூறியதை மறுத்துக் கூறியது அசம்பாவிதமாம்' என்று பரிமேலழகியாரின் உரையமைதி கூறுகின்றார். அதனை நன்குணர்ந்த உயர்திரு. வடிவேலுச் செட்டியார் அவர்கள் ''பிரயோக விவேக நூலுடையார்; 'தொழுது' என்பதற்கு உடம்பினைக் கொண்டு வணங்குவதென்ற புறத்தியல்பையே பொருளாகக் கொள்கின்றார் ஆதலின், இவ்வாறு பரிமேலழகியார் உரையைப் பிறழ உணர்கின்றார். திருவள்ளுவனார் புறத்தியல்பைக் கூறவில்லை என்பது பேராசிரியார் உரை நூணுக்கத்தால் புலனாகின்றது. நினைப்புள்ள போதெல்லாம் உயரிய பொருளை நினைந்து அதன்வழி நிற்றலாகிய ஒரு பெருந்தவமே இங்குக் குறிக்கப்படுகின்ற தாகலின், பரிமேலழகியார் உரையே பொருத்தமுடைய தென்க'' என்கிறார்.

ஒரு தவம்

தொழுகையும் அழுகையும் இங்கில்லை என்றால் இங்குப் பேசப்படுவது தான் என்ன? கொழுநன் என்றால் கொழு கொம்பாய் உள்ளவன்; பெண்ணியல்புக்கு ஓர் இயற்கைச் சார்பான ஆணியல்பினை உடையவன் என்றபடி. கொழுநனடியில் வீழ்ந்து வணங்குவதொன்றோ இங்குக் குறிக்கப்படவில்லை 'என்றால், எதனை எந்நாளும் எண்ணி இருத்தல் வேண்டும்? என்கின்றார் வள்ளுவர். கொழுநன், தனது சார்பாய் அமைந்தவன் ஆதலின் உலகில், அவள் மிக விரும்பும் பொருள் அவளேயாகும். அவனது உடலினை எண்ணி நிற்றல் வேண்டும் என்பது உண்மை அறியாதார் உரையாகும். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான மகளிர், தம் அன்புக்கண்ணால் காண்பன தம்மொழுக்கமும் மக்களின் ஒழுக்கமே ஆகும். எனவே கொழுநன் என்பது வெற்றுடலைக் குறியாது அளவறிந்த அன்பின் பிழம்பையும் இன்ப ஊற்றையும், இல்லறமான குணப்பெருங்குன்றையும் குறிக்கும் என்க. கட்புலனாகாக் கடவுளைக் காட்டும் சட்டம் போன்று கொழுநன் எந்நாளும் இல்லறத்தைக் குறித்து நிற்கின்றான். அவன் வாயிலாக இல்லற ஒழுக்கத்தின் உயர் நிலையை நினைந்திருந்து அவன் பொருட்டுத் தான் ஆற்றினொழுகி, அவனை ஆற்றின் ஒழுக்குகின்றாள்; அவனுக்கு அன்பு பூண்டொழுகும் வகையில் அவ்வில்லற வடிவமாக இவள் மாறிவிட முயல்கின்றாள். இவள் ஏன் மணந்தாள்? இல்லற ஒழுக்கத்தின் முடிவு காணவேயன்றோ? அம் முடிவு காணத்துணையாகி

நிற்பவன் கொழுநன் ஆதலின், கொழுநனின் நினைவு இல்லறத்தின் நினைவு ஆகின்றது. இதனால் கூறப்பட்டது யாதெனின், மனைவி, தானும் தன்மக்களும் மணாளனும் சிறப்பெய்த வேண்டி, எந்நாளும் இல்லறத்தின் உயர்நிலையை மனத்தில் எண்ணியவளாய், இல்லறத்தின் உயர்நிலையாய அன்பினை ஒரிமைப் பொழுதும் மறக்காதவளாய் வாழவேண்டும் என்பதேயாம். 'சோர்விலாள்' என்ற தன் விரிவுரையே இக்குறளாகும். மொழியும் செயலும் மனத்தின் வழியனவாதலின் இவ்வாறு இல்லறத்தின் உயர் நிலையினை இடைவிடாதெண்ணி அன்பு பூண்டொழுகும்போது இவள் இல்லறமேயாகின்றாள்; அன்புவடிவமே யாகின்றாள். அந்நிலையில் அவள் உணர்வின்றிச் செய்வனவும் அன்பொடு புணர்ந்த அற ஒழுக்கமாகின்றன. அஃது ஒருசிறந்த தவமாதலின், இத்தவம் செய்த பெண்களும் வேண்டிய வேண்டியாங்கு எய்துகின்றனர். இவர்களது வாய் மொழியும் மறைமொழியாகப் பயன் தந்துவிடுகின்றது. இக் கருத்தினுயர்வினை அறியாதார், மண்டியிட்டு வணங்குவதொன்றாலேயே, மழைபெய்விக்கும் வன்மை வரும் எனக்கணக் காண்பர்.

### துறவு

இதுநிற்க. திருவள்ளுவனார் ஆண்மக்களுக்குப் புறத்துறவு இன்றியமையாதது அன்று எனக் குறிப்பாகக் காட்டுகின்றது போலப் பெண்மக்களுக்கும் புறத்துறவு வேண்டா என இக் குறள் வழியாகக் கூறுகின்றார். கொழுநனோடிருந்தே நீத்தாராய்த் துறவுநிலைபெற்று, மெய்யுணர்ந்து, மறைமொழி காட்டு நிறைமொழி மாந்தரது செயற்கரிய செய்யும் பெருமையை அடையலாம் என்றன்றோ இத்திருக்குறள் கூறுகின்றது? இதனால், பெண்களும் மெய்யுணர்வு பெற்ற நீத்தாரது நிலையை அடைதல் கூடுமாயின் இப்பிறவியிலேயே அவர்கள் வீடுபெறற்குரியார் என்பதும் திருவள்ளுவர் கொள்கை என்க.

### முடிவு

இவ்வளவும் கூறியமையால், பெண் தன் கணவன் வாழும் அளவும் எவ் வகையிலும் அவனுக்கு எத் துறையிலும் எந் நிலையிலும் துணையாகி அவ்வவ் வொழுக்கத்தில் எல்லா உரிமையும் பெற்று வாழ்வாளென்பது பொருளைச் செலவு செய்வாள் இவளேயாதலின் உண்மையில் இல்லற ஒழுக்கம் நடத்துவாள் இவளே என்பதும், இவள் அவ்வொழுக்கத்தில் சோர்விலாதிருப்பின் நீத்தார் பெருமையும் வீட்டின்பமும் பெறுவாள் என்பதும், பெண்களது உடலழகினை இறைவனுருவென வழிபடாது இணைவிழைச்சு ஒன்றே கருதி நயத்தலும் அறம் பொருள் கருதாது விழைந்து அஞ்சி ஏவல்புரிதலும் பழிக்கத்

தக்கன என்பதும் பெண்களது மனைமாட்சியே போற்றத்தக்கது என்பதும் நன்கு விளங்குகின்றன.

# 6. அடிமையா? வாழ்க்கைத்துணையா?

—O—

## பொருட்பால்

—O—

**அறிவியலே அரசியல்**

பொது

பொருளில் பெண்களுக்கு என்ன உரிமையுண்டு? வாழ்க்கையைத் துணைஎன்று கூறுகின்றமையால் பொருள் நிலையிலும் பெண்கள் துணையாதல் பெறப்படும். பொருட்பாலில், ஆண், பெண் என்ற வேற்றுமை பாராட்டாமலே திருவள்ளுவர் பொருளின் இயலைக் கூறிப் போகின்றார். ஆண்மேல் வைத்துக் கூறுகின்றார் என்றாலும் பெண்பாலார்க்கும் அவை ஒக்கும் என்பது வெள்ளிடை. கல்வி, கேள்வி, அறிவுடைமை, புல்லறிவாண்மை, பேதைமை முதலியவற்றைப் பற்றிக் கூறுகின்றவை பெண்பாலார்க்கும் வேண்டியவையே அன்றோ? நட்பினைப் பற்றிப் பல தலைப்பின்கீழ்க் கூறுகின்ற கொள்கைகள் அவர்களுக்கும் ஏற்றவை யாகும். கள்ளுண்ணாமை, சூது, மருந்து முதலியனவும் ஒழிபியல் கூறுகின்ற குடிமை, மானம், பெருமை, சால்பு பண்பு, நாண் குடிசெயல் வகை என்பனவும், இரவச்சம், நன்றியியல் கயமை என்பனவும் பெண்மக்களுக்கும் ஒத்தன வற்றையே எடுத்துக்கூறும் தலைப்புக்களாகும். அங்கயற் கண்ணி முதலான பல தமிழரசியர் வாழ்ந்திருத்தலின், அரசியலிலும் அமைச்சியலிலும் பெண்களுக்கும் உரிமையுண்டு எனலாம். ஒற்றராகவும் பல பெண்கள் திகழ்ந்தனர் என்பதைச் சாணக்கியரது பொருணூலில் காண்கின்றோம். தூதுவராகவும் பெண்கள் விளங்கியதைப் புறநானூற்றின் நின்றும் அறிகின்றோம். அதியமான் அஞ்சி என்ற குறுநில மன்னன், அவ்வைப் பிராட்டியாரைத் தொண்டைமான் என்ற குறுநில மன்னனிடம் அனுப்புகின்றான். அவ்வையார் அங்குச் சென்றபொது தொண்டைமான், தன் பெருமையை விளக்க, அம்மையாரைத்தன் படைக்கலக் கொட்டிலுக்கு அழைத்துச் செல்கின்றான். அக் கொட்டிலைப் பார்த்த அவ்வையார் என்ன சொல்வார்? அதியமான் படைக்கலத்தினும் அவை உயர்ந்தன

என்பதா? தாழ்ந்தன என்பதா? உயர்ந்தன என்றால் தம்மை அனுப்பிய அதியமானைக் காட்டிக் கொடுத்துத் தம்மையே விற்றவர் ஆவர். தாழ்ந்தன என்றால், விருந்தளிப்பானை இகழ்ந்து தூதுவர் செயலை மறந்தவர் ஆவர். இருதலைக் கொள்ளி எறும்புபோல் நின்ற அம்மையார் மிகஅழகாக அவ்விருதலையும் தப்பி உயரப் பறந்து பாட்டுலகில் புகுகின்றார். அதியமானின் படைக்கலங்கள் தொன்று தொட்டு ஓய்வின்றிப் போரில் பயின்று கொண்டே வருதலின் அழகுடையன அல்ல' என்று அதியமானின் படையின் பண்டைப் பெருமையையும் வாகை சூடும் புகழினையும் குறிப்பாகப் புகழ்ந்து, அக்குறிப்பு வெளிப்படையாகத் தோன்றாதபடி 'அவை அழகுடைய அல்ல' என்ற இகழ்ச்சிப் பொருள் வெளித்தோன்றப் பாடுகின்றார். தொண்டைமானின் படைக்கலமோ, வேண்டிய தகுதி எல்லாம் உடையனவாய்ப் புத்தம் புதியனவாய்ப் பொலிகின்றன' என்று அவற்றின் மிகுதியையும் புதுமையையும் பயனையும் புகழ்கின்றார். ஆனால், அப்புகழ்ச்சியினுள்ளேயே, 'போரில் பயன்படுவன என ஒரு தலையாகச் சொல்ல முடியாது' என்பதும், 'அடிப்பட்டமறவர் குடியிற் பழகின அல்ல' என்பதும் இகழ்ச்சிக் குறிப்புக்களாக மறைந்து நிற்கின்றன. இவ் விகழ்ச்சிக் குறிப்பும் புகழ்ச்சிக் குறிப்பும்ஒருதலையாகப் பொருள் கொள்ளத்தக்கன அல்ல. கவர்படு பொருளாகவே அவற்றையும் பாடுகின்றார்; 'இவன் படைக்கலங்கள் புதியவாய் இருத்தல் இவனைத் துணிந்து எதிர்ப்பார் ஒருவரும் இல்லாமையால்' என்று உய்த்துப் பொருள் கொள்ள இடமுள்ளபடியும் பாடுகின்றார்,

''இவ்வே,
பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே;
அவ்வே,
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ என்று
முண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணு
மில்லோ ரொக்கற் றலைவ
னண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே.''

திணை - பாடாண்டிணை, துறை - வாண்மங்கலம். அவன் (அதியமான்) தூதுவிட, தொண்டைமானுழைச் சென்ற அவ்வைக்கு அவன் படைக்கலக்கொட்டில் காட்ட அவர் பாடியது.

''இவைதாம் பீலி அணியப்பட்டு மாலை சூட்டப்பட்டு, உடலி

டந்திரண்ட வலிய காம்பு அழகுபடச் செய்யப்பட்டு, நெய்யிடப்பட்டுக் காவலையுடைய அகன்ற கோயிலிடத்தன. அவைதாம் பகைவரைக் குத்துதலாற் கங்கு நுனியு முறிந்து, கொல்லனது பணிக்களரியாகிய குறிய கொட்டிலிடத்தனவாயின. எந்நாளும், செல்வமுண்டாயின் உணவு கொடுத்து, இல்லையாயின் உள்ளதனைப் பலரோடுகூட உண்ணும் வறியோருடைய சுற்றத்திற்குத் தலைவனாகிய தலைமையை உடைய எம்வேந்தனுடைய கூரிய நுனியையுடைய வேல்'' என்பது பழைய உரை. இதனுள் தூதுரைப்பார்க்கு இன்றியமையாத வள்ளுவர் மூன்றெனக் கூறும் அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை என்றவற்றைக் காணலாம்.

'தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது,'
'கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாந் தூது,'
'கடனறிந்து காலங் கருதி இடனறிந்
தெண்ணி யுரைப்பான் தலை,'

என்ற குறள்களுக்கு அவ்வையார் பெரிய எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். அந் நாளைய பொருளியலில், அவையத்தாரே சிறந்து விளங்கினர். அவையத்தாரில் பெண்கள் அமர்ந்திருந்தனரோ என்று ஆராயும்போது தமிழ்க் கழகத்தாரது நினைவு வருகின்றது. தமிழாராய்ந்த தமிழ்க் கழகத்தார் நாற்பத்தொன்பதின்மரில் வெள்ளி வீதியார் போன்ற தமிழ்மாதரும் வீற்றிருந்தனர் என்பது திருவள்ளுவ மாலையில் நின்றும் வெளியாகின்றது. எனவே, அவையினைப் பற்றியும் சொல்வன்மையைப் பற்றியும் கூறுகின்றமை பெண்களுக்கும் அமையும் என்க. பெண்கள், படை எடுத்துச் சென்றாரோ எனின் அங்கயற்கண்ணி முதலானோர் படை எடுத்துச் சென்றமையைப் பழங் கதையில் ஓதுகின்றோம். அஃது அரியதொரு வழக்கமாகும். திருவள்ளுவனார், ஆண் பெண் என்ற இருவர்க்கும் ஒத்த உறுதிப்பாடுகளையே பொருட்பாலில் கூறுவதாலும், அக்காலத்து வழங்கிய கதைகளில் பெண்பாலாரும் பொருட்பாலில் கூறப்படும் உறுதிப்பாடுகளைக் கைக்கொண்டொழுகினதாலும், பொருளினும் பெண்களுக்கு எல்லா உரிமையும் உண்டெனப் பொதுவாகக் கூறலாம்.

## பண்டை மரபு

பொதுவாகவன்றிச் சிறப்பாகப் பொருட்பாலை ஊன்றிக் கற்கும்போது, திருவள்ளுவர், பெண்களைப்பற்றி வெளிப்படையாகக் கூறுவிடினும் பண்புடைய முறையில் கூறப்படும் பொருட்பாலைப்

புதுமுறையில் கூறுகின்றார் என்பது புலனாகின்றது. பெண்பாலாரும் உலக முன்னேற்றத்திற்காக ஒத்துழைக்கும் முறையில் திரித்து அவர் கூறுகின்றார். பண்டைநாளில் அரசர்க்கு இன்றியமை யாதவையாய் அமைந்தனவற்றைப்,

> படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
> உடையா னரசரு ளேறு'

என்ற குறளில் பழைய மரபின்படியே கூறுகின்றார். பொருட்பாலை அம்முறைபற்றியே அவர் பாகுபாடு செய்கின்றனர் என்பது திருவள்ளுவ மாலையில் போக்கியார் பாடிய செய்யுளில் நின்றும் விளங்குகின்றது.

> *அரசிய லையைந் தமைச்சிய லீரைந்*
> *துருவல் லரணிரண் டொன்றொண்கூழ்--இருவியல்*
> திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
> றெண்பொரு ளேழா மிவை.''

ஈதே திருவள்ளுவர் காலத்து வழங்கிய முறையாகும். மணக்குடவர்,

இதனுள், இறைமாட்சி முதலாக இடுக்கணழியாமை யீறாகக் கூறிய அதிகாரம் 25-ம் பெரும்பான்மையும் அரசர்க்குரியவாதலின் அரசியல் என்றும், அமைச்சு முதலாக அவையஞ்சாமையீறாகக் கூறிய அதிகாரம் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்கு உரியவாதலின் அமைச்சியல் என்றும், நாடு முதலாகப் படைச் செருக்கு ஈறாகக் கூறிய அதிகாரம் ஐந்தும் பொருட்பகுதியாதலின் பொருளியல் என்றும், நட்பு முதலாகக் கூடா நட்பு ஈறாகக் கூறிய அதிகாரம் ஐந்தும் நட்பின் பகுதியாதலின் நட்பியல் என்றும், பேதமை முதலாக மருந்தீறாகக் கூறிய அதிகாரம் பன்னிரண்டும் கேட்டிற்குக் காரணமாதலின் துன்பவியல் என்றும், குடிமுதலாகக் கயமை யீறாகக் கூறிய அதிகாரம் பதின்மூன்றும் மக்களது இயல்பு கூறுதலின் குடியியல் என்றும், ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரம் எழுபது பகுதியாயிற்று'' என்று கூறுகின்றார். பரிமேலழகியாரோ, பொருட்பாலை அரசியல், அங்கஇயல் ஒழிபியல் என்று பாகுபாடு செய்கின்றார். திருவள்ளுவமாலை, திருவள்ளுவர் காலத்ததென வழங்கப்பட்டு வருகின்றமையால் அதில் கூறிய முறையே திருவள்ளுவர் வகுத்த முறை என எண்ண இடமுண்டு. 'திருவள்ளுவ மாலையில் அசரீரி பாடிய பாட்டும் காணப் படுவதால் நம்பத்தக்கதல்ல. அன்றியும், சீத்தலைச்சாத்தனார் என்பவர் சீத்தலை என்னும் ஊரிற் பிறந்தவராதல் பற்றிஅப்பெயர் பெற்றிருக்கத் 'தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு' எனவேறொரு பொருள் அப்பெயர்க்குக் கொள்கின்றது. நாற்பத்தொன்பதின்மர் புலவர்கள் ஒரு காலத்-

திருந்தவராயினும் ஒரே இடத்திருந்து பாடினூர்கள் என்பதற்கு அதிக இடமில்லை. அதிகார அடைவினைப் பரிமேலழகியாரோ, மணக்குடவரோ கூறவில்லை. ஆகையால் அந்நூலைப் பின்னுளில் வந்த ஒருவர் எழுதிவிட்டார், என்பர் ஒருசாரார். ஆனல், அசரீரியின் பாட்டுப்பின்வந்தாரது இடைச்செருகலாகலாம். சீத்தலையிற் பிறந்தசாத்தனுர் எழுத்தாணியால் தலையிற் குத்திக்கொண்டு சீத்தலைச்சாத்தனுராகவும் விளங்கி இருக்கலாம். வரலாற்று நூல்என்ருல்எந்தவரலாற்று நூலினைக் கூறுவது? தமிழ்க்கழகத்துப் புலவர் நாற்பத்தொன்பதின்மர் தமிழாராய்ந்தனர் என்ற கதை பண்டைநாள் தொடங்கி நமது தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றமையால் அதுமுழுவதும் பொய்யாகப் போகவேண்டுவதில்லை; ஒரு பழைய மரபு அல்லது நம்பிக்கை எனக் கொள்ளலாம். பரிமேலழகியார் இவ் வதிகார அடைவைக் குறிக்கவில்லை என்னின், மணக்குடவர் கூறுகின்ற அதிகார அடைவையும் கூறவில்லை ஆதலின், மணக்குடவர் கூறுகின்ற அடைவு பின்வந்தவர் எழுதிய தென்போமா? ஐயம் தெளியாமல் போயினும், திருவள்ளுவமாலையை இன்றைய நூல் எனக் கூறுவதற்கில்லை. எனவே, திருவள்ளுவமாலையில் கூறிய பல தலைப்புக்களின் முறையமைப்பானது பண்டை நாளில் வழங்கியது ஒன்ருகும்.

### படையியலும் அறிவியலும்

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்று பண்டையோர் முறை செய்தனர். அமைதி இல்லாத அக்காலத்தில், அரசியல் அனைத்தும் படையியலாக நின்றது. ஆனல், திருவள்ளுவர் எம் முறையில் அரசியலை அமைத்துள்ளார்? படை முதலிய எல்லாம் குடிகளாகிய பொது மக்களின் பொருட்டேஎழுந்தன என்பதை விளக்கிக் குடிகளே பொருட்பாலின் முடிவு என்பதைக் காட்டக் குடியியலை இறுதியில் அவர் கூறுகின்ருர். படையும் அரணும், கூழும் (பொருள்) பண்டை நாளில் பாராட்டப்பட்டன. ஆனல், அவற்றைக் கொண்டு நாட்டை ஆள்வது மக்களாட்சி யன்று; விலங்கினுட்சியே ஆகும். உடல் வன்மை கொண்டு ஆள்வதில் உயிர் வன்மை ஒன்றும் இல்லை. அன்றியும் திருவள்ளுவமாலை கூறும் அறிவுவன்மை கொண்டு ஆள்வதே மேலெனும் கொள்கையினர் ஆதலின், படை, அரண், கூழ் என்றவற்றை வள்ளுவர் சிறப்பித்துக் கூறவில்லை; தமது பொருட்பாலில் அவற்றிற்கு முதனிலை கொடுத்து ஓதவில்லை. எனினும், உலகம் அறிவுலகமாகவும் அன்புலகமாகவும் மாறிவிடவில்லை. ஆதலின், பகைவர்மேல் அடர்ந்தெழுந்தால், அவர்களை அடக்கவேணும் படையும், அரணும், கூழும் வேண்டுமன்ருே? அதுபற்றி அவற்றையும் அவர் எடுத்தோதுகின்ருர். ஆனல் மற்றையவற்றைப் பலபடப் புனைந்துரைத்து வற்புறுத்துவது போலப்

படை முதலியவற்றை அவர் வற்புறுத்துகின்றார் இல்லை. அரசியலை இருபத்தைந்து தலைப்பின் கீழும், அமைச்சியலைப் பத்துத் தலைப்பின் கீழும், நட்பினைப் பதினேழு தலைப்பின்கீழும், குடியினைப் பதின்மூன்று தலைப்பின்கீழும் அவர் ஆராய்கின்றார்; அரணை இரண்டு தலைப்பின் கீழும், கூழினை ஒரு தலைப்பின்கீழும், படையை இரண்டு தலைப்பின் கீழுந்தான் ஆராய்கின்றார்.

**வள்ளுவரின் புதுமுறை**

**படை, அரண், கூழ்**

திருவள்ளுவர், அன்பு வழியாக, மக்களுக்கு அறிவு கொளுத்தி அவர்களுடைய உடன்பாட்டோடும் நாட்டை ஆள்வதனையே உயர்த்திக் கூறுகின்றார். படையே துணையாக ஆளும் ஆட்சியில், பெண்களுக்கு இடம் இல்லை. அறமும், அறிவும், அன்பும் துணையாக ஆளும் ஆட்சியில் பெண்களுக்கு அன்றி வேறெவர்க்குச் சிறப்பான உரிமையுண்டு? திருவள்ளுவர் கூறுகின்ற அரசியலும் அன்னதே என்க. பொருளினையும் அருள்வழியும் அன்பு வழியும் நின்றுதான் ஈட்டல் வேண்டும் என அவர் வற்புறுத்துகின்றார்.

> 'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
> புல்லார் புரள விடல்.'

அருளொடும் அன்பொடும் ஈட்டிய பொருளை, அருளையும் அன்பையும் வளர்க்கவே சேர்த்தல் வேண்டுமாம்.

> ''அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னும்
> செல்வச் செவிலியா லுண்டு.''

குடிகளை அன்பு வழியாலும் அறவழியாலும் அறிவு வழியாலுந்தான் ஆளுதல் வேண்டும். அச்சம் காட்டியும் அவாவினை ஊட்டியும் ஆண்டால் அவ் வரசியல் கல்லாதாரையும் கயவரையுந்தான் நல்வழிப் படுத்தும்; கற்றறிந்த பெரியார் அதனை வெறுப்பர் என்று கூறுகின்றார்.

> ''கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல்''

என்றும்,

> 'அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
> அவாவுண்டே லுண்டாஞ் சிறிது'

என்றும் கூறுகின்றமை காண்க. எனவே, கல்லாதாரும் கயவரும் அல்லாதாருக்கு அரசன், தான் செய்வதே நல்லதென அறிவு வாயிலாக எடுத்துக்காட்ட அவர்களும் அன்போடு அதனை உடன்பட, அந்நிலையில் அவர்களோடு ஒன்றி வாழ்வதே அரசியலாகும். இவ்வாறு அறிவு வழியாக எடுத்துக்காட்டி விளக்கிக் குடிகளை ஒருங்கு திரட்ட வேண்டும். அவ்வாறு திரட்டப்பட்ட குடிகளின் கூட்டமோ, அவர்கள் தேர்ந்தெடுத்த பெருமக்களின் கூட்டமோ அவை எனப் பெயர் பெறும்.

அவ் அவையினருக்கு நல்லதறிந்து நன்கெடுத்துரைக்க அரசனுக்குக் கல்வி கேள்வி வேண்டும்; அறிவும் வேண்டும்; சொல் வன்மையும் வேண்டும். எனவே அரசியல் என்பது படையியலாகாது அறிவியலாய போது, அவையியலாக முடிகின்றது. படையின் பெருமையினைக் குறைத்து, அறிவின் பெருமையைப் பெருக்கிய போது, அவ்விடத்தே பெண்களுக்கு இருக்க இடம் ஏற்படுகின்றது அன்றோ? அறிவும், கல்வி யும், கேள்வியும், சொல் வன்மையுமே சிறந்தன என்று கூறுகின்றார் திருவள்ளுவர். படை, அரண், கூழ் என்றவற்றை விரித்துக் கூறும் போது இந்த அன்பு வாழ்க்கையினையும் இந்த அறிவு வாழ்க்கையினை யும் மறக்கின்றார் இல்லை. அன்பும் அருளுமே வழியாகப் பொருளைத் தேடல் வேண்டும் என்று அவர் ஓதுகின்றமை கண்டோம். அரணை நாடு என்றும், அரண் என்றும் பிரித்து அவர் ஆராய்கின்றார். நாடு என்பது யாது? தக்காருடையதே நாடு என அவர் புனைந்துரைக்கின் றார். கல்லாரும் கயவரும் இல்லாத நாடே நாடு. அறிவுடையவர்கள் நிறைந்த நாடே நாடு. அதனைத்தான் அறிவாலும் அன்பாலும் ஆளுதல்கூடும். மேல், அவர் அரணைப் பற்றிக் கூறுகின்றபோதும்,

> 'எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
> யில்லார்க ணில்ல தரண்'

என்கிறார். இக்குறளின் உரையில் பரிமேலழகியார்,

''வாளாவிருத்தலும் அளவறியாது செய்தலும் ஏலாதது செய் தலும் எல்லாம் அடங்க, 'வினைமாட்சியில்லார்' என்றும் ஏற்றவினையை அளவறிந்து செய்து காவாக்கால் அம்மாட்சிகளாற் பயனின்றியழியும் என்பார்'இல்லார்கண்' என்றுங் கூறினார்'' என்று எழுதுகின்றார்.அறிவு மாட்சியாகிய வினைமாட்சி இல்லாதபோது அரண் எனை மாட்சித்தாயி னும் என்னை? அரசர்க்குச் சிறந்த அரணாவது அறிவேயாகும். அதனைப் பகைவர் கைக்கொள்ளுதல் யாண்டும் இல்லை என்று அறிவு அரண் ஒன்று கட்டுதலை அவர் வற்புறுத்துகின்றார்.

> 'அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
> முள்ளழிக்க லாகா வரண்,

என்பதை நோக்குக'

*அரசியல்*

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற பண்டை முறையே கூறினும், உடனேயே,

> 'அஞ்சாமை ஈகை அறிவூக்க மிந்நான்கும்
> எஞ்சாமை வேந்தற் கியல்பு'
> 'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
> நீங்கா நிலனாள் பவற்கு,'

என்று தம் கொள்கையை அவர் நிலை நாட்டுகின்றார். எனவே, கல்லாமையைக் கடிந்து, கல்வி கேள்விகளாற் சிறந்து, அறிவுடையனாகி, நல்லதும் கெட்டதும் பகுத்துணர்ந்து, ஊக்கத்துடன் குற்றங் கடிந்தொழுகும் ஈரநெஞ்சுள்ள மன்னவனே மன்னவன் என்பது தோன்றக் ''கல்வி'' ''கல்லாமை,'' ''அறிவுடைமை,'' ''குற்றங்கடிதல்'' என்ற தலைப்பின்கீழ்த் தொடக்கத்திலேயே அரசியலை அறிவியலாக அவர் ஆராய்கின்றார்; படைவலி கூறாது கல்வியும் அறிவுமே பெருவலியன எனக்கூறுகின்றார். அறிவென்பது, நல்லாரோடு சேர்ந்த போது நல்லறிவாய் விளங்கியும், கல்லாரோடும் கயவரோடும் கூடிய பொழுது தீயறிவாய் மழுங்கியும் வருவதொன்று.

'மனத்துளது போலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு'

ஆதலின், ''பெரியாரைத் துணைக்கொள்க' என்று உடன் பாட்டாலும் ''சிற்றினஞ் சேராதே'' என எதிர்மறையானும் கூறி, முடிவில் அறிவு வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாகப் பாடுகின்றார். பெரியார் ஆவார் யார்? அறனறிந்து மூத்த அறிவுடையோரே பெரியார், அவர் கேண்மையைத் திறனறிந்து தேர்ந்துகொளல் வேண்டும். மேற்சென்று அரசனது வினைமாட்சியை ஓதுகின்றவர், அச்செயல்களை அறிவோடு புணர்த்தியே ஓதுகின்றார். தெரிந்து செயல்வகை, வலி அறிதல், காலம் அறிதல், இடனறிதல், தெளிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், பொச்சாவாமை என்ற தலைப்புக்களில் தெரிதல், அறிதல் தெளிதல், பொச்சாவாமை எனவரும் சொற்களைக் காண்க. தாஅனுட்டித் தனுஅது நிறுத்தலாக இவ்வாறு அறிவினை வற்புறுத்துகின்றவர் செங்கோன்மை கூறுகின்றபோதும் அரசனிருப்பது குடிகளுக்காகவே ஆதலின், அவர்கள் மாட்டு அருள்செய்தல் வேண்டும் என வற்புறுத்துகின்றார்.

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
'கோனோக்கி வாழும் குடி'

அக் குடிகளை அவையிற் கூட்டித் தான் செய்வதே அறம் என்பதை அவர்களுக்கு அறிவுவழியாக எடுத்துக்காட்டி, அவர்களையும் தன்னுடன் ஒருங்கு சேர்த்தல் வேண்டும். ஈதே குடிதழுவிக் கோலோச்சுதலாகும்.

'குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு'

அவ் வரசன் தான் நினைத்தபடி தனக்கு வேண்டியவர்களுக்கு ஒரு வழியும், பிறருக்கு ஒருவழியுமாக, மனம்போன படி ஆளாது, நடுவு நிலைமையில் நின்று அறிவாராய்ச்சிவழியே ஆய்தல் வேண்டும்.

'ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்தி யார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை'

ஆதலின், படை வலியினால் மன்னவன் இறுமாந்து போகாது, இவ்வாறு அன்பும், அறனும் அருளும், அறிவும் துணையாக ஆளுதல் வேண்டும்.

'வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்'

மேல் எதிர்மறையால் இதனை அவர் வற்புறுத்துகின்றார். படைச் செருக்கால் உலகை வருத்துதலை இழித்துரைக்கப் புகுந்து, கொடுங் கோன்மை, வெருவந்த செய்யாமை என்ற இரண்டு தலைப்பின்கீழ் இதனை ஆராயப் புகுகின்றவர் அங்கும் அருளையே வற்புறுத்துகின்றார்.

'துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழு முயிர்க்கு.'

மேலே, வெருவந்த செய்யாமையில், ''கல்லார்ப் பிணிக்குங் கடுங் கோல்'' என அவர் உறுதி கூறுகின்றார். எனவே, கற்றவர்ப் பிணிப்பது அறிவும், அறமும், அன்புமே என்க.

'கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும்.'

ஆனால், குற்றம் செய்வாரை ஒறுத்தலானது பயிர்க்குக் களைகட்டலோடொக்கும். அங்கும், ''கடிதோச்சி மெல்ல எறிக'' என்கின்றார். அரசியல் அன்பியலுமாதலைச் சுற்றந்தழாஅல், கண்ணோட்டம் என்ற தலைப்பின்கீழ்க் காட்டுகின்றார். ஒற்றும் அவர் அறிவினைப் பெருக்கவே வேண்டற்பாலது. எல்லார்க்கு நிகழ்பவை எஞ்ஞான்றும் வல்லறிதல் வேந்தன் தொழிலாகும். எக்காலத்துல் ஒத்தியல் பொருளை நூலால் அறிகின்றோம்.

'ஒற்று முறைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.'

உலகம் உயர் நிலையாகிய அறிவு நிலையை எய்தவில்லையாதலால் ஒற்றும் கூறுகின்றார் வள்ளுவர். இப் பெரியார் உயர் நிலையை அறிந்திருந்து வற்புறுத்தினாலும் உலகநிலையை அறியாது கண்மூடித் தவங்கிடப்பர் அல்லர் உயர்நிலை ஒன்றே கூறி உலகநிலை கூறாதுவிட்டால் கயவரும், கல்லாரும், பகைவரும் எழுந்து உலகத்தை அழித்தே விடுவர். ஊக்கம், துணிவுடைமை, தூங்காமை என்று அரசனுக்குக் கூறிய பண்புகளை உடன்பாட்டானும் எதிர்மறையானும், ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை என்ற தலைப்பின்கீழ் அவர் ஓதுகின்றார். மீண்டும் உடலுரத்தால் ஆள்

வினையுடையாரைப் புகழ்கின்றாரில்லை; அறிவறிந்த ஆள்வினையுடைமையே சிறந்ததெனக் கொள்கின்றார்.

'பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.'

எனவே, படையாற் பொலிபவன் அரசனல்லன்; அறிவாற் பெரியவனே அரசன். போர்புரியும் ஆற்றல் இல்லாதவர்களும் பொருட்பாலில் இடம் பெற்று அரசியலை நடாத்த வேண்டிய அறிவையும் அருளையும் வற்புறுத்துகின்றார் திருவள்ளுவர். இப் பெரியார் கூறுகின்ற அரசியல் ஒருவனைப் பற்றியதே எனினும், அவருடைய கொள்கைகள், ஒருவனாட்சிக்கும், சிலராட்சிக்கும், பலராட்சிக்கும் பொருந்தும். குடியரசிலும் இக்கொள்கைகளே வேண்டப்படுவன.

**அமைச்சியல்**

மேலே, அமைச்சு என்பதைப்பற்றிக் கூறுகின்றார். அமைச்சர் ஆவார் யார்? ''அறனறிந் தான்றமைந்த சொல்லார்'', ''மதிநுட்பு நூலோடுடையார்'', ''சொல்லல் வல்லவர்'', என்று இவ்வகையால் அவர்களுடைய அறிவினையும் சொல்வன்மையையும் பாராட்டுகின்றார். அறவின்பால் இவர் வைத்த அழுத்தமான பற்றினை, ''அறிகொன் றறியான்'' என வரும் சொற்றொடர் விளக்குகின்றது. அமைச்சர் புகட்டும் அறிவு நிறைந்த சொற்களைக் கேளாத அரசனே அறிவினைக் கொல்கின்றான் என அவர் புனைந்துரைக்கின்றார். இதனாலும், திருவள்ளுவரது அரசியல் சிறப்பாக அறிவினால் ஆயதென்பது தெளிவாக வில்லையா? அறிவுடம்படுத்தி ஆள்வதே ஆட்சியாதலின், சொல்வன்மையும் அமைச்சுக்கு வேண்டியதே ஆகும். அமைச்சர் குழுவில் விளங்கும் அரசனிடத்தும், அவையத்தாரிடத்தும் சொல்வன்மையே பயன் தருவதென்றும். மன்னரைச் சேர்ந்தொழுகலையும், குறிப்பறிந் தொழுகலையும் அறியவேண்டுவதுபோல அவையறிதலையும் அவையஞ்சாமையையும், அமைச்சன் உணரவேண்டும். அறிஞரை ஒருங்குகூட்டி, அரசன் எண்ணிய நற்றொழிலை அவ்வறிஞர்களுக்கு விளக்கி, அவர்கள் கூறுகின்ற அறிவுரைகளைப் பயன்படுத்திக்கொண்டு அவற்றின் வழியே அத்தொழிலைச் சீர் திருத்தியமைத்துஅரசனறிவையும் குடிகளின் அறிவையும் உடம்படுத்தி ஆளும் ஆட்சியே, வள்ளுவர் கூறும் அரசியல் ஆகும். அவையத்திற்கு வள்ளுவர் கொடுத்த பெருமைபோல வேறெவரும் கொடுக்கவில்லை. மக்களைப் பெற்றோர் எல்லாம், தம் பிள்ளையை அவையத்து முந்தியிருக்கச் செய்ய வேண்டுமென்கிறார் அவர். தாயோ தன்மகன் அவையத்திற் சான்றோனெனக் கேட்டு மகிழ்க என்கிறார். அவையத்தின் பெருமையை வற்புறுத்துவதால் அன்றோ அரசியல் அறிவியலாகின்றது; குடியரசாகின்றது.

பின்னர் வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல் வகை என்ற இவற்றைக் கூறுகின்றவர், வினையினை அறிவால் ஆராய்ந்து பார்த்துச் செய்தல் வேண்டும் என வற்புறுத்துகின்றார். "சூழ்ச்சி முடிவே துணி வெய்தல்' என்றும் "நோக்கிச் செய்தல்" என்றும், "பார்த்துச்செயல்" என்றும் பன்முறையும் அவர் கூறுகின்றார். தன்னுடைய விருப்பு வெறுப்பிற்கு அடிமையாகி வினைசெய்தல், அரசியலும் அமைச்சியலும் அன்று. குடிகளைக் காத்தலே அரசியலாதலின், அம் மக்களின் நன்மை ஒன்றே கருதி எடுத்த வேலையில் வெற்றி வரும் வழியை அறிந்து, நாட்டிலுள்ளார் தீமை எய்தாதபடி வினை செய்தல் வேண்டும். தூதும் வேண்டு மன்றோ? தூதுக்கு அன்பும் அறிவும் ஆராய்ந்த சொல்வன் மையுமே இன்றியமையாதன.

'அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.'

நூலோருள் நூல் வல்லனாகுதல் தூதுவன் பண்பு. கற்றுக் கண்ணஞ் சானாய்க் கடனறிந்து, காலம் கருதி, இடனறிந்து 'எண்ணியுரைத்து' இறுதிபயப்பினும் எஞ்சாதிறைவற்கு உறுதி பயத்தலே அவன் தொழில். விடுமாற்றம் வேந்தர்க்கு உரைக்கையில், வடுமாற்றம் வாய் சோராதவனாய்த் தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி நன்றி பயக்கும் சொல்வன்மையுடையனாதலே அத்தொழில் செய்யும் முறையாம். தூய்மை, துணைமை, துணிவுடைமை, வாய்மை, அன்பு டைமை ஆன்ற குடிப்பிறத்தல், வேந்தவாப் பண்புடைமை என்ற இவற்றால் சிறந்தோனாய் விளங்குபவனே தூதாதற்கு உரியான். இவ் வுயர்நிலையைக் கூறுகின்றவர் உலக நிலையை மறக்கவில்லை. இப்போ திருக்கின்ற நிலையில் உருவத்தையே பெரிதும் நோக்கி உலகம் அதற்கு அடிமையாகின்றது. ஆகலின்,

'அறிவுரு வாராய்ந்த கல்வி இம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு'

என அவர்களுக்குத்தான் வழி விடுகின்றார்.

**நட்பியல்**

மேலே, நட்பியலில், "யாரை நட்பினராகக் கொள்ளுதல் வேண் டும்?" "யாரை நட்பினராகக் கொள்ளுதல் கூடாது?" "யாரைப் பகைக்கலாம்? யாரைப் பகைத்தல் கூடாது?" என்பனவற்றை அவர் ஆராய்ந்து கூறுகின்றார்; நட்பு என்ற தலைப்பின்கீழ், "அறிவுடைய நீரவர் கேண்மையே வேண்டுவது" என்றும், "அறிவின் பொருத் தமே நட்பு" என்றும் விளக்கிக் காட்டுகின்றார்.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.'
'நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.'

அறிவுப் பொருத்தமும் உள்ளப் பொருத்தமுமே நட்பு. ஆதலின்,

'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பதே நட்பு'

நட்பாராய்தல் என்ற தலைப்பின்கீழ், அறிவில்லாத பேதையரை நட்டலைவிடப் பெருங்கேடில்லை என்றும், அந்த நட்பை விடுதலினும் ஆக்கம் பிறிதொன்றில்லை என்றும் அவர் கூறுகின்றார்.

'ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.'

பழைமை, தீ நட்பு, கூடா நட்பு என்பனவற்றிலும் இவ்வாறே அறிவினை வற்புறுத்திக் கூறியபின், பேதைமை, புல்லறிவாண்மை என்பன வற்றை ஓதி, அறிவின்மையை அவர் இகழ்கின்றார். பேதைமையாவது யாது?

'ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.'

புல்லறிவாண்மை என்ற தலைப்பின்கீழ் அறிவின்மையே இன்மையு ளின்மை'' என்கின்றார்.

''ஏவவுஞ் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர் நோய்.''

என் இத்தகையாரையே அவர் பழிக்கின்றார்; பின்னர், நட்பியலை எதிர்மறையான் ஆராயத்தொடங்கி, இகழ், பகைமாட்சி, பகைத் திறந்தெரிதல், உட்பகை என்று வகை செய்கின்றார். அஞ்சாமை ஈகை, அறிவு, ஊக்கம் என்ற பண்புகள் உடையவனே அரசன் என அரசியலின் தொடக்கத்தில் அவர் கூறுகின்றார் அன்றோ? அதன் மறு தலையை இங்குக் கூறி அறிவு முதலிய இல்லாதவனே, பகைவரால் எளிதில் அழிக்கப்படுவான் என அவர் எடுத்துக் காட்டுகின்றார். அர சியலில் உடன்பாட்டால் வற்புறுத்திய கொள்கையையே இங்கு எதிர் மறையால் அவர் வற்புறுத்துகின்றார்.

'அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு,'

என வருதல் காண்க. ''அறிவிலாதானையும், கல்லாதானையும் எளி தில் வெல்லலாம்; அவ்வாறு எளிதில் வெல்லக் கூடியவனை வெல்லா திருக்கும் அரசனின் புகழும் புகழோ? என அழகுபடக் கூறித் தங் கொள்கைக்கு ஏற்ப அறிவினை அவர் வற்புறுத்துகின்றார்.

'அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்த லரிது''

என்று புல்லறிவாண்மையிற் கூறுகின்றதோடு,

''கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா துலகு''

என்று கூறுகின்றதனையும் ஒன்றுசேர்த்து ஓதல்வேண்டும். ஈகை வடிவாய அன்பினையும், கல்வி வடிவாய அறிவினையும் இவ்வாறு புகழ்தல்போலச் சொல்வன்மையை ஈண்டும் புகழ் என்றார். படையிற் சிறந்த வில்லேருழவரைப் பகைத்தாலும் பகைக்கலாம்; அவையத்தாரையும் உலகத்தினரையும் தம் வழியே திருப்பிக்கொள்ளும் சொல்லேருழவர் பகை எந்நாளும் வேண்டற்பாற் றன்று என்று அவர் கூறுகின்றார்.

''வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.''

எனவே, திருவள்ளுவர் கொள்கையின்படி, வில்லேருழவரது படையினும் சொல்லேருழவரது அறிவே அரசியலுக்கு வேண்டுவது என்பதாயிற்று; பெரியாரைப் பிழையாமை என்பதிலும் அறிவுடையாரது பகை வேண்டற்பாலதன்று எனவே அறிவுறுத்துகின்றார்.

''ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.''

வேந்தனையும் பெரியோரையும் வேறு பிரித்த நுண்மை பாராட்டத்தக்கது.

**துன்பவியல்**

பெண்வழிச் சேறல், வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது, மருந்து என்ற தலைப்பின்கீழ்ப் பெண்மை விழைந்தேவல் செய்தலையும், பொருட் பொருளார் பொய்ம்மை முயக்கையும், கள்ளையும் சூதையும், மீதூண் விரும்பலையும் வள்ளுவர் பழிக்கின்றார். அவை அறிவை அழித்து விடுகின்றன என்றும், அவை அறிவுடையார் செய்கை அல்ல என்றும் காட்டி அவர் பழிக்கின்றார்.

'எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்''

எனப் பெண்வழிச் சேறலையும்,

'ஆயுமறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு,''
'பொதுநலத்தார் புன்னலந்தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்,''

"பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொரு
ளாயுமறிவி னவர்"

என்று வரைவின் மகளிரையும்,

"களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்,
"கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்"

எனக் கள்ளுண்டலையும்,

'உடைசெல்வ மூண்ஒளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்'

எனச் சூதினையும், அறிவின்மேல் வைத்தே அவர் பழித்துக் கூறு கின்றார்.

உடன்கட்டையேறல்

மேலே, சாவை நோக்கித் தவங் கிடப்பாரை அவர் குறிப்பாக இகழ்கின்றார். உடம்பு பெற்றது சாதற்கு அன்று ஆதலின், நெடிது நாள் வாழ்ந்து அறம், பொருள், இன்பம், வீடு அடைய வேண்டும் என அவர் அறிவுறுத்துகிறார்.

'அற்றா லளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு'

எனல் காண்க. உறுதிப் பொருள்களைப்பெற நோயின்றி வாழவேண்டு மாயின், மீதூண் விரும்பாது மருந்து நூல் கற்றறிய வேண்டும் என்றார் அவர்.

'உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல்'

என இங்கும் கல்வியையே அவர் குறிக்கின்றார். பிறர் வற்புறுத்தலால் உடன்கட்டையேறுதல் போன்றவற்றை நெடிதுய்க்குமாறு கூறும் திருவள்ளுவர் பழிப்பர் எனச் சொல்லவும் வேண்டுமோ?

குடியியல்

மேலே, குடியியலில் நல்குரவு, இரவு, இரவச்சம், நன்றியில் செல்வம், குடி செயல்வகை, உழவு என்ற தலைப்பின்கீழ்ப் பொருளின் இன்றியமையாமையையும், பொருள் வந்தபோது இரவலரைக் காக்க வேண்டுதலையும், பொருளைத் தேடி உழவு முதலியனவற்றில் உழைக்க வேண்டுவதனையும் அவர் வற்புறுத்துகின்றார்; குடிகள் அனைவரும் கல்வி கேள்வி உடையவராய், அற ஒழுக்கம் பூண்ட சான்றோராய்த் திகழ்தல் வேண்டும் எனவும் வற்புறுத்துகின்றார். உலகினர் அனைவரும் அவையத்தில் வீற்றிருக்கத் தக்க சான்றோராயபோது தான் அவர் கூறும் அறிவியலான அரசியல் நிலைபெறும். அவ் வரசியல்

நடத்தும் அறிஞர்க்கு அரசனும், தன்படையை ஒழித்து வாழ்தல் கூடும், எனவே, குடி, மானம், பெருமை, சான்ருண்மை, பண்புடைமை, நாணுடைமை என்று உடன்பாட்டு முகத்தால் அறமும், அறிவும், அன்பும், உடைய குடிகளையே அவர் புகழ்கின்ருர்; பின்னர், எதிர் மறை முகத்தால் கயவரை இகழ்கின்ருர். அவர்களன்ருே அறிவுவழி ஒழுகாது அச்சத்தின் வழியும் அவாவின் வழியும் ஒழுகிப்படைக்கும் வில்லேருழவர்க்கும் பிழைப்புத் தேடிவைத்துத் திருவள்ளுவர் புனைந்துரைக்கும் அறிவியலாகிய அரசியலை அழிப்பவர்கள்?

''அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டே லுண்டாம் சிறிது''

என்ற குறளைப் பன்முறையும் ஓதிஞேம் அன்ருே? எனவே அறத்துப் பாலில் அன்பினை அடிப்படையாக அமைத்தது போலப் பொருட்பாலில் அறிவினை அடிப்படையாக அமைக்கின்ருர் வள்ளுவர். முன் உயிர்க்குயிராய் இருந்த படையினையும் படைக்கலத்தையும் அவர் வெறும் அணிகல மாக்கிவிடுகின்ருர்.

முடிவு

படை, அரண், கூழ் என்றவற்றை ஆராயும்போதும் அறிவு பெரும்படை என்றும், அறிவே பேரரண் என்றும், அறிவே பெரும் பொருள் என்றும் அவர் நிலைநாட்டுகின்ருர். அரசனுக்கும் அமைச்சருக்கும் நட்பினருக்கும், குடிகளுக்கும் அறிவே சிறந்த பொருள் எனப் பலவகையாலும் தாம் ஆராய்ந்து கட்டிய முடிவினைப் பலபடப் புனைந்துரைத்து வற்புறுத்துகின்ருர் வள்ளுவனுர்! உடல்வளம் கொண்டு உலகை ஆளும் போது, பெண்கள் போர் புரிய வருவதில்லை யாதலின், அவர்கள் பொருளியலில் கலந்து நின்று உதவ இடமில்லாமற் போய் விடும். அரசியலைத் திருவள்ளுவர் திருத்தி யமைத்ததுபோல அன்போடும், அறத்தோடும் விளங்கும் அறிவியலாக அதனை மாற்றியமைத்தால், பெண்களுக்கும் அங்கு இடமுண்டு அன்ருே? ஆனுல் இருபது நூற்ருண்டுகட்கு முன்னரே கூறிய அவ்வறிவியல், இன்றேனும் இவ்வுலகில் வந்துளதா? என்று வருமோ? இறைவனே அறிவான்!

## 7. பெண் பிறவி இழி பிறவியா !

பெண் குழவி

மேலே நாம் ஆராய நிற்பது, பெண் பிறவியே இழி பிறவி என்று சொள்வார் கொள்கை ஒன்றைப் பற்றியே யாகும். இதுவரையிலும் உயர்ந்த நிலையில் வைத்துப் பெண்களைப் புனைந்துரைக்கின்ற திருவள்ளுவர், பெண்களின் பிறவியை இழிந்தபிறவி என எந்த வாயால் கூறுவார் ஒரு சிலர், வள்ளுவர் ஆண் குழவியைத்தான் குழவி

என்று கருதினர், பெண் குழவியை, அந்தோ! குழவியாகவும் கருத வில்லையே'' என் இரங்குவார். 'ஆதலினு லன்றோ புதல்வரைப் பெறு-தல் என்று தலைப்பிடுகின்றார்'' என்று எடுத்துக்காட்டுவர். பின்னும்,

''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற''

என்ற குறளுக்கு இவ்வழியே அன்றோ பரிமேலழகியாரும் உரை காண்கின்றனர் என அவர் உரையை ஓர் ஊன்று கோலாகக் கொள்-வர். ஆனால், அறிவறிந்த மக்கள் என்பதனை முன்னரே ஆராய்ந்து, ஆண் குழவி, பெண் குழவி என்ற இரண்டையும் அத் தொடர் குறிக்கும் என நம்மளவில் முடிவு கட்டினமையால், ''பெண் பிள்ளை பெறுவதும் பெரும் பேறே'', எனல் திருவள்ளுவர் கொள்கை என்பது ஒருதலை. புதல்வரைப் பெறுதல் என்ற தலைப்பினைப் பற்றி உறுதியாக அவர்கள் கூறுவது போல ஒன்றும் கூறமுடியாது. புதல்வர் என்ற சொல், புதல்வனையும் புதல்வியையும் குறிக்கும் பலர்பாற் சொல் ஆதலின், பெண் குழவியைத் திருவள்ளுவர் ''யாண்டு இழித்துரைத்-தனர்?' என வினவுவர் ஒரு சாரார். மற்றொரு சாரார், புதல்வர் என்ற சொல்லே திருவள்ளுவர் நூலில் பயின்று வரவில்லை என்பதனையும்' 'மக்கட் பேறு' என்ற தொடரே ''பெறுமவற்றுள்'' என்ற குறளினும்,

''மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு''

என்ற குறளினும் பயின்று வருகின்றது என்பதனையும், மக்கள் என்ற சொல்லையே யாண்டும் வள்ளுவர் பயன் படுத்துகின்றார் என்பதனையும் வற்புறுத்துகின்றனர். திருவள்ளுவர் கூறுகின்ற மற்றைய தலைப் புக்கள் தொகைச் சொற்புணர்ந்து வரும் செறிவெனும் பண்போடு திகழப் ''புதல்வரைப் பெறுதல்'' என்பது உரை நடை போல நெகிழ்ந்து ஒலித்தலையும் எடுத்துக்காட்டுகின்றனர், சிற் சில ஏடுகளில் மக்கட்பேறு என்றே இத்தலைப்பும் காணப்படுகின்றதாம். எனவே, புதல்வரைப் பெறுதல் என்பது 'மக்கட்பேறு' என்ற அத் தலைப்புக்கு உரையாளர்கள் எழுதிய விளக்கமாதல் வேண்டும் என்றும், ஏடெழுது வார் விளக்கத்தினை முன்னும், தலைப்பினைப் பின்னும் எழுதவே விளக்-கமே தலைப்பாக எங்கும் பரவிய தென்றும் முடிவு கட்டுகின்றனர். தலைப்பு எவ்வாறாயினும், அவருடைய குறட்பாக்களில் காணக்கிடக்கும் தொடர் 'மக்கட்பேறே' ஆதலின், பெண்ணுக்கும் ஆணுக்கும் வேற்-றுமை பாராட்டுகின்றார் என்பது எவ்வகையாலும் பொருந்தாது.

**ஆண்மேல் வைத்துக் கூறல்**

சில குறள்கள், மக்கள் நலத்தை ஆண்பால்மேல் வைத்துக்

கூறுகின்றனவேனும், அவை பெண்பாலார்க்கும் பொருந்தும். சான்றோன் எனக் கேட்ட தாயும் இன்புறுவாள்; சான்றோள் எனக் கேட்ட தாயும் இன்புறுவாள்.

''தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது,''

என்ற இடத்தில் மக்கள் என்று பொதுப்படக் கூறுகின்றார் வள்ளுவர். பரிமேலழகியாரும் பொதுப்படவே உரை கூறுகின்றார். இக் குறளில் கூறியபடி அறிவுடையோர் இன்புறுவது கண்டன்றோ ''ஈன்ற பொழுதின்'' என்றகுறளில் தாய் இன்புறுகின்றாள்? ஆதலின் சான்றாள் எனக் கேட்ட தாய் இன்புறுவது பரிமேலழகியாருக்கும் உடன்பாடே என்க.

'குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்''

''அமிழ்தினு மாற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்''

என்ற குறட்பாக்கள் ஆணுக்குத்தான் பொருந்தும் என்போமா! பெண்ணுக்குத்தான் பொருந்தும் என்போமா?

அறிவுடைய நம்பி

இக் குறளை ஒட்டிப் பாடிய பாண்டியன் அறிவுடைய நம்பியும் பொதுவாகவே பாடுகின்றாள்.

''படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே''

என வருதல் காண்க.

புகழேந்தி

பின் வந்த புகழேந்தியார் நளனுக்குப் பிறந்த ஆண்குழவி, பெண்குழவி, என்ற இரு குழவியினையும் பற்றிப் பாடும்பொழுது, இக் குறட்பாக்கள் இருபாலார்க்கும் பொது என உட்கொண்டு,

''பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ — இன்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.''

''சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்

என்ன பயனுடைத்தா மின்முகத்து — முன்னர்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி''

எனத் திருவள்ளுவரது கருத்தைப் பொன்னே போலப் பொதிந்து வைத்துத் தேனென இனிக்கப் பாடுகின்றார். புகழேந்தியார். இங்கும் மக்கள் என' பொதுவாகத்தான் கூறுகின்றார்; பிள்ளைபெற்றதைக் கூறுமிடத்திலும் ''ஈன்றாள் குழவி இரண்டு'' என்றுதான் பாடுகின்றார். பின், அவர் பாட்டுப் பெண்குழவிக்கும் ஏற்புடைத்தாவது எங்ஙனம்? பின்னே, கலி நீங்கு காண்டத்தில் தமயந்தியின் தந்தையூருக்கு அவளது இரண்டாவது திருமணத்திற்காக (நளன் மடையனாய்) வந்தபோது அவனை நளனென்றறியுமாறு தன் மக்களை அவனிடம் தமயந்தி அனுப்புகின்ற செய்தியைப் பாடுகின்ற இடத்தில் விளக்குகின்றார்;

''கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதி யரச னருகாகப் — போத
விளையாட விட்டவன்றன் மேற்செயனு டென்றாள்
வளையாடுங் கையாள் மதித்து.''

பின், அவர்களைக் கண்டு அரசன் அழுது நின்றதைக் கேட்ட தமயந்தி படும்பாட்டைப் பாடும்போதும் நளனுக்கு ஒரு பெண்ணும் ஓர் ஆண் குழவியும் இருந்தனர் என்பதை விளக்குகின்றார்.

''கொற்றக் குமரனையுங் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்றா னுங்குரைத்த வாசகத்தை — முற்று
மொழிந்தார்கள் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது''

என்பதும் காண்க. உணர்வில் வல்ல பெரும்பாவாணர் எல்லாம் திருவள்ளுவர் மக்களைப் பற்றிப் புனைந்துரைக்கின்ற பாடல்கள் பெண் குழந்தைகளுக்கும் ஏற்றன என்றே அவற்றிற்குப் பொருள் கொள்கின்றனர் என்பது வெள்ளிடைமலை.

### ஆண்மையும் பெண்மையும்

மற்றொரு குறளை எடுத்துக்காட்டி மன்றாடுவார் ஒரு சிலர்.

''பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து''

என்ற குறளில் பெண்ணை இழித்துக்கூறும் குறிப்பில்லையோ? ''ஆண் பிறவியே உயரியது; பெண் பிறவியே இழிந்தது. எனவே, பெண்ணை ஆண் ஆளுதல் வேண்டும். ஆனல், பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மகன், பெண்ணையாளும் பெருமையின்றி இழிவடைந்

தன்மையால், அவனது ஆண்மையைவிடப் பெண்மையே பெருமை யுடையது.'' ஈதே இக்குறளின் பொருளென்பர். ''பெண்வழிச் சேறல்'' என்பதற்கு, 'பெண்களின் உயிர்ப்பண்புகளை நாடி அற வழியே செல்லாது இணை விழைச்சினையே விழைந்து கண்மூடி அவர் களது உடற்பண்பாகிய பெண்மை ஒன்றினையே விரும்பிச் செல்லு தல்'' என்பதே பொருள் எனக் கண்டோம். ஆதலின், அவ்விடத் தில் ஆளுதலும், அடிமையாதலும் இல்லை என்க. பெண்கணேவல் செய்பவன். அறமல்லன செய்தலினா லன்றோ இகழப்படுகின்றான்? இவன் அறமல்லன செய்தல் எதனாலோ? பெண்மைக்கு அடிமையாய்ப் பெருமையை மறந்து அவள் கால்ால் இட்ட வேலையைத் தலையால் செய்தலினா லன்றோ? ''இவன் அறமல்லன புரிந்தொழுகுதல் அவளே வலால் ஆதலின், அவற்றைச் செய்யத்தூண்டும் அவளன்றோ இவனினும் கொடியவள்?' என்ற ஐயம் எழுகின்றது. இவ்வாறு பிறர் மேல் பழி ஏற்றிப் போவதைத் தடுக்கின்றார் வள்ளுவர்; இவன் கொடி யன்; அவள் அத்துணை இழியுடையவள் அல்லள் என்கின்றார். தனக்கு வேண்டுவன அறமல்லன என்றறிந்த போது அவற்றைத் தானே செய்ய அவள் முந்துவதில்லை அன்றோ! அவளது நாணம் அவளைத் தடுக்கின்றது; ஆனால், தன் மணாளனைக்கொண்டு முடித்துக்கொள் கின்றாள். அவளோ தனது நாணை மறவாதிருக்க, இவன் தனது நாணை மறந்து அவளேவல் செய்தொழுகுகின்றான். ஆதலினால், பழி யுடைய இவ்விருவரில் நாணமிலா இவனினும், நாணமுடைய அவளே பெருமையுடையவள் என நாணத்தைப் புகழ்கின்றார் வள்ளுவர். இந்தத் திருக்குறளில், திருவள்ளுவர், பெண்ணேவல் செய்தொழுகும் பேதையினைக் குறித்தும், இவனிடம் வேலை வாங்கும் பெண்ணைப் பற்றியும், பேசுகின்றாரே அன்றி உலகத்துப் பெண்களைப் பற்றிப் பேசுகின்றார் அல்லர். இதற்கு,

''நாணின்றித் தன் இல்லாளது ஏவற்றொழிலைச் செய்து திரி கின்றவனது ஆண்டன்மையின் நாணினையுடைய அவள் பெண் தன் மையே மேம்பாடுடைத்து'' என்று கூறி,

''ஏவல் செய்வித்துக்கோடற் சிறப்புத் தோன்றப் பெண்ணைப் பிரித்துக் கூறுகின்றார்'' என உரைநுட்பம் காட்டுகின்றார் பரிமேல ழகியார். இவ்வுரையும் நாம் கூறிவருவதை வற்புறுத்தல் காண்க.

## முடிவு

பெண்கள் புத்தேளிர் உலகில் பெருஞ்சிறப்புப் பெறுவர். என்பதனையும் வீடு பெறும் நீத்தார் பெருமையும் அவர்களுக்கு எளி தில் கைகூடும் என்பதனையும் எடுத்துரைத்த திருவள்ளுவனார் பெண்

களை இகழவும் செய்யார்; உயர்நிலையடையார் என்றும் உரையார்; பெண்பிறவியே உயர்ந்த பிறவி என்றும், உயர்நிலையடைதற்குத்தக்க பிறவி என்றும் அதன் பெருமையினைக் கூறியதோடு தகுதியினையும் எடுத்துக்காட்டி, உயர்ந்த பிறவியில் எல்லாம் உயர்ந்தது அப்பிறவி எனத் தம் கொள்கையை விளக்கி வைக்கின்றார்.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்.

## 8. தொகுப்புரை

''பெண்களுக்கு, உடல்வலியும், மனவலியும், அறிவு வலியும் இல்லையாதலின் அவர்களது கற்பினைக் காக்க வேண்டுமானால், வீட்டில் பூட்டிவைத்தல் வேண்டும் என்ற கொள்கையை மறுக்கின்றார் வள்ளுவர்; அவர்கள் மெல்லியலார் ஆனாலும், மனத்திண்ணியரே என எடுத்துக் காட்டுகின்றார்; கல்வி அறிவு முதலியவை பெண்களுக்கும் உரியன என்பது தோன்ற அவற்றைப் புகழ்கின்றார்; உலகின் நன்மைக்கெனப் பிள்ளை பெறும் அறிவிற் சிறந்த தமிழ்த்தாயைப் புனைந்துரைக்கின்றார்; வீட்டிலடைப்பதனைச் சிறை என இழித்துக் கூறிச் ''சிறை காக்கும் காப்பெவன் செய்யும்'' என்று வினவுகின்றார்; பெண்களோடு கூடி வாழ்வார், அறம்வழிச் செல்லுவதில்லை என்பதனையும் மறுத்துரையாடுகின்றார்; இல்லறத்திலேயே நின்று வேளாண்மையும் நோன்பும் மேற்கொண்டொழுகி இயற்கைத் துறவியாய் மெய்யுணர்தலையே புகழ்கின்றார்; மண்ணோடும் பொன்னோடும் வைத்துப் பெண்ணையும் பொருளென ஒருங்கெண்ணிப் பெண்களைத் துறத்தலே துறவெனப் பின்னவர் கூறுவதுபோல இப் பெரியார் எங்கும் கூறவில்லை. ''அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'' என முடிவு செய்கின்றார்; பெண்களுக்கென ஓர் உரிமையும் இல்லை என்பதனையும் ஒரு சிறிதும் உடன்படுகின்றார் இல்லை; இன்பத்தில் எல்லா உரிமையும் ஏழைப் பெண்ணுக்கும் உண்டெனப் பாடுகின்றார்; அன்பன்றி வேறொன்றிற்கும் அடிமையாதல் அந்நிலையில் இல்லை எனச் சிறப்பிக்கின்றார்; பெரியோருக்கு அஞ்சியோ, பொருளை அவாவியோ மணத்தல் பிணமுயக்கே என இழிவு கூறுகின்றார்; வரைவின் மகளிரால் பலபழியும் சூழ்தலை இக்காலத்திற்கு ஏற்ப எடுத்துக்காட்டுகின்றார்; பரத்தையர் பிரிவே கூறாது, நாணம் சிறந்தற்குப் புலவி நுணுக்கம் என்ற புதியதோர் இன்பவழியில் மக்களைப் புகுத்துகின்றார்; ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கொருவன் என்ற தமது மரபினை நிலை நாட்டுகின்றார்; அறத்தால் வருவதே இன்பம் என்பதை வற்புறுத்துகின்றார்; இன்பத்துப்பாலில் உலகியலே கூறுகின்றார்; அறத்

லும் பொருளை எல்லாம் பெண் கையில் கொடுத்துவிடுகின்றார்; ஆட ன் அங்கத் துணையாகிப் பின்நிற்க, அவளே இல்லறத்தைத் திறம் ட நடத்தி அவனையும் நல்வழிப்படுத்துவதைக் காட்டுகின்றார்; உடற் ண்பாகிய பெண்மை நயந்து இணைவிழைச்சு ஒன்றே விழைந்து அற ம் பொருளும் கருதாது அவளுக்கு அஞ்சி ஏவல்செய்தொழுகுவதைக் டிகின்றார்; அன்பு பூண்டொழுகி, அறமும் பொருளும் கருதி அவ து உயிர்ப்பண்புகளை உலகு இன்பமுறப் பொலியச் செய்து, அவளது பண்மையையும் உணர்ந்து துய்த்து, அவளை அணைவதையே அற மன்றும், இன்பமென்றும் புகழ்கின்றார். அவளைக் காதற் கழிவிடமாக் ாது, பெருமைக்கும், புகழிற்கும், அன்பிற்கும், அறிவிற்கும், இன்பத் திற்கும் இருப்பிடமாக்குகின்றார்; பொருளினும், ஆணுக்கு உள்ள உரிமை பெண்ணுக்கும் உண்டு என்பதனை வெளிப்படையாக எடுத்துக் உறுமாறு, அக் காலத்தில் அதனை மறுத்து நின்றார் இல்லை போலும்; ஆனால், ஆண்பாலார்க்கும் பெண்பாலார்க்கும் ஒத்த வகையில்தான், உலக நடையைப் பொருட்பாலில் அவர் கூறிப் போகின்றார். அன்றி ம், வில்லேருழுவரைக் கீழ்ப்படுத்திச் சொல்லேருழவருக்கே ஏற்றம் காடுத்தமையால், படைக்கு அஞ்சிப் பள்ளியறை புகுந்த மகளிர், அறிவினை நாடி அம்பலம் புகுந்து, அவையத்தாரில் ஒருவராய்; அனைத்துலகும் இன்பமுற இனிதே உழைத்தருளி; உயர்நிலை பெறுமாறு அவர் அவர்களுக்கோர் ஏற்றம் தந்தருள்கின்றார். அவர்களுக்கெனப் பொருட்பாலைப் படையியலாக்காது அறிவியலாக்கிப் பண்டை முறையினை அவர் சீர்திருத்துகின்றார். எனவே, அறத்திலும், பொரு ிலும், இன்பத்திலும், வாழ்க்கைத் துணையாவாள் பெண்ணே என் து திருவள்ளுவரது முடிபு. பெண்கள் உயர்வதில்லை என்றும், பெண் றவியே இழிபிறவி என்றும் கூறுவாரது வாய்மொழி அனைத்தும் பாய்ம்மொழி என்று பொய்யாமொழியார் காட்டுகின்றார்; புத்தே நலகையும், செம்பொருளாய் நின்ற சிறப்பு நிலையாகிய நீத்தார் நிலை யயும் பெண்கள் எளிதில் அடையலாம் எனப் பாடுகின்றார். பெண் றப்பின் இத்தகைய பெருமையினையும், உயர்நிலை அடைதற்கேற்ற தன் தகுதியினையும் எடுத்துக்காட்டிப் பெண் பிறப்பினும் உயர்ந்த றப்பும் உண்டோ என்கிறார். ''பெண்ணிற் பெருந்தக்கயாவுள'' ன்பதே திருவள்ளுவர் காண்கின்ற உண்மை. காலத்தையும் கடந்த ருவருட்புலவர் ஆதலின் உண்மையினையும் உயர் நிலையினையும் உல ம் உள்ளளவும் போற்ற ஓதுகின்றார் என்பதே உறுதி.

''பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே - முப்பாலிற்

றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.''

''மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்முலை யொண்பால் - பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தோறு மூறு மறிவு.''

''இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல் - மன்பதைக்கட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.''

''அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு - குறும்பாவா
வள்ளுவனு ரேற்றினர் வையத்து வாழ்வார்கள்
உள்ளிரு ணீக்கும் விளக்கு.''